ஸ்ரீ

கம்பராமாயணக்கருப்பொருள்

மூலமும் உரையும்

ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்.

இஃது

சென்னை:

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1910.

Registered Copy-right.

3-2000.

ஸ்ரீ

முகவுரை.

இராமாயணக் கருப்பொருளென்னு நூல் கம்பர் செய்ததென்று சிலர் சொல்லுகிறார்கள்; அது அவ்வளவாய் நம்பக்கூடியதென்று தோன்றவில்லை. எனெனில், கம்பர்செய்த நூல்களின் வரிசையில் இது எழுதப்பட்டிருக்கவில்லை; நடையும் அவ்வளவு சிறந்ததாகக் காணப்படவில்லை. கதைகளிற் சில கம்பராமாயணத்திற் சொல்லியபடி யிராமல், மாறு பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட காரணங்களால் அது சந்தேகத்திற் கிடமாயிருக்கின்றது. இதுநிற்க.

கம்பருடைய சரித்திரத்தை, விநோதரசமஞ்சரி முதலான நூல்களில் பரக்கக் காணலாம். அவர் சோழநாட்டிலுள்ள தேரழுந்தூரில் ஓச்சர் குலத்திற் பிறந்தவர். சடையப்ப முதலியாரிடத்தில் அவர்மகனுக்குப் பள்ளித்துணையாயிருந்து, கல்வி கற்றவர். பின்பு சரஸ்வதியம்மை கடாக்ஷத்தால் கல்வி மிகுந்து, மஹாகவியாகி, மேற்படி முதலியாருடைய வேண்டுகோளின்படி இராமாயணஞ்செய்து சீரங்கத்தில் அரங்கேற்றிச் சாத்துகவி பெற்றுப் பின்பு குலோத்துங்கசோழமஹாராஜனுடைய சபையிற் பிரசங்கித்த கவிகளில் ஒப்பற்றவரென்று யாவராலும் புகழப்பட்டு நின்றவர். வைஷ்ணவ மதஸ்தர். இவ்வளவு சரித்திரம் பொதுவாகவும், சாரமாகவும் இருக்கின்றது.

LIFE OF KAMBER*

KAMBER was the most eminent poet of his age. He was the son of King of *Kambanadu*, a district in the Carnatic, His mother when pregnant of him was forced to flee in disguise in consequence of a rebellion, in which her husband was assassinated, and to take refuge in the house of an *Ochchen* † at *Tiruvalundur*, where he was born. Under the hospitable roof of the *Ochchen* he remained until his seventh year, when a wealthy farmer of the name of SADEIYEN, who lived at *Vennei Nellur*, having been informed of the circumstances of his case, invited him and his mother over to his village, and placing them in a house, which he had prepared for them, supplied them with all necessaries. He also carefully watched over the studies of his protege, whose superior genius developed itself even in his childhood. The young poet, it is said, would not compose a stanza for less than the reward of a thousand *pons*‡. His fame reaching the ears of RAJENDRA CHOLA, that king invited him to *Ureiur* and appointed him as one of the poets of his court, conferring on him at the same time the title of *Kavi Chakravarti*, or the king of poets. The *Ramayana* being in Sanskrit, KAMBER, OTTEIKUTER, and several others of the court poets, separately undertook to

* This Life has been extracted from a certain old publication, which is now extinct.

† One of the *Kudi-makkels* or village servants whose particular duty it is to offer Sacrifice to the goddess *Pidari* for the villagers.

‡ a coin, valued at Rs. 3-8-0.

imitate it in Tamil. When their imitations were finished, they were recited in the presence of KULOTUNGA CHOLA, who had succeeded RAJENDRA CHOLA on the throne. This king preferred Kamber's imitation above the rest, being of opinion that it was not only sublime in style and sense, but that it approached nearest to the original. It was then by the king's order submitted to the judgment of the learned assembly of *Brahmans* at *Srirangam*, who although they fully approved of the work, nevertheless strenuously objected to the praise bestowed by Kamber on his patron SADEIYEN in every hundredth stanza of the poem, and which he did upon the request of his mother*. They said that human praise should not be mixed up with the divine; but on his representing to them the necessity of his paying at least some tribute to his patron, they allowed him to confine his praises to every thousandth stanza. Overjoyed at the concession, he rose up in the midst of the assembly, and said, "I considered my patron as one in a hundred, but this learned assembly has considered him as one in a thousand." The *Brahmans* admiring his wit bestowed on him the title of *Maha-Kavi*, or the great poet, and he in return complimented them with a centum of verses, expressive of his veneration for *Sadagopa Azhwar*, one of the *Vaishnava* saints. VARAGUNA PANDIYEN, the king of Madura, having heard of him about this time, invited him to his court. He there composed the *Sarasvati Antadi* (சரஸ்வதியந்தாதி,) a poem in thirty stanzas in praise of *Sarasvati*, the

* See *Ratnasabapathy Malei*, verse 26.

goddess of poetry, which obtained for him great honors, and munificent presents, from that king.

Kamber's *Ramayanam* consists of 12,016 stanzas, arranged in five books. In one of the commendatory stanzas which is prefixed to the work the year of *Saka* 808 (A. D. 886) is specified as the date of its publication by Kamber; but this date is considered to be incorrect, from the evidence of certain inscriptions found at Cape Comorin, and in the old Chalukya country, according to which the *Chola* kings who patronized Kamber lived only in the eleventh century of the Christian era.

Other works ascribed to Kamber are the *Kanji Puranum* (கஞ்சிப்புராணம்), *Kanji Pilleitamil* (கஞ்சிப் பிள்ளைத்தமிழ்), *Chola Kuravanji* (சோழக் குறவஞ்சி), *Silei Yezhupadu* (சிலே யெழுபது) and *Ér-Yezhupadu* (ஏரெழுபது.) Their style and versification are worthy of the noble poet.

Less is known of Kamber's personal history than could be desired. All that we gather from traditions is, that the latter part of his life was a struggle between poverty, and ill-fortune. His son, AMBIKAPATI, who was likewise a poet at the court of KULOTUNGA CHOLA, having been carrying on an amorous intrigue with the king's daughter, and betraying it in one of his poetical effusions, was, by the king's command, impaled alive, * and he died after having lingered on the stake for a couple of days, repeating incessantly the subjoined verse, in the midst of his sufferings.—

* See *Jayankondan Sadayam.*

எரியுதெரியுதென்னுள்ளே
யெரியுதமருதில்லையென்செய்வேன்
நஞ்சிலேதோய்ந்தகளினவிழிப்பெண்ணணங்கு
நெஞ்சியிலேயிட்டநெருப்பு.

What can I do? The fire which the divine damsel with venomed eyes has kindled in my heart burns within me, it burns, yea it burns without extinguishing.

Kamber was so overwhelmed with grief at this sad event, that he discontinued attending on the king, and confined himself entirely to his house. Whilst in this state of mind, the king's son, who was returning from school, having taken refuge in his house from a fierce elephant, which was at large in the street, he snatched the style which the prince held in his hand and with it stabbed and killed him on the spot. The king immediately ordered Kamber to be brought up, and shot at him with an arrow; but the wound not proving mortal, and through some intervention which is not stated, he effected his escape into the *Pandiyen* country. He has commemorated this event in the following impromptu:—

வில்லம்புசொல்லம்புமேதினியிலிரண்டுண்டு
வில்லம்புசொல்லம்பைவெல்லாது—வில்லம்பு
பட்டுதடாவென்மார்பிற்பார்வேந்தேயுன்னினையைச்
சுட்டுதடாவென்வாயிற்சொல்.

There are two kinds of arrows on earth, of which one is shot out from the bow, and the other from the mouth. O king! thine arrow from the bow has hit my breast, but mine, the word of my mouth, has burnt up thy race.

After his flight from the Chola Court, he is said to have lost his poetical inspiration, and being reduced to poverty, was obliged to support himself by daily

labour. * He died in the sixtieth year of his age, at *Nattarasenkottei,* in the Ramnad country, and was buried there. It is said that his grave now forms an object of pilgrimage amongst the Hindus, and that the earth taken from it is given to children who are dull-headed, from a belief it would sharpen their intellect.

When the intelligence of his death reached the ears of OTTEIKUTUR, who was always his rival when alive, he is said to have expressed his sorrow and lamentation in the followiug impromptu:—

இன்றைக்கோகம்பனிறந்தாளிப்புவியி
லின்றைக்கோவென்கவிதையேற்குநாள்—இன்றைக்கோ
பூமடந்தைவாழப்பொறைமடந்தைவீற்றிருக்க
காமடந்தைதூலிழந்தாள்.

Is it to-day that Kamber has died ?
Is it to-day that he aecepts my elegiac lay ?
Is it to-day that Sarasvati has been widowed ?
Whilst Lakshmi is blooming and Parvati is sitting in majesty.

There is a tradition that Kamber once visited a certain king of Ceylon, and that the king was so charmed with his poetry that he was treated with unusual affability, so much so, that the Court poets became jealous of him and formed a plot to keep him at a distance from the palace, by bribing a barber to claim relationship with him; but he soon found means to expose their artifices and they had the mortification to see him afterwards even honoured with a seat on the throne by the side of the king. We cannot, however, vouch for the truth of this tradition; but the

* See *Jayankondan Sadagam,* verse, 11.

following stanza in praise of *Sarasvati*, which is generally attributed to him is said to refer to it:

வெள்ளைக்கலையுடுத்தவெள்ளைப்புனிதூண்டு.
வெள்ளைக்கமலத்தில்வீற்றிருப்பாள்—வெள்ளை
யரியாசனத்திலரசோடொன்னைச்
சரியாகவைத்திருந்ததாய்.

It is my mother who sits in majesty on the white lotus, robed in white garments and adorned with white ornaments, that gave me an equal seat with the king on the throne, borne by the white lion.

Once a dancing girl, named CHILAMBI, woh lived at Ambel, asked the poet KUMBER to compose a verse on her, giving him 500 *pons* for it, but as he never composed a stanza on any one for less than 1000 *pons*, he scribbled these first two lines of a stanza on the wall of her house with charcoal and went away.

தண்ணீருங்காவேரி தார்வேந்தரிற்சோழன்
மண்ணுவதுஞ்சோழ மண்டலமே—பெண்ணுவாள்.

Immediately afterwards Auveiyar happening to call at the dancing girl's house and being informed of the affair, added the two following lines to the unfinished stanza of KAMBER, accepting as a reward merely a cup of pap.

அம்பற்சிலம்பி யரிவித்தத்தாளணியுஞ்
செம்பொற்சிலம்பே சிலம்பு.

The following is the translation of the above stanza:—

The best of rivers is the Kaveri, *the best of kings is Chola,*
The best of lands is Cholamandalam, the best women,
Is Chilambi *of Ambel,*
And the best of chilambu *is the gold* chilambu *on her lotus-feet.*

வ

சுபமஸ்து.

கம்பராமாயணக்கிருப்பொருள்

மூலமும் உண்மையும்.

கம்பராமாயணக் கருப்பொருள் கம்பகர்ட்டார் செய்தது என்று சிலர் சொல்லுகின்றார்கள்.

இராமாயணத்தின் கருவாகிய பொருளை உணர்த்தலால் இராமாயணக் கருப்பொருள் என்னும் பெயர்பெற்றது.

கம்பராமாயணக் கருப்பொருள் — பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; இராமாயணச்சுருக்கம் என்பது இரண்டாம்பொருள். ராமாயணம் என்பது வடமொழியில் ராம அயந என்கிற இரண்டும் செயப்படுபொருள் காட்டும் ஆறாம்வேற்றுமைத் தொகைகளிலத்தொடராய் வழங்குவதோர் சொல். ராம என்பது தன்குணங்களால் யாவரையும் களிப்பிக்கின்றவன் என்கிற பொருள் உடையதாய் திருமாலின் ஓர் அவதாரப்பெயராய் வழங்குகின்றது என்றால், சகல நற்குணங்களையு முடையவன் என்பதாம். அயநம் என்பது கருவிப்பொருள்விகுதி பெற்ற பெயராய் அறிவிப்பது எனப் பொருள்படும்; ஆதலால் இராமனை அறிவிப்பதோர் நூல் என்றதாயிற்று. இது நூற்பெயர் ஆதலால் நகரம் ணகரமாயிற்று. "முதனூல் கருத்தன் அளவு மிகுதி" என்னுஞ் சூத்திரவிதிப்படி இம் முதனூற்பெயர் கம்பர்செய்த வழிநூலுக்கு ஆயிற்று.

ஆஞ்சனேயர் காப்பு.

அஞ்சிலே யொன்றுபெற்ற
னஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றுருக
வாரியற் காகவேகி,
அஞ்சிலே யொன்றுபெற்ற
வணங்கைக்கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தா
னவனெம்மை யளித்துக்காப்பான்.

(இ - ள்.) அஞ்சிலே ஒன்றுபெற்றான் - பஞ்சபூதங்களில் ஒன்றாகிய வாயு பெற்றவனும், அஞ்சிலே ஒன்று ஆக - பஞ்சபூதங்களில் ஒன்றாகிய ஆகாசம் வழியாக, அஞ்சிலே ஒன்றைத்தாவி - பஞ்சபூதங்களில் ஒன்றாகிய நீர் நிறைந்த கடலைத் தாண்டி, ஆரியற்காகவேகி - யாவராலும் பூசிக்கத்தக்க இராமனுக்காகச்சென்று, அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக்கண்டு - பஞ்சபூதங்களில் ஒன்றாகிய பூமிதேவிபெற்ற சீதாபிராட்டியைக்கண்டு, அயலாரூரில் அஞ்சிலே ஒன்றைவைத்தான் - சத்துருக்களுடைய ஊரில் [இலங்கையில்] பஞ்சபூதங்களில் ஒன்றாகிய தீயைவைத்துக் கொளுத்தினவனும் ஆகிய, அவன் - அந்த அநுமான், எம்மை அளித்துக்காப்பான் - எங்களைக் கிருபைசெய்து இரக்ஷிக்கக்கடவன்.

கட்டளைக்குத் தன்னைத் துதிப்பதினும் தன்னடியாரைத் துதிப்பது திருவுள்ளம் என்பதுபற்றி அநுமான்துதி முதலில் கூறப்பட்டது.

நூல்வரலாறு.

அயோத்திமாநகரின் பக்கத்தில், தமசை என்னும் நதிக்கரையில் தவம் செய்துகொண்டிருந்த வான்மீகிமுனிவர், ஒரு நாட் காலையில் நீராடப் போம்போது ஒருமரத்தில் ஆணும் பெண்ணுமாய்க் கூடியிருந்த இரண்டு அன்றிற் பறவைகளில்

ஆண்பறவையை ஓர் வேடன் அம்பாலடித்து வீழ்த்தக்கண்டு, சோகமுற்றவராய் அவனைநோக்கி "வேட! நீ காமம் கொண்டிருந்த இப்பறவையைக் கொன்றதனால் நெடுங்காலம் வாழாதிருக்கக் கடவை" என்று சொல்ல. அது ஒரு சுலோகமாய் அவர்வாயில் தற்செயலாய் அமைந்தது. அவர் பின்னும் யோசிக்கையில் "ஓ திருமகள் நாயகனே! காமாதுரனை ஒரு இராக்கதனைக் கொன்றதனால் பல்லாண்டு பல்லாண்டாய் வாழக் கடவை"-என்னும் பொருளும் அதில் அமைந்திருந்தது. பின்பு அம்முனிவர் "நீராடல்" முதலிய சடங்குகளை முடித்து இந்தச் சுலோகத்தைச் சிந்தித்துக்கொண்டே தம் தாச்சிரமத்துக்கு எழுந்தருளினர். உடனே பிரமதேவர் அவ்வாச்சிரமத்துக்கு எழுந்தருள, இம்முனிவர் அவர்க்கு வந்தனை வழிபாடுகள்செய்து தமக்குற்ற அதிசயத்தை விண்ணப்பம்செய்ய, அவர் "ஆம் முனிவரே! ஸ்ரீராமபிரான் சரித்திரத்தை ஓர் காவியமாகச்செய்து உலகத்தில் விளங்குவிக்க வேண்டுமென்று சரஸ்வதி உமதுவாக்கில் தோன்றினாள். இந்தப்படியே செய்யக்கடவீர். அந்தச் சரித்திரத்தில் இரகசியமும் வெளிப்படையும் ஆன சகலமும் உமது புத்தியில் தோன்றும்" என்று அனுக்கிரகித்துத் தம்முலகத்துக் கெழுந்தருளினர். பின்பு வான்மீகிமுனிவர் நான்முகக்கடவுளின் கட்டளைப்படி இராமாயணமென்னு மோர்காவியத்தைச்செய்து முடித்தனர். அது கீர்வாணபாஷையில் இருப்பதால் தமிழ் கற்றோருக்கும் உபயோகப் படவேண்டுமென்று திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரது வேண்டுகோளின்படிப் புலவர்திலகரான கம்பர் பன்னீராயிரம் விருத்தப் பாடல்களால் தமிழிற் பாடினர்.

I பாலகாண்டம்.

நூல்.

நாடுகோசலை நாடுமா நதிபுனற் சரயு
ஆடுதிண்கொடி யயோத்திமா நகரதற் கிறைவன்
தேடுவண்புகழ்த் தயரதன் தேவியர் முதன்மை
சூடுகோசலை கைகெயி சுமித்திரை யென்பார்.

(இதன்பொருள்.) நாடு:(இக்கதைக்கு) நாடு, கோசலை-கோசலம் என்னும் பெயருள்ளது; நாடுமாநதி - (யாவரும்) விரும்பத்தக்க பெருமையான நதி, புனல் - நீர்வளப்பமுள்ள, சரயு - சரயு என்பது; மாநகர் - மேன்மையுள்ள நகரமானது, ஆடு - (காற்புறமும்) அசைகின்ற, திண் - (பகைவராற் பறிக்க ஒண்ணாத) வலியுள்ள, கொடி - துவசமுடைய, அயோத்தி - அயோத்தி என்பது; அதற்கு - அந்நகரத்திற்கு, இறைவன் - அதிபதி, வண்புகழ் - வளமையான கீர்த்தியை, தேடு - சம்பாதித்த, தயரதன் - தசரதன் என்பவன்; தேவியார் - (அவன்) தேவிமார், முதன்மை - பட்டமகிஷித்தன்மையை, சூடு - (ஆசனே) டஷியப்பெற்ற, கோசலை - கௌசலியையும், கைகெயி - கைகேயியும், சுமித்திரை - சுமித்திரையும், என்பார் - என்று-சொல்லப்பட்டவர்களாம்.

- கோசலமென்னும் நாட்டிலே சரயூ நதிக்கரையில் அயோத்தியென்பதோர் நகரமுண்டு; அந்நகரத்தை ஆள்பவன் தசரதராஜர்; அவனுக்குப் பத்தினிமார் கௌசலியை, கைகேயி, சுமித்திரை என்னும் மூவர் முக்கியமானவர்கள்.

"கோசலம்—வட்சொல்; இது க உ சில எனப் பிரிக்கப்பட்டுப் பிரமனும் உல்லாசப்படத் தக்கது என்னும் பெருமை தரும். இதனுல் அந்நாடு எல்லா வளமும் முடையதாய்க் காட்சிக்கும் வாசத்துக்கும் தகுதியான திறமுடையது என்று நாட்டில் சிறப்பு கூறியதாயிற்று. இவ்வடசொல் அகரவீற்ற தாஞலும் குசை, சரிதை, சாமரை என்பனபோல் தமிழில் ஐகார வீருகவும் வழங்குகின்றது. நாடுமாநதி

என்றதனால் நீர்ப்பெருமையும் குளிர்ச்சிமுதலிய சுகுணங்கள் பலவும் உடையதென ஆற்றின் சிறப்பு கூறியதாயிற்று, புனல் என்பது எக்காலத்தும் வற்றுத நீரோட்ட முடைய தென்பதைக் குறிக்கின்றது. ஸ்ரயு—ஸ்ரஸ் யு என இரண்டாய்ப் பிரிக்கப்பட்டு மானச சரசினின்றும் ஓடி வருகின்றதென்னும் பொருள்பட்டு அதன் புனிதத்தைச் சிறப்பிக்கின்றது. ஆடுதின்னி தொடி—நாற்றிசையிலுமுள்ள மன்னர் ஒருங்கு எதிர்த்தாலும் வெல்லுதல் கூடாதென்று அரசன் பராக்கிரமத்தை எங்கும் விளக்க ஆடுகின்ற கொடி என்றார். அயோத்தி—அயோத்தியா என்னும் வடசொல்லின்திரிபு, சண்டை யிடுவதற்குக் கூடாததென்பது பொருள். இதனால் அகழி, மதில், ஆயுதம், சேனை முதலியவற்றால் தகுதியான காவலுள்ளது என நகரச் சிறப்பு கூறியதாயிற்று. மாநகர்—மா என்பது பெருமை, அதாவது "அயோத்தி, வடக்கில் உள்ள மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை" என்னும் முத்திதரும் நகரங்கள் ஏழில் முதன்மையா யிருப்ப தென்றதாம். தசரதன் என்பது தச ரத எனப் பிரித்து பத்துத் திக்கிலும் செல்ல வல்ல தேர் உடையவன் என்னும் பொருள் கொள்ளப்படும். இதனால் எங்கும் தடையின்றிச் செல்லவல்லவன் என்பதாயிற்று. இது இந்திரனைச் சிறையிட்ட சம்பராசுரனை வதைக்கும்பொருட்டு அவன் சென்ற இடமெல்லாம் சென்றமையால் விளங்கியது. இச்சொல்லுக்கு தச=பகுதி; ரத=வாகனம் என்று பொருள்கொள்ளின் கருடவாகனனான திருமாலுக்குப் பெயராகும். தெய்வப் பெயரை மனிதருக்கிடுவது பரிசுத்தம் என்கிற காரணத்தால் இவ்வரசனுக்கு அப்பெயர் இட்டு வழங்கியது என்று சொல்லலாம். முதன்மைகூடி—முதல் தாரமாய்ப் பட்டம் பெற்றவள் என்று கோசலைக்கு விசேஷணம். அல்லது தசரதன் மற்றநேக மனைவியர்க்குள் இவர்கள் பிரதானமானவர்கள் என்று மூவர்க்கும் விசேஷணமாக்கினும் பொருந்தும். கோசலை—கௌசலியா என்பதின் திரிபு; கோசலதேசத்தரசன் மகள் என்பது பொருள். கோச

லம் உத்தரகோசலம் தக்ஷிணகோசலம் என் இரண்டு பிரி வுள்ளது. இவற்றுள் தக்ஷிணகோசலத் தரசன் மகளிவள். கைகேயி—கேகயராட்டரசன் மகள். சுமித்திரை—நல்ல மித் திரை யுடையவள்; இயற்கையில் நற்குணமுடைய ளன்றிச் செயற்கையிலு மப்படி யிருப்பவள் என்பது பொருள். இப் பாட்டு கெடிலடிகள்கு பெற்றமையால் கலிநிலைத்துறை யாம்.

நாடுமாநதி, ஆடுதிண்கொடி, தேடுவண்புகழ், சூடுகோசலை, இங்ஙன்கும் வினைத்தொகை நிலைத்தொடர்கள். (க)

மற்றுந்தேவியர றுபதினாயிரமடவார்
சொற்றமன்னவன் சுடர்புகழ்வேள்வியிகடெர்டங்கிப்
பெற்றணைந்தங்கள்பிறங்குவேலிராகவன்பரத
னெற்றுநீள் புயத்திலக்குவனிளையவனென்போர்:

(இ - ள்.) மற்றும் தேவியர் - அத்தசரதனுக்குக் கோசலை முதலிய மூவரே அன்றி; மற்றுமுள்ள மனைவியர், அறுபதினாயிர மடவார் - அறுபதினாயிரம் மடந்தையர்; சொற்ற-மூத் தோர் சொல்லிய, மன்னவன் - அத்தசரத சக்கிரவர்த்தி, சுடர் புகழ் வேள்விகள் - அக்கினி தேவனுல் புகழப்பட்ட யாகங் களை, தொடங்கி - ஆரம்பித்து (நிறைவேற்றி), பெற்ற மைந் தர்கள் - பெற்ற குமாரர்கள், பிறங்குவேல் - விளங்குகின்ற வேலாயுதத்தைத் தரித்த, இராகவன் - இராமன், பரதன்-பர தன், எற்று - பகைவனை வெல்லவல்ல, நீள் புயத்து - நீண்ட தோள்களையுடைய, இலக்குவன் - இலக்ஷ்மணன், இளையவன்- அவன் தம்பியாகிய சத்துருக்கனன், என்போர்-என்றுசொல் லப்பட்டவர்களாம்.

தசரதமகாராஜனுக்கு மூற்சொன்ன மூவர் தவிர அறுபதினா யிரம் மனைவிகளுண்டு. அவ்வரசன் அச்வமேதமும் புத்திர காமேஷ்டியும் ஆகிய யாகங்கள் செய்து இராமன் பரதன் இலக்ஷ்மணன் சத்துருக்கனன்-என்னும் நான்கு குமாரர்களைப் பெற்றான்.

அறுபதினாயிரம் என்றதற்குப் பலர் என்பது பொருள். வான்மீகிமுனிவர் முந்நூற்றைம்பதின்மர் என்று கூறியிருக்கின்றனர். மூவரே குலம் முதலிய பெருமையும் பட்டத்துக் குரிமையு முள்ளவர்கள். மற்றுமுள்ள பலர் ஒருவாறு குறைந்திருப்பார்கள். பரசுராமன், தன் தகப்பனாராகிய ஜமதக்கினி முனிவரைக் கார்த்தவீரியார்ச்சுனன் கொன்றதனால், சினங்கொண்டு அவனைக் கொன்றதுந் தவிர க்ஷத்திரிய வம்சத்தையுங் கருவறுக்கச் சங்கற்பித்துக் கொன்று வருகையில், விவாகஞ்செய்து கொள்பவர்களை சுபதினங்களில் கொல்வதில்லை என்று பிரதிக்ஞை செய்தமை யறிந்து, அவர் கைக்குத் தப்பும்படித் தொடர்ச்சியாய் விவாகஞ் செய்து கொண்டே வந்தார் அதனால், மனைவியர் பலர் ஆனார்கள். மடவார்=மடமையுடையவர்கள், இம்மடமை தன்னோடு சேர்ந்துள்ள அச்சம் நாணம் பயிர்ப்புக்கும் உபலக்ஷணம்; அன்றியும் மடமை=இளமை, அதனை யுடையார் தக்க ரூபலாவண்ணியமும் பருவமு முள்ளவர்கள் என்றும் சொல்லலாம். வேள்விகள்—தகாத சக்கிரவர்த்தி புத்திரனில்லாமல் வீசனப்பட்டுக்கொண்டிருக்க, சுமந்திரன் என்னும் மந்திரி பிரமசபையில் ஒருநாள் தசரதனைப் பற்றிப் பேசியபோது கலைக்கோட்டு முனிவனைக்கொண்டு யாகஞ் செய்ய, புத்திரர் பிறப்பார் என்று சொல்லக் கேட்டதாய் விண்ணப்பம் செய்தான். அவ்வரசன் அவ்வாறே வசிட்டர் கட்டளையால் கலைக்கோட்டு முனிவனை அழைத்து வந்து புத்திர காமேஷ்டியாகம் முடிக்க, அவ்வேள்வித் தீயினின்று ஓர் தேவபுருடன் தோன்றிப் பாயசமளிக்க, அதை மனைவியர் மூவர்க்கும் பகிர்ந்து கொடுக்க, கௌசலை இராமனையும், கைகேயி பரதனையும், சுமித்திரை இலக்ஷ்மண சத்துருக்கனர்களையும் பெற்றார்கள். வேள்வி முடிந்தபின் பெற்ற பயனைத் தொடங்கிப் பெற்றதாக மிக விளைவு கூறினமையின் இது ஓர்வகை அதிசயவணி. இராமன் கைப்பிடித்த ஆயுதம் ஜயம் தருவது துணிபாதலின் பிறவு குவீல் என்றார். இதை நால்வர்க்கும் கூட்டலாம். இராக

வன். இரகுமகாராஜன் வம்சத்தில் அவதரித்தவன். அவ்வரசன் தசரதனுக்கு மூத்தாரித. எல்லாத் தேசத்தையும் வென்று, விச்வஜித் என்னும் யாகத்தைச் செய்து எல்லாப்பொருளையும் வழங்கிவிட்டு வெறுங்கையனாய் இருக்கையில், கவுத்சன் என்னும் பிராமணன் தன் குருவான்கிய வரதந்து மகாமுனிவருக்குத் தக்ஷிணைக்காக யாசிக்கக் குபேரனிடத்திலிருந்து வேண்டும் பொருளை அழைப்பித்து அந்தக் கவுத்சருக்குக் கொடுத்தான். இவ்வாறு மிகுந்த வீரமும் கொண்டுள்ளவன்.

பரதன்—பிரம்ம பாரம்ர அதனை யுடையவன் 'பரதன்'; லௌகிக வைதிக காரியங்களை நிர்வகிக்க வல்லவன் என்பதை கருத்து. இராச்சிய பாரத்தை எம்பெருமான் திருவடிகளில் வைத்து ஆண்டவன் என்றும் கொள்ளலாம். எற்று நீன் பியத்தை என்பதை மத்திம தீபமாக்கிப் பிறங்குவே லென்பதைப்போல காலிவர்க்கும் விசேஷ்ண மாக்கலாம். இலக்குவன்— லக்ஷ்மணன் என்னும் வடசொல்லின் திரிபு; சுமித்ரா புத்ர லக்ஷ்மணஸ்ரீயை யுடையவன் என்பது பொருள். லக்ஷ்மி என்ற லக்ஷ்மணஸ்ரீயை யுடையவன் எனவும் கொள்ளலாம். சத்துருக்கனன்— இலக்ஷ்மணனுக்கு இளையவன்; புறப்பகையே யில்லாமல் உட்பகையாகிய காமாதிகளையும் வென்றவன் என்பது பொருள். மற்று—பிறிது என்னும் பொருள். தருமிக்கச் சொல். உம்—இறந்தது தழுவிய எச்ச உம்மை. தேவியர்—பெண்மை குறித்த பலர்பால்; தேவீ - வடமொழி, ஈகாரம் இகரமாய்க் குறுகி, அர்—விகுதி பெற்றது. சொற்ற—இறந்தகால பகுதி, அ - விகுதி, ற் - இறக்தகால விடைநிலை, ல் ற் ஆனது சந்தி; இன். இடைநிலை பெறுங்கால், சொல்லின சென்ன் என வழங்கும். மடவார், மைந்தர்—பண்படியாகப் பிறந்த பெயர்கள்.

சித்திரைமாதத்தில் நவமி புனர்வசு கூடிய நாளில் கர்க்கடக லக்கினத்தில் இராமனும், பூசம் கூடிய நாளில் மீன லக்கினத்தில் பரதனும், ஆயிலியத்தில் கர்க்கடக லக்கினத்

தில் இலக்ஷ்மணனும் சத்துருக்கனனும் இரட்டையராகவும் பிறந்தார்கள். (உ)

அன்னமன்னவ னரியணை மீதுவீற் றிருந்தான்,
இன்னமாநிலம் படைப்பனென் றவனியல் வேள்விக்,
குன்னன்மாமுனி விராமனைத் தருதியென் றுரைத்தான்,
மன்னர் மன்னவன் மறுத்தனன் வசிட்டனீ துரைத்தான்.

—(இ—ள்.) அன்ன மன்னவன்—அவ்வாறு புத்திரர்களைப் பெற்ற தசரதமகாராசன்; அரியணைமீது—சிங்காதனத்தின்மேல், வீற்றிருந்தான்—பெருமையோடிருந்தான்; (அப்போது) இன்னமாநிலம்—இவ்வுலகம்போன்ற பெரிய உலகங்களை, படைப்பனென்றவன்—வேறு சிருஷ்டிப்பே னென்று சொன்ன விசுவாமித்திர முனிவன், இயல்—(நான்) செய்யத் தொடங்கியுள்ள வேள்விக்கு—யாகத்தைக் (காப்பதற்கு), உன்—நல் மைந்தரில்—உன்னுடைய நற்குணமுள்ள குமாரர்களில், இராமனைத் தருதி என்று உரைத்தான்—இராமனைக் கொடு என்று கேட்டான்; மன்னர்மன்னவன் மறுத்தனன்—அரசர்க்கரசனாகிய தசரதன் (கொடேனென்று) மறுத்துச் சொன்னான்; வசிட்டன்—(அதுகண்டு) வசிட்டமுனிவன், ஈது உரைத்தான்—(பின்வரும்) இதைச் சொன்னான்.

தசரத சக்கிரவர்த்தி மக்கட்கு உபநயன முதலிய செய்ய சகல கலைகளும் கற்பித்து மகிழ்ந்து சிங்காதனத்தில் உட்கார்ந்திருக்கையில், விசுவாமித்திர முனிவன் எழுந்தருளி யான் செய்யும் யாகத்தை அரக்கரால் இடையூறு வாராமல் காப்பதற்கு உன் மூத்த மகனிராமனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்க, யான் காக்கின்றேன் சிறுவனை இராமனை அனுப்பு மீர்ட்டேனென்று மறுத்துச் சொல்ல, விசுவாமித்திரர் கண் சிவந்ததைக்கண்டு, வசிட்டமாமுனிவர் இராமன் மகிமையை யானறிவேன், தடைசொல்லாமல் அனுப்பு என்று தசரதனுக்குப் பலவிதமாகச் சொல்லலானார்.

சுபாகு மாரீசன் தாடகை முதலிய அரக்கரால் முனிவர் தவங்கட்கும் வேள்விகட்கும் இடையூறு உண்டானமையால் விசுவாமித்திரரும் இடர்ப்பட்டு அவ்வரக்கரை இராமனால் கொல்விக்க நினைத்து எழுந்தருளினர்.

அயோத்திக் கரசனான திரிசங்கு மகாராசன் சரீரத்தோடு சுவர்க்கமடையக் கருதிக் குருவை நிர்ப்பந்தித்து அவர் சாப த்தாற் புலையனாய் விசுவாமித்திரரை அடைக்கலம்புக, அவர் தம் தவப்பெருமையால் சரீரத்தோடு சுவர்க்கத்துக் கனுப்ப, தேவர் மறுத்ததனால் கோபங்கொண்டு வேறு சுவர்க்கம் முத லிய உலகங்களைச் சிருஷ்டிக்கத் தொடங்க, பிரமதேவன் வந்து அவர் சினத்தைத் தணித்துப் பிரமருஷி என்னும் பெய ரும் தொடுத்தார். இவர் காதி என்பவன் குமாரர். அரசனு யிருந்து வேட்டைக்குச் சென்றபோது வசிட்டர் தமது ஆச் சிரமத்தில் காமதேனுவைக் கொண்டு விருந்தளிக்க, அக்காம தேனுவைத் தான் கவரமுயன்றும் வசிட்டர் தவப்பெருமை யால் பங்கமடைந்து பின் தவம் செய்து இராஜரிஷியாய்ப் பிரமதேவ னருளால் பிரமருஷியுமானார்.

அன்ன, இன்ன, குறிப்புப் பெயரெச்சம்; னகரச்சாரியை பெற்ற சுட்டாகிய அன் இன் பகுதிகள்; அ - விகுதி. ன் இரட்டித்தது சந்தி. தருதி—முன்னிலை ஏவலொருமை வினை முற்று; தா - பகுதி, அது குறுக்கலும் ரு விரித்தலும் பெற்று, தரு என்றாய், இ-விகுதியும், த் - எழுத்துப் பேறும் பெற்று, தருதி என முடிந்தது. தி - விகுதி என்றும் கொள்ளலாம், இது ஈது என நீண்டது. (நூ)

மறுத்தியன்றென வுரைத்தலு மன்னர்கோன் முனி யைப், பொறுத்தியென்றவன் பொன்னடி சென்னி யிற்புனையா, வுறுத்தி மைந்தரை யளித்தலு முவந்து, மாமுனியும், கறுத்த செம்மலும் தம்பியுங் காடுசென் றடைந்தார்.

(இ-ள்.) மறுத்தி - தடுத்துச் சொல்லுகிறாய், அன்று-(இது தருதி) அன்று, என உரைத்தலும் - என்று (வசிட்ட முனிவர்)

உணர்த்தின வுடன், மன்னர்கோன் - (தசரத) சக்கிரவர்த்தி, முனியை - (விசுவாமித்திர) முனிவரைப் (பார்த்து), பொறுத்தி என்று - க்ஷமிக்க வேண்டுமென்று (விண்ணப்பஞ்செய்து), அவன் பொன்னடி சென்னியிற் பூணியா - அவ் விசுவாமித்திர முனிவர் திருவடியைச் சிரத்தில் அணிந்து, [தொழுது], மைத்தரை உறுத்தி அளித்தலும் - புத்திரரை அறிவுறுத்திக் கொடுத்தவுடன், உவந்து - மனமகிழ்ந்து, மாமுனியும் - பெருமை வுள்ள விசுவாமித்திர முனிவரும், கறுத்தசெம்மலும் தம்பியும் - கரிய திருமேனியுமுள்ள அரசனுகிய இராமனும் அவன் தம்பியாகிய இலக்ஷ்மணனும், சென்று - நடந்துபோய், காடு அடைந்தார் - கானகம் சேர்ந்தார்கள்.

குருவாகிய வசிட்டர், முனிவர் பெருமையையும் இராமன் பெருமையையும் பின்வரும் பேறுகளையும் தெரிய அரசனுக்குச் சொல்ல, அவன் மன்னுந்தேறி தான்மறுத்ததைப் பொறுத்தருளும்படி அவன் திருவடிகளைத்தொழுது, தன்குமாரரை அனுப்ப, மகிழ்ந்து முனியும் இராமலக்ஷ்மணர்களும் வனத்துக்குச்சென்றார்கள். முனிவர்க்குத் தங்காரியம் சித்தித்தலால் உவப்பு; இராமனுக்கும் தம்பிக்கும் வனத்தில் முனிவரைத் தரிசனம் செய்யவும், அரக்கரைக் கொல்லவும், வேள்விகர்க்கவும் நேரிடுதலால் உவப்பு.

மறுத்தி, பொறுத்தி,—முன்னிலை வினைமுற்று; தருதி என்பதுபோல்கொள்க. அன்று—எதிர்மறைக்குறிப்பு வினைமுற்று. பூணியா—செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். உணர்த்தலும், அளித்தலும்,—உம் - பிற்பொருள் தரும் விகுதி, மற்றமூன்றும் எண்ணும்மை. மன்னர் - பெருமையுடையோர். கோன்—கோ என்பது னகரச்சாரியை பெற்றது.

முனி—வடமொழியில் மனு என்பதற்கு அறிவு என்று பொருள்; இதனால் ஞானமுடையவர்கள் என்று கொள்ளவேண்டும். முனியின்தன்மை மவுனம்=கற்றறிந்தடங்கல், செம்

ம்ல் + பெருமை, அரசுதுடையோனுக்கு வழங்குதலால் பிண் பாகுபெயர். (ச)

காமன் மாறுபட் டுலந்தோர் காடுகண்டேகித்
தாமவார்குழற் றூடங்க படச்சரந் தூண்டி
ஏமமாகிய படைக்கல மியாவையும் பெற்றே
ஓமமாவலியுறைந்ததோ ருறையுள் சென்றுறைந்தார்.

(இ-ள்.) காமன் - மன்மதன், மாறுபட்டு - (சிவனைப்) பகைத்து, உலந்தது ஓர்காடு (நெற்றிக்கண்திறக்க அங்கம்) அழிந்ததற்கிடமாகிய ஒருவனத்தை, கண்டு ஏகி - பார்த்துச்சென்று, தாம வார்குழற் றூடகை - பூமாலை அணிந்த நீண்டகூந்தலுள்ள தாடகை என்பவள், பட - இறக்க, சரந்தூண்டி - அம்பு தொடுத்து, ஏம்மாகிய படைக்கலம் யாவையும் - காவலாகிய ஆயுதங்கள் எல்லாவற்றையும், பெற்று - (அக்கௌசிக முனிவர்) அளிக்கப்பெற்று, மாவலி ஓமம் உறைந்தது - மகாபலிச்சக்கிரவர்த்தி வேள்விசெய்வதற்கு அமைந்ததாகிய, ஓர் உறையுள் - ஓரிருப்பிடத்தில், சென்றுறைந்தார் - போய்த் தங்கியிருந்தார்கள்.

சிவபெருமான் தவஞ்செய்கையில் பங்கஞ்செய்ய முய்ன்ற காமன் அவர் நுதல்விழி திறக்க அங்கம் சாம்பராய் அங்கனை இடமாகையால் அங்கதேசம் என்னும் பெயருடைய தூன வனத்தைக்கண்டு அப்புறம் சென்று, தாடகை என்னும் அரக்கியைக்கொல்லப் பென் என்று ஐயப்படுவதை முனிவர் உணர்ந்து, இந்திரன் விரோசனன் மகளையும் திருமால் பிருகு பத்தினியையும் கொன்றார்கள் என்னும் பூர்விக சரித்திரத்தைச் சொல்ல, அவர் வாக்கியத்தின்படி அத்தாடகையைக் கொன்று, பின் பல அஸ்திரங்களை மந்திரத்தோடுபதேசித்து விசுவாமித்திரன் அளிக்கப்பெற்று அப்புறம் சென்று, காசிப முனி அதிதியோடுகூடிப் பல ஆயிரமாண்டு தவம்புரிய, உபேந்திரன் அருள்புரிந்து அவர்கட்கு மகனாய் வாமனனாய் அவதரித்து, மகாபலியை மூவடி நிலம்வேண்டி, மூவுலகளந்து, இந்

தரனுக்கு உதவிய இடமான் சித்தாச்சிரமத்திற்போய் இருந்தார்கள். தாடகை சுகேது என்னும் கந்திருவன் ஈன்முக னருளால் பெற்ற மகள். சுந்தன் என்பவன் மனைவி. அகத்திய முனிவர் சாபத்தினால் அவளும், சுபாகு, மாரீசன் என்னும் அவள்மக்க ளிருவரும், அரக்கராஞர்கள். அவன் கந்தருவ ஸ்திரீயாய் இருந்தநிலையை, தாமவார்குழல்என்று குறிப்பித் தார். காமன்—ஆசைமூட்டுபவன். மாறுபட்டு—மாறு என்ப தோடு, பட என்னும் வினைசேர்ந்து அனைத்து மோர்பகுதி யாய்ந பகுதியீற்றில் - ட் - [உயிர்-சூ-உரு.] விதியின்படி இரட் டித்து, உ - வினையெச்சவிகுதி சேர்ந்து, சந்தியில் உகரம் கெட்டது ; செய்வினை. அகப்படு, புறப்படு, முதலியவும் இவ் வாறே. ஏ - அசை. (கு)

வெவ்விவிச்சினவீரரைக்காவெனவிடுத்தா-
னவ்விடத்துமாமுனிவனும்வேள்விசெய்தமைந்தா
னெவ்விடத்தினுமரக்கர்வந்திடியெனவார்த்தார்
வவ்விடச்சரமாரியால்வானத்தைமறைத்தார்.

(இ - ள்.) வெவ்வி - கோபித்து, விச்சினவீரரை - பகை வர்க்குக்கேடு இயற்றவல்ல சூராகிய இராம லக்ஷ்மணர்களை, காவென விடுத்தான் - காத்துக் கொண்டிருங்கள் என்று அனுப்பி, முனிவனும் வேள்விசெய்தமைந்தான் - விசுவாமித் தரனும் யாகம் செய்யத் தொடங்கினன் ; எவ்விடத்தினும் - எங்கும், அரக்கர்வந்து - இராக்ஷதர் சூழ்ந்து வந்து, இடியெ னஆர்த்தார் - இடிபோல் கர்ச்சித்தார்கள் ; வவ்விட - அவர்க ளைக் கவரும்படி, சரமாரியால் - அம்புமழையால், வானத்தை மறைத்தார் - ஆகாயத்தை மூடினர்கள் (அவர்கள்.)

இராம லக்ஷ்மணர் இருவரையும் காவல் வைத்துவிட்டு மு னிவர் வேள்விசெய்யத் தொடங்கலும், அரக்கர் சூழ்ந்து ஆர்ப்பரிக்க, அவர்கள் வீசும் இறைச்சியும் குருதியும் வீழா தி ருக்கும்படி இருவரும் சரக்கூட்டினால் வானத்தை மறைத் தார்கள். வெவ்வி—வெம்மையில் ஈறுபோய் இ வினையெச்ச

விருதி சேர்ந்து, முன்னின்ற மெய்திரிந்து, இரட்டியது. பண் படியாகப் பிறந்த வினை. செம்மை செவ்வி என்றுவதுபோல், வெம்மை வெவ்வி என்றன தெனக்கொண்டு, பராக்கிரம முள்ள என வீரருக். தடையாக்கலுமாம். விச்சின்னம்—வட மொழி, அறுதல் என்னும் பொருள் உடையது எனகாம்தொ குத்தல். விடுத்தான்—மூற்றெச்சம். கா—ஏவல் ஒருமை வினை முற்று, முக்கியம்மாய். இராமனைக்குறித்தமையால் ஒருமை வந்ததெனக்கொள்க. என்—செய்தெனெச்சத்திரிபு, என்று சொல்லி என்பதுபொருள், செய்யவென்பது செய்து எனத் திரிந்தது. [வினை-சு-ஈடீ.] இடினன—என-உவமை இடைச் சொல். உம்—இறந்தது தழுவிய எச்சப்பொருளது. வவ்விட— வவ் - பருதி, இடி - துணை வினை, அனைத்துமோர் பகுதியாய், அ - விருதிபெற்ற செயவனெச்சம். (சு)

கண்டவீரரு மரக்கரைத்தடிந்துதா டகையாம், சண்ட வேகத்த டகயரி லொருவனைச் சரத்தாற், றுண்டமாக்கிமற் றொருவனைக் கடல்புகத் துரந்தா ன், மண்டுவேள்விசெய் முனிவனுமதுகண்டு மகிழ்ந் தான்.

(இ-ள்.) கண்டவீரரும் - பார்த்த வீரரிருவரும், அரக்க ரைத்தடிந்து - இராக்ஷதரைச் சேதித்துக்கொன்று, தாடகை யாஞ் சண்டவேகத்தள்தாயரில் - உக்கிரவேகமுள்ளவளாகிய தாடகையின் மக்களில், ஒருவனைச்சரத்தால் துண்டமாக்கி - (சுபாகு என்னும்) ஒருவனை அம்பினால் துண்டித்துக்கொன்று, மற்றொருவனைக் கடல்புகத்துரந்தான் - (மாரீசன் என்னும்) மற்றொருவனைக் கடலில் விழும்படிச் செலுத்தினன் ; மண்டு வேள்விசெய் முனிவனும் - (மகிமை) சேர்ந்த யாகம்செய்கிற அவ்விசுவாமித்திரனும், அதுகண்டு மகிழ்ந்தான் - அதைப்பார் த்துச் சந்தோஷித்தான்.

ஆகாயத்தைச்சூழ்ந்துகொண்ட அரக்கரையெல்லாங் கொ ன்று, தாடகை குமாரர்களில் - சுபாகுவை வதைத்து, மாரீ சனை வாயு அஸ்திரத்தினால் கடலில் வீழ்த்தினன்.

வேள்வி—வேள் - பகுதி, வி - விகுதி, தொழிலாகுபெயர், வேம் - இரண்டினுள் முன்னது எதிரதுதழுவிய எச்ச உம்மை, பின்னது. இறந்ததுதழுவிய எச்ச உம்மை. சண்டவேகம்—பண்புத்தொகை, வடசொல். மண்டுவேள்வி—வினைத்தொகை. ஆம் என்பதைச் சண்டவேகத்தள் என்பதோடு கூட்டுக. (எ)

சண்டமாமறைமுனிவனுந்தம்பியுந்தானுங்
கண்டல்சூழ்கரைக்கங்கையுங்கானமுங்கடந்து
பண்டைமாநிறமகலிகைபெறப்பதத்தருளி
விண்டமாமதிண்மிதிலைமாநகர்சென்றுவிட்டார்.

(இ - ள்.) சண்டமா மறைமுனிவனும் - உக்கிரமுள்ள பெரிய வேதங்களுணர்ந்த விசுவாமித்திர முனிவரும், தம்பியும் தானும் - இளையோனும் இராமன்தானும், கண்டல்சூழ் கரைக் கங்கையும் கானமூன்றும் கடந்து - தாழைசூழ்ந்த கரையுள்ள கங்கைநதியையும் வனத்தையும் தாண்டிச்சென்று, பண்டை மாநிறம் அகலிகைபெறப் பதத்தருளி - (கௌதமபத்தினியாகிய) அகலிகை முன்பெண்ணுருவம் பெறும்படி திருவடியால் (பரிசித்து) அருளி, விண்டமா மதில்-மேகமண்டலமளாவிய மதில்சூழ்ந்த, மிதிலைமாநகர் சென்று விட்டார் - மிதிலை என்னும் மேன்மையான நகரத்துக்குப்போய்ச் சேர்ந்தார்கள். (பணிந்து என்னும்பாடத்தில் கட்டளையிட்டு என்பது பொருள் ஆயினும், கதைக்குப்பொருத்தம் இன்மையின் பதத்து என்னப்பாடங் கொள்ளப்பட்டது.

மூவரும் கங்கையைக்கடந்து, கௌதமமுனிசாபத்தால் கல்லாய்க்கிடந்த அகலிகை என்னும்பெயர் உள்ள கௌதமபத்தினி, இராமன் திருவடி பட்டவுடன் முன்னிருந்தபடி பெண்ணுருவம் அடைந்து கணவன்பக்கம் சேரக்கண்டு களித்து மிதிலை மாநகர் சேர்ந்தார்கள்.

மாநகர்—மலர்மகள் வதியுமிடம் எனவும் பொருள்படும். கானம், நகரம்—இவை மூறையே இடையும் கடையும் குறைந்த வடசொல். விண்ட—விண்டு என்னும்பெயர் அடி

யாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; விண்டு – மேகம், அதனை யுடைய, அதாவது அளாவிய. கங்கை—விஷ்ணுபாதத்தினின்றும் பூமியில்வந்ததென்னும் பொருளுடையது. சகரன் அசுவமேதம் செய்வதற்குக் குதிரைவிடுக்க இந்திரன் கவர்ந்து பாதலத்தில் கபிலமுனி தவஞ்செய்யுமிடத்தில் கட்டிப்போனான். தன்மக்கள் அறுபதினாயிரம் பெயரையும் தேடிவிட, அவர்கள் பூமி முற்றுந்தேடிப் பாதலத்திற் குதிரையைக்கண்டு, அம்முனிவரே கவர்ந்தவர் என்று அவரையுறுக்க, அம்மாமுனியின் உங்கார்த்தால் அனைவரும் சாம்பராயினர்கள். பின் சகரன் மகன் அசமஞ்சனுக்குப் புதல்வனாகிய அம்சுமானை "அப்பா! நான் வேள்விமுடிக்கவேண்டுமே," யென்ன, அவன் மூற்றும் நாடிப் பாதலத்தில் கபிலமுனிவர்பின் குதிரை இருக்கக்கண்டு, அவரைவணங்கி உற்றதுரைக்க, அவரும் மகிழ்ந்து அறுபதினாயிரவர் வரலாறுஞ்சொல்லிவிடுக்க, குதிரை கொணர்ந்து வேள்வி முற்றுவித்தனன். பின் அவன்மகன் பகீரதன் தவஞ்செய்து, கங்கையைப்பெற்று, அதன்வேகம் தாங்கும்படி சிவபெருமானைத் தவஞ்செய்து பிரார்த்திக்க, அவர் சடைமுடியில் அடங்கிப்போன கங்கையை அருளால் பிந்து சரசில்விட, அங்கிருந்து தன்யாகமழியும்படி பெருகிவந்த கங்கையை ஜென்னுமுனி உண்டு காதினூல்விட, அதுகொண்டு பாதலத்தில் சகரர் உடற்சாம்பலைக் கரைத்துக் கடைத்தேற்றினன். பகீரதன் கொண்டுவந்தமையால் பாகீரதி. சன்னுமுனிகாதிலிருந்து விட்டமையால் சாஹவி என்றும் பெயர்பெற்றது. சண்டமாமுனி—அரிச்சந்திரனை பாடுபடுத்தினதனால் சண்டனென்றார்.

பிரமபுத்திரன் குசன், அவன்புத்திரன் குசநாபன், அவன் மகன் காதி, காதிகுமாரன் இவ் விசுவாமித்திரன், அரசவம்சத்திற் பிறக் தராசாண்டவன். ஓர்காலத்தில் வசிட்டனுச்சிரமம் செல்ல அவர் காம்தேனுவால் சிறப்பொடு விருந்திட அக்காம தேனுவைப் பலவகைவேண்டியும் கொடாமையால் சமர்புரிந்து தோல்வியடைந்து பின் தவஞ்செய்து திரிசங்குவை வசி

ட்டர் உபேகூஷிக்கத் தன்தவத்தின் பயனுல் பொன்னுலகுக்குத் தேகத்தோ டனுப்பினன். தேவர்கள் புலியன் என்று இகழ்ந் தமையால் வேறுசுவர்க்கமுதலிய உலகம் படைக்கும்படி தொ டங்கப் பிரமதேவன் தோபமாற்றித் திரிசங்குவுக்கும் ஓரிடம் வகுத்து இவர்க்கும் பிரமமுனிவர் என்னும் பேர் அளித்தார்.

சனகர்கோனேவந்தணுகலுந்தழல்புரிவேள்வி
முனிவனேயிவராெனக்கருளெனமொழிந்தான்
வினையம் வேறிலைவிறல்புனேதயரதனென்பான்
றனையர்மற்றுனின்றனுவலிகாண்குறச்சமைந்தார்.

(இ - ள்.) சனகர்கோனே வந்தணுகலும் - (இம்மூவரும்) ஜனகமகாராஜனே வந்துசிட்டினவுடன், தழல்புரி வேள்வி முனிவனே - அக்கினிதேவன் விரும்பத்தக்க யக்கியங்கள்செய் யும் தபோநிதியே ! இவர் ஆர் எனக் கருளென - இவர் யார் எனக்கு மொழிந்தருள்வேண்டுமென்று வினவ, விறல்புனே - வெற்றியணிந்த, தயரதனென்பான் தனையர் - தசரதன் என் னும் மகாராஜனுடைய மக்கள் ; வினையம்வேறிலை-வேறுகாரிய மிலேலை ; மற்றுனின் தனுவலி காண்குறச் சமைந்தார் - உன்னி னிடத்துள்ள வில்லின்வலியைப் பார்க்கமுயன்றுவந்தார்கள் ; மொழிந்தான் - (என்று கௌசிகமுனிவன்) சொன்னன்.

இவர்கள் வந்தவுடன் ஜனகமகாராஜன் விசுவாமித்திரனை இவர்கள் யார் என்று கேட்க, அயோத்தி அரசனுன தசரத சக்கிரவர்த்தித் திருக்குமாரர்கள் என்றும், உன்னிடத்தில் உள்ள வில் வலி காண வந்தார்கள் என்றும் சொன்னர்.

ஜனகர் — ஜனகவம்சத்திலுள்ளவர். கோன் — அவர்களுக் குள் மேலானவன். சீதாபிராட்டியை மகளாகப்பெற்ற சிறப் புள்ளவன் என்று கருத்து.

அணுகலும் — பிற்பொருட்டு விகுதிபெற்ற இறந்தகால விணேயெச்சம். புரியப்படுவதை புரி என்றுசெய்வினையாகக்கூ றியது மரபுவழுவமைதி [பொது - சூ - சகூ.] தழல் வேள்வி

புரி எனமாற்றி முனிக்கு அடையும் ஆக்கலாம். வினையம் — அம் - சாரியை. தாயர் — தனையர் என் அகரத்து ஐ போலி. மற்று — வினைமாற்றுப் பொருளில் வந்தது. தறுஸ் — வடமொழி, தறு என விகாரப்பட்டது. காண்குறு — காண்குறு சாரியைபெற்ற முதனிலைத்தொழிற்பெயர், உறு - துணைவினைகூடிய காண்குறு பகுதியாய், அ - விகுதிபெற்று, சந்தியில் உகரம் கெட்டது. சமைதல் - ஏற்படுதல். இங்கே முயன்றுவந்ததை உணர்த்தியது.

கலிவிருத்தம்.

இந்திரவில்லெனயாருமெடுத்தே
வந்தநெடுஞ்சிலைவள்ளல்வீளித்தா
னந்தரவாணிலரம்பையரன்னர்
தந்தையுவந்துசாற்றுதுமென்றார்.

(இ - ள்.) யாரும் இந்திரவில்லென, - (கண்டவ) லெவரும் இந்திரவில்லென்று சொல்லும்படி, வந்தநெடுஞ்சிலை - (பல்லாயிரவர்) கொண்டுவந்த பெரியவில்லை, வள்ளல் எடுத்து வளைத்தான் - உதாரகுணமுள்ள இராமபிரான் எடுத்துவளைத்தான், அந்தரவானில் அரம்பையரன்னர் - ஆகாயத்தில் இருக்கும் சுவர்க்கத்திலுள்ள அரம்பைமகளிரை ஒத்ததோழிகள், தந்தை உவந்து - நின் தந்தையாகிய ஜனகமகாராசன் மகிழ்ந்த வில் வளைத்தசெய்தியை, சாற்றுதுமென்றார் - சீதைக்குச் சொல்லுகிறோமென்று சொன்னார்கள்.

உடனே பல்லாயிரவீரர்கள் தூக்கி அரிதிற் கொண்டுவந்த எவர்களும் வளைக்கமுடியாமல் தோற்றுப்போனதாயும் கண்டவர்கள் எல்லாம் இது இந்திர்வில்லென்று வியந்துசொல்லும்படியாயு மிருக்கிறவில் வளைக்கையில் முறிந்தது. இராமன் வில்வளைக்க ஜனகன் மகிழ்ந்தசெய்தியைத் தோழிகள் சீதைக்குச் சொன்னார்கள்.

எடுத்துவீன்றதனல் மூன்றெருவரும் எடுக்கமாட்டாதது என்றதாயிற்று. நெடுஞ்சிலை — (ஒருவரும் வளைக்க மாட்

டாமையால்) நீட்டிக்கிடந்த சிலை எதுவும், சிவபெருமானே எடுத்து வளைக்கத்தகும் பெரியவில் எனவும் தோன்றுகிறது. என — என் என்னு மிடைச்சொல்லடியாகப் பிறந்த செயவெனெச்சம். யாரும் — முற்றும்மை. சாற்றுதும் — தன்மைப் பன்மை வினைமுற்று. நான்போய்ச் சொல்லுகிறேன் நான் போய்ச் சொல்லுகிறேனென்று விளைந்தார்கள் என்பது கருத்து. அளவடி நான்காயமைந்தமையின் கலிவிருத்தம்.

சனகனலந்திகழ்தசரதனுக்கோர்
தனைபரியாளெருதூதனை விட்டான்.
தனையமொடுந்தவமாமுனியோடும்
வினையம்வல்லான்மதின்மிதிலைபுகுந்தான்.

(இ - ள்.) சநகன் - ஜநகமகாராஜன், நலந் திகழ் தசரதனுக்கு - உத்தமகுணம் விளங்குகிற தசரதமகாராஜனுக்கு, ஓர் துனைபரியான்-ஒரு விரைவான குதிரையுள்ள, ஒருதூதனை விட்டான் - ஒருதூதுவனை அனுப்பினன் ; வினையம்வல்லான் - செய்தொழிலில் வல்லவனுகிய தசரதமகாராசன், தனையமொடும் - குமாரர்களோடும், தவமாமுனியோடும் - தவப்பெருமையுள்ள பெரிய வசிட்டமுனிவரோடும், மதில் மிதிலைபுகுந்தான்-மதில் அரணமைந்த மிதிலாநகரத்துள் பிரவேசித்தான்.

பின் ஜநகமகாராஜன் தசரதமன்னவனுக்குத் தூதுவன்கையில் மணவோலை கொடுத்து விளைவிற்செல்லும்படி யனுப்ப, உடனே அத்தசரத சக்கிரவர்த்தி குமாரர்களாகிய பரதசத்துருக்கினர்களோடும், குருவாகிய வசிட்டமுனிவரோடும், சதுரங்கசேனைசூழ மிதிலைவந்துசேர்ந்தான்.

ஓர் - அறிந்த, ஒருதூதன் - நிகரில்லாதவன் என்பது பொருள்: உம்—எண்ணும்மை. தனைபரி—விரைத்தொகை. பரியாளெரு தூதன்—பன்மொழிப் பண்புத்தொகை, வினையம் — காலம் முதலிய வறிந்துசெயல். (கக)

தெள்ளமுதன்னவள் சீதையையன்பால்
வள்ளலிராகவன் மன்னிமணந்தான்
முள்ளெயிறுயிதழ்மூவரையும்போர்
வெள்ளிலைவேலவர் மூவரும்வேட்டார்.

(இ-ள்.) தெள்ளமுதன்னவள் சீதையை - குற்றமற்றுத்தெளிந்த அமுதத்தைப்போன்றவளாகிய சீதாதேவியை, வள்ளலிராகவன் - வள்ளலாகிய இராமசந்திரன், அன்பால் மன்னி மணந்தான் - அன்பொடு பொருந்திக் கலியாணம் செய்து கொண்டான்; முள்ளெயி றுயிதழ் மூவரையும் - (மயில் இறகின் அடி) முள்போன்ற பற்களையும் ஆய்ந்த [மேன்மையான] இதழையுமுடைய மற்ற மூன்றுபெண்களையும், போர்வெள்ளிலைவேலவர் - யுத்தத்துக்குரிய வெண்மையான இலைபோன்ற வேலாயுதமுடையவராகிய, மூவரும் வேட்டார் - தம்பிகள் மூன்றுபெயரும் மணம்புரிந்தார்கள்.

ஜநகராஜன் யாகத்துக்காக உழும்போது அப்பூமியிலகப்பட்டவளாகிய சீதையை இராமனும், அம் மன்னனுக்கு மனைவியிடம்பிறந்த ஊர்மிளையை இலக்ஷ்மணனும், சாங்காசிய புரிக்கரசனும் ஜநகமகாராசன் தம்பியுமான குசத்துவசன் புத்திரிகளிருவரில், மூத்தவளாகிய மாண்டவியைப் பரதனும், இளையவளாகிய சுருதிகீர்த்தியைச் சத்துருக்கினனும் விவாகஞ் செய்துகொண்டார்கள். திருப்பாற்கடலில் தோன்றின பெண்ணமுதாகிய ஸ்ரீமகாலக்ஷ்மியே சீதை என்பதற்குத் "தெள்ளமுதன்னவள்" என்றும், சநகன் வேள்விக்காகச் சர்வலியிலும் போது கலப்பை உழுசாலில் அகப்பட்டமையால் "சீதை" என்றும் கூறலாயிற்று.

வள்ளல்—வண்மை-பகுதி, ஈறுபோய், அல் - பகுதிப்பொருள் விகுதிபெற்று, சந்தியில் ள் இரட்டித்தது; வளையாது கொடுப்பவனுக்காதலால், பண்பாகுபெயர். மணந்தான் — பெயரடியாகப்பிறந்த தெரிநிலைவினைமுற்று. வேலவர்—பொருளடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம்;— வேல் பகுதி, அர் -

விருதி, அ - சாரியை. வேட்டார்—வேள் - பகுதி, ஆர்-விகுதி. ட் - இடைநிலை, சந்தியினால் ளகரம் டகரம் ஆயது. போர் வெள்ளிலை வேல் — வடித்துத்தீட்டித் தீதலம் பூசுதல் வேண்டாது பொருவதினாலேயே வெண்மையாயிலைபோல் விள்ளும்வேல். மூவரும் — முற்றும்மை. 'ஆயிழை' என்பாடமிருக்கின் நலம். (கஉ).

நெறியினிலியாவருநேரிடும்வேலை
எறிசுடரார்மழுவேந்தனும்வந்தான்
குறியவனாகியவன்வில்வளைத்து
வறுமையிலாதவயோத்திபுகுந்தான்.

(இ - ள்.) யாவரும் நெறியினில் நேரிடும் வேலை - எல்லாரும் வழியில் எதிர்படுங் காலத்தில், எறிசுடரார் - வீசும் ஒளி நிறைந்த, மழுவேந்தனும் - கோடரி ஆயுதமுள்ள தலைவனாகிய பரசுராமனும், வந்தான் - (எதிர்த்து) வந்தான்; குறியவனாகியவன் - முன்வாமனனான இராகவன், வில்வளைத்து - அப்பரசுராமன் கொடுத்த வில்லைவளைத்து, வறுமையிலாத அயோத்தி புகுந்தான் - ஓர் குறையுமில்லாத அயோத்திமாநகரம் சேர்ந்தான்.

திருக்கலியாணம் முடிந்து தசரத சக்கிரவர்த்தி மக்களோடும் மருகிகளோடும் அயோத்திக்கு மீண்டுகையில் பரசுராமனெதிர்வந்து முன்னரிஹர யுத்தத்தில் தோற்றுப்போன வில்லை வளைத்ததறல் அறிந்தேன், இந்த மகாவிஷ்ணு வில்லை வளையென்று கையில் கொடுத்தவுடன் வளைத்துக் கணை தொடுக்க, அதற்கு இலக்காகத் தம்தவமுழுமையும் கொடுத்து மயேந்திர பர்வதத்துக்கு மீண்டும் பரசுராமர் சென்றார். பின்பெல்லாரும் மிழலைவோடயோத்திசேர்ந்தார்கள். முன் தேவர்கள் ஹரிஹரர்களுக்குள் மேலானவன்யாவனென்று அறியும்படி மயனால் இரண்டுவில் நிர்மாணிப்பித்து, அவ்விருவருக்கும்போர்மூட்ட, தேவர்கள் வேண்டுகோளின்படி ஹரிஹரர்கள் இருவரும் எடுத்து யுத்தம் செய்கையில், சிவனார் தோல்வியடைந்தார். அவர் வில்லை நிமிவழ்சத்தில் தேவராதனிடத்

தில் கொடுக்க, குலமுறையாய் ஜனகனுல் பூஜிக்கப்பட்டுவந்தது. மற்றொன்று மகாவிஷ்ணுவினது வில்; பிருகுவம்சத்தில் இரிசிக் முனிவரிடம் கொடுக்க, பரம்பரையாய் ஜமதக்கினிக்குக் கிடைத்துப் பரசராமன் கைக்கு வந்தது. தான்வந்த விஷ்ணுவில்லை, இராகவன் வருணனிடத்தில் கொடுத்தார். பரசுராமன் க்ஷத்திரியனைக் கருவறுத்துப் பூமியைக் காசிபமுனிவருக்குத் தானஞ்செய்து, தன் பரசுவை வீசியதினுற் சமுத்திரம் ஒதுங்கினவிடமாகிய மகேந்திர பர்வதத்தில் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

முன்னது முற்றும்மை, பின்னது இறந்தது தழுவிய எச்சவும்மை. எறிசுடர், ஆர்மழு,—இரண்டும் வினைத்தொகை. மழுவேந்தன் — இரண்டாம்வேற்றுமை உருபும்பயனும் தொக்கதொடர். குறியவன்—குறுமைப்பண்படியாகப் பிறந்தபெயர். ஆகியவன்—இறந்தகால வினையாலணையும்பெயர். (கஉ)

பாலகாண்டக்கதை முற்றிற்று.

II. அயோத்தியாகாண்டம்.

கலிவிருத்தம்.

அரியணைமீதிலிருந்தரசாளும்
வரிகழன்மன்னன்வசிட்டனைநோக்கா
உரியதவம்புரிவேனென்மகற்கே
விரிகதிர்மௌலிமிலைச்சுமினென்றான்.

(இ - ள்.) அரியணைமீதி லிருந்தரசாளும் - சிங்காசனத்தில் வீற்றிருந்து இராச்சியாதிகாரம் செய்கிற, வரிகழல்மன்னன் - சித்திரமெழுதிய வீரகண்டையணிந்த தசரத மகாராஜன், வசிட்டனைநோக்கா - (தன்குருவாகிய) வசிட்டமுனிவரைப்பார்த்து, உரியதவம்புரிவேன் - முத்திக்கு உரிமையான தவம் செய்யக் கருதுகிறேன், (ஆதலால்), என்மகற்கே - என்மகனிடத்தில், விரிகதிர்மௌலிமிலைச்சுமின் - பரவும் ஒளியுள்ள முடியை அணிவியுங்கள், என்றான் - என்றுசொன்னான்.

வரிகழல்—என்பதைக் கழல்வரி என மாற்றி வீரகண்டைட் கட்டிய எனவும் கொள்ளலாம்.

தசரதன் பரதனைக் கேகயதேசத் தரசனுகிய அவன் மா மன் யுதாசித்து அழைக்கச் சத்துருக்களுடி கூட்டி யனுப்பி, சிலகாலஞ் சென்றபின், ஒருநாள் சிங்காதனத்தில் மந்திரி முதலாஞ்சூழ் வீற்றிருந்து, குருவாகிய வசிட்டமுனிவனைப் பார்த்து, முத்தியடையத் தவம்செய்ய விருப்பமும் ஆளுகை யிற் சலிப்புமுண்டா யிருக்கிறது, முறைப்படி என்மகன் இரா மனுக்கு இரார்ச்சிய பட்டாபிஷேகஞ் செய்யுங்கள் என்று பிரார்த்தித்தான்.

அரியணை—மூன்றும் வேற்றுமை யுருபும்பயனும் தொக்கது. சிங்கப்பதுமையால் தாங்கப்பட்ட ஆதனம். அரி—அரசனுக்கு உவமையாகுபெயராய், அவனுக்குரிய அணை என, நான்காம் வேற்றுமையும் கொள்ளலாம். மீதில்—பெயர்ச்சொல், ஏழாம் வேற்றுமை. வரிகழல்—வீரத்தொகை. நோக்கா—செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஏ—பிரிநிலை. மிலேச்சு ரின்—முனிவர் மேன்மைபற்றிப் பன்மை என்றும், மந்திரிக ளோடுங் கூட்டியதனல் பன்மை என்றும் கொள்ளலாம்: தவமே உரியது ஆதலின், உரிய என்று கூறலாயிற்று. (கசு)

அன்னதுகூனியறிந்தனள்சொன்னுள்
கன்னன்மொழிக்குயில்கைகெயிகேட்டாள்
மன்னவநீமுன்னளித்தவரத்தா
லென்மகனுக்கரசீந்தருளென்றுள்.

(இ - ள்.) அன்னது கூனி அறிந்தனள் சொன்னுள்-அச்செ யதினைக் கூனியாகிய மந்தரை என்பவள் அறிந்து கைகேயிக் குச் சொன்னுள்; கன்னல், குயில்மொழி - கரும்புபோன்ற சுவையும் குயிலின் குரல்போன்ற இனிமையுமுள்ள மொழியை யுடைய, கைகெயிகேட்டாள் - கைகேயி என்னும் மனைவி கேட்டு, மன்னவ - வேந்தனே ! நீ முன் அளித்த வரத்தால்-

நீ முற்காலத்தில் கொடுத்த வரங்களால், என்மகனுக்கு அரசு ஈந்தருள் - என்மகன் பரதனுக்கு அரசாட்சி கொடுத்தருள்க, என்றாள் - என்று கூறினாள்.

கைகேயியின் தாதியாய்க் கூனியாகிய மந்தரை, இராமன் பட்டாபிஷேகம் அறிந்து கைகேயிக்குச்சொல்ல, அவள் உடனே தசரதசக்கிரவர்த்தியைப் பார்த்து, சம்பராசுரயுத்தத்தில் தான்செய்த சாரதித்தனதுக்காகப் பிரதி இரண்டுவரம் நீ கொடுத்தாயன்றோ, அதனால் என்மகன் பரதனுக்கு அரசாட்சி அளித்து இராமனைக் காட்டுக்குத் தவஞ்செய்ய அனுப்பவேண்டுமென்று கூறினாள்.

கூனி—குரூபிகளுக்குத் தூர்ப்புத்தி என்று சாமுத்திரிகலக்ஷணம் சொல்வார்கள் ஆதலினாலும், இளமையில் இராமன்விளையாட்டாக உண்டையைக் கூன்மேல் எய்தது பற்றிப் பகை கொண்டிருத்தலாலும், இம்மந்தரை தூர்ப்புத்தியால் கலகம் செய்தாள்.

- நீ அளித்த என்பது—நீயாய் பிரதியுபகாரமாகக் கொடுத்தது ஆகையால் மறுக்கொணாது, என்பதைக் குறித்தது. அறிந்தனள், கேட்டாள்,—தெரிந்தே முற்றெச்சங்கள். கன்னல், குயில்,—இரண்டும் பயனுவமை. (கரு)

வடிவுடைமன்னன்மயங்கினன்வீழ்ந்தா
னிடுகழல்வீரனிராகவனின்றே
நெடில்படுகானகமீபுகுகென்றே
கொடியவள்சீரைகொடுத்தனளன்றே.

(இ - ள்.) வடிவுடை மன்னன் - அழகுடைய தசரத சக்கிரவர்த்தி, மயங்கினன் வீழ்ந்தான்-அறிவு சோர்ந்து விழுந்தான்; இடுகழல் வீரனிராகவன் - வீரகண்டை அணிந்த வீரனாகிய இராமன், இன்றே - இப்பொழுதே, நெடில்படு கானகமீ - நெடுங்கானத்தில், புகுகென்று - செல்லக்கடவன் என்று சொல்லி, கொடியவள் - கொடுமையுள்ள கைகேயி, அன்றே சீரை கொடுத்தனள் - அப்பொழுதே மரவுரி கொடுத்தாள்.

வரங்கேட்டவுடன் ஒன்றும் தடைசொல்ல மாட்டாதவனாய்த் தசரதன் புத்திரசோகத்தால் மூர்ச்சித்துக் கிடக்க, கைகேயி இராமனை வரவழைத்து நான் கேட்டவரத்தில் ஒன்றால் உன்னைக் காட்டுக்கு அனுப்பவும் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவும் அமைந்து, அது சொல்லமாட்டாமல் பிதற்றமயங்கிக் கிடக்கின்றனர். இப்பொழுதே தவவேட முள்ளவனுய்க் காட்டுக்குச் செல்லென்று இரக்கமில்லாமல் தன் கையினுல் மரவுரியும் கொடுத்தாள்.

இன்றே என்பது தாமதிக்கின் சக்கிரவர்த்தியே வாக்குத்தவறும்புவானே, அன்றிப் பரதனேவ்ந்து இசையானே, ஏதுவரு மோவென. ஐயுற்றனள் என்று குறிப்பிக்கின்றது. வேறு இராச்சியங்கள் பிடித்து அரசாளாமைக்குத் தவவேடம் பூணச் சீரைகொடுத்தனள் என்பதும், இராமன் வடிவும் குணமும் கண்டும் இரக்கமில்லாமல் கூறியதும் சீரைகொடுத்ததும் தோன்றக் கொடியவள் என்றார். அயோத்திக்கு அணுகவிருக்கின் மீண்டும் அரசாளநேரும்என்று நினைத்து 'நெடில்படுகானகமீ' என்றாள். இன்று, அன்று—பெயர்ப் பொருளாகிய விடைச் சொல்; ஏ - தேற்றம். புகுக என்னும் வியங்கோ ளீற்றகரம் தொகுத்தலாயிற்று. (கசு)

மலர்க்குழலாளொடு வார்சிலைவன்கை
இலக்குவனேடுமி ராகவனன்றே
அலக்கணுறுமல யோத்திகடந்தே
நலக்குறுகங்கை நறுங்கரைவிட்டான்.

(இ - ள்.) மலர்க்குழலாளொடு - பூவையணிந்த கூந்தலையுடைய ஜானகியோடும், வார்சிலைவன்கை இலக்குவனேடும்—நீண்ட வில்பிடித்த வலியமைந்த கையையுடைய இலக்ஷ்மணனேடும், இராகவன்-சீராமபிரான், அலக்கண் உறுமல்-மனதில் வருத்தம் (சிறிதும்) அடையாமல், அன்றே அயோத்திகடந்து—அப்பொழுதே அயோத்தி ங்கர்தாண்டி, நலக்குறுகங்கை-நல்வினைக்குப் பொருந்திய கங்கைநதியினுடைய, நறுங்கரை விட்டான் - மணம் வீசும் தீரத்தில் சேர்ந்தான்.

உடனே இராமபிரான் சீதையும் இலக்ஷ்மணனும் பிரிவாற்றாமற் கூடவரக் கூட்டிக்கொண்டு மனக்கலக்கம் சிறிதுமின்றி அயோத்தி நகரம்தாண்டி, மந்திரிகளையும் மன்பதைகளையும் திருப்பிவிட்டு, புண்ணிய தீர்த்தமாகிய கங்காநதிக்கரையிற் சிருங்கிபேரபுரத்திற் சேர்ந்து, வேடர்க்கரசனை குகன் உபசரிக்க அவனைத் தழுவிக்கொண்டு, தம்பி முன்றகொண்டாடி, அவன் புல்லாற்செய்த படுக்கையில் படித்து, இராத்திரியை நீத்தான்.

மலர்க்குழலாள் என்பதனால் மலர்வாடாமல் அரண்மனையிலிருக்கத்தக்கவள் என்பதும், வார்சிலைவன்கை என்பதனால்பெருமாளுக்குக் காவல்செய்ய ஆயுதபூர்த்தியும் புஜ்பல்மும்உடையவன்என்பதும், தோன்றுகின்றன. தாளாளுவதிலும் பரதனாளுவதில் உவப்பினாலும், இயற்கையான சற்குணங்களாலும், இராமனுக்கு அலக்கணில்லை; மற்றிருவர்க்கும் இராம்னே டிருப்பே யின்பமாதலினாலும் அலக்கணில்லை. நலக்கு—சாரியையினற்பமாதலால் அத்துச்சாரியை பெறவில்லை. கோட்டுப் பூவும் கொடிப்பூவும் கயப்பூவும் கமழுங்காை நறுங்காை. வார்சிலை—வினைத்தொகை..வன்கை—பண்புத் தொகை; உரிச்சொல்லாதலால் னகரம் திரியவில்லை- (கஎ)

அங்கைகெடுங்குக னம்பிவிடப்போய்க்
கங்கைகடந்தொரு கங்குலினங்கோர்
சங்கையின்மாமுனிசாலையினண்ணிக்
கொங்கலர்சித்திர கூடமமைந்தார்.

(இ - ள்.) கெடு அங்கை குகன் - நீண்ட அழகிதான கையையுடைய குகனென்பவன், அம்பிவிடப்போய் - ஓடஞ்செலுத்தி அதில் ஏறிப்போய், கங்கைகடந்து - கங்கைநதி தாண்டி, ஒரு கங்குலின் - ஒருநாளிரவில், அங்கு - அவ்வனத்தில், சங்கையில்-மாமுனி - (தத்துவமுணர்தலில்) ஐயமில்லாத பெருமை பொருந்திய பரத்துவாசமுனிவருடைய, ஓர்சாலையில் நண்ணி- ஒரு பர்ணசாலையிற்சேர்ந்து (இருந்து), கொங்கு அலர் சித்திர

கூடம் - மணம் பரவும் சித்திரகூடபர்வதத்தில், அமைந்தார் - சேர்ந்தார்.

குகனென்பவன் ஓடம்செலுத்த அதில் ஏறிக் கங்கைக்கரை தாண்டி, குகனுல் ஆலம்பால் அழைப்பித்துத் தம்பியும் தானும் ஜடாதரித்துக்கொண்டு, தான் முன்னும் சீதைபின்னுமாய்ச் சென்று, பரத்துவாசமுனிவ ராச்சிரமத்திலிருந்து சித்திரகூடபர்வதஞ் சேர்ந்தார்கள்.

"குகன்கைக்கு கெடுமென்யாவது, கைங்கரியத்தில் விசேஷப் பட்டிருத்தல். சித்திரகூடம்—காட்சிக்கழகுடைய சிகரமுள்ளது. விடகாரணப்பொருள்படும் செயவெனைச்சம். (கஅ)

சித்திரகூடம டைந்தனர்சென்ற
தத்தனறிந்தன னுருயிர்விட்டான்
வித்தகமாமுனி மெய்ப்பரதற்கே
உய்த்தனனேலெய ணர்ந்திவண்வந்தான்.

(இ-ள்.) சித்திரகூடம் சென்றனர் அடைந்தது - (இவர்கள்) சித்திரகூட பர்வதம்போய்ச் சேர்ந்ததை, அத்தன் அறிந்தனன் - தந்தையாகிய தசரத சக்கிரவர்த்தி அறிந்து, ஆர் உயிர் விட்டான் - அருமையான (தன்) பிராணனைவிட்டான்; வித்தகமாமுனி-அறிஞனாகிய வசிட்டமாமுனிவன், மெய்பரதற்கு-உண்மையுள்ள பரதாழ்வானுக்கு, ஓலை உய்த்தனன் — (வரும் படி) ஓலை அனுப்பினன்; உணர்ந்து இவ்வண் வந்தான் - அறிந்த வுடன் (பரதாழ்வான்) இவ்வயோதிக்கு வந்து சேர்ந்தான்.

தசரத மகாராசன் முற்காலத்தில் பாலியத்தில் தான் வேட்டைக்குச் சென்றபொழுது நதியில் ஓர் முனிகுமாரன் சுமண்டலத்தில் தண்ணீர் மொள்ளுமொலியை யானை தண்ணீர் குடிக்கு மொலியென்றெண்ணிச் சப்தவேதி என்னும் அஸ்திரத்தை விட அக்கணை பட்டு அவன் இறக்கையில் கண்ணில்லாத தாய் தந்தையருக்குத் தன் செய்தி சொல்லும்படி சொன்னதினுல், அங்ஙனம் அரசனும் அவர்க்கறிவிக்க, அவர்கள் எங்களைப்போல்

யேயும் புத்திர சோகத்தா லிறக்கக்கடவை என்று சபித்து, தீக் குறித்தார்கள். அதனால் இராமன் சித்திரகூடம் சேர்ந்தசெய்தி தசரதனறிந்து அங்ஙனமே சொல்லி இறந்தான். பின் வசிட்ட முனிவன் பரதனுக்கு அரசன் மரித்தது முதலான செய்தி எழுதாமல் விரைவில் வரும்படி மாத்திரம் எழுதி அனுப்ப, தீக்கனவுகண்டு கவலைப்பட்டுக்கொண்டிருந்த பரதன் உடனே அயோத்தி வந்து சேர்ந்தான்.

அடைந்தனர் என்பதிலுள்ள முற்று விகுதியை சென்றது என்னும் தொழிற்பெயரின் பகுதிக்கும், இதன் தொழிற்பெயர் விகுதியை முற்றின் பகுதிக்கும், பிரித்துக்கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்; இது விகுதி பிரித்தலாம். இவண்—இன்று இங்கு என்பனபோன்ற இடைச்சொல். (கக)

வேறு.

மன்னனுக்குமை னுக்குமுற்றவா
றன்னைகூறவ றிந்தனைதலால்
என்னபாவிசெய் தாயென்றிரங்கினன்
றன்னைமாமுனி தான்வந்துதேற்றினன்.

(இ-ள்.) மன்னனுக்கும் மகனுக்கும் உற்ற ஆறு - தசரதக்கு இரவர்த்திக்கும் மகனாகிய ஸ்ரீராமபிரானுக்கும் நேர்ந்த விதத்தை, அன்னை கூற அறிந்தனன் ஆதலால் - (தன்) தாயான கைகேயி கூற அறிந்தான் ஆகையால், பாவி-பாவம் செய்தவளே, என்ன செய்தாயென்று - என்ன கொடுமை செய்தாயென்று, இரங்கினன் தன்னை-அழுது துக்கித்த பரதனை, மாமுனிவந்து தேற்றினன் - பெருமையுள்ள வசிட்ட முனிவன் வந்து ஆற்றினன்.

பரதன் வந்தவுடன் கைகேயி இராமன் காட்டுக்குச் சென்றதும், அந்தத் துக்கத்தினால் தந்தை இறந்ததும், தனக்குப் பட்டாபிஷேகமும் சொல்ல, பாவீ! என்னசெய்தாயென்று வெறுத்துப் புலம்புகையில், வசிட்ட முனிவன் துன்பத்தைச் சிறிதாற்றிப் பின் செய்த்தகும் கருமங்களைச் செய்யக் கூறினன்.

உம் — எண்ணும்மை. என்ன — வினவினைக்குறிப்புமுற்று ஸ்ணையும் பெயர். தான்—அசைநிலை. பரதன்தன்னை—தன்-சாரியை. (உ0)

இன்னதந்தையை யீமத்திலேற்றினன்
பின்னைமாமுடி சூடெனப்பேசினர்
பன்னுமாலைப்ப ரதனிராகவன்
தன்னைநாளைத்த ருவனென்றேகினன்.

(இ - ள்.) பன்னுமாலைபரதன் - புகழப்படும் மாலை சூடிய பரதாழ்வான், இன்ன தந்தையை - இவ்வண்ணம் மரணமடைந்த தந்தையாகிய தசரத சக்கிரவர்த்தியை, ஈமத்தில் ஏற்றினன்-மயானத்தில் சிதையில்வைத்துச் சம்ஸ்காரம் செய்தான்; பின்னை - பின்பு, மாமுடி சூடென பேசினர் - பெருமையுள்ள இராச்சியாபிஷேகத்தை அணிந்துகொள் என்று (மந்திரி முதலானோர்) கூறினர்; இராகவன்தன்னை - இராமனை, நாளைத் தருவன் என்று-நாளையே அழைத்து வருகின்றேன் என்று, ஏகினன் - (அவர்களுக்குச்) சொன்னன் (பரதன்.)

இவ்வாறு சத்தியத்துக்கு உயிர் தோற்ற தன் தந்தையாகிய தசரத சக்கிரவர்த்தியை, பல வாத்தியங்கள் முழங்கச் சிறப்போடு சிவிகை ஏற்றி மயானம் கொணர்ந்து விதிப்படி சிதையில் வைத்துத் தகனஞ்செய்து, பின் மற்றக்கருமங்களும் பூர்த்திசெய்து, பல தானங்கள் வழங்கி முடிந்தபின்பு, அங்குள்ள மந்திரி முதலானோர் இராச்சிய பட்டாபிஷேகங் கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்க, மூத்தவனுங் குணவானுமான இராமனிருக்க யான் முடிசூடத் தகுதியுள்ளேனல்லே னென்று பரதன் மறுத்து, ஸ்ரீராமபிரானை விரைவில் அழைத்துக்கொண்டு வந்து அவர்க்குப் பட்டாபிஷேகம் செய்விக்கின்றேன் என்று சொன்னன்.

பின்னை—ஐகாரச்சாரியை பெற்ற இடைச்சொல். தன்—சாரியை. இராமன்—சரணம் புகுந்தவரிடத்தில் மிக்க அன்பு உள்ளவனுதலின், தான்சரணம் புகுந்தால் வருவதுசித்தம் என

கினைத்து நாளைத்தருவன்என்று துணிந்து கூறினன். என்று — கினைப்பொருளில் வந்த இடைச்சொல். (உக)

சடையும்வற்கலை யுந்தரித்தாங்கிரு
புடையுமன்னரும் தாயரும்போயினர்
இடையகங்கைக்குக ணெடிமேறிப்போய்
கொடிகொள்சித்திர கூடஞ்சென்றெய்தினன்.

(இ - ள்.) ஆங்கு - இராமன் தரித்ததுபோல், சடையும் வற் கலையும் தரித்து - சடைமுடியும் மரவுரியையும் தரித்துப் (பர தனென்ல்ல), இருபுடையும் - இரண்டு புக்கத்திலும், மன்னரும் தாயரும் பேரினர் - அரசர்களும் தாய்மாரும் (சூழ்ந்து) சென் றார்கள்; இடைய கங்கை - வழியிடையிலுள்ள கங்காநதியை, குகனெடி ஏறிப்போய் - குகனுடன் ஓடம் ஏறிச்சென்று, கொடி கொள் சித்திரகூடம் - பிரசித்தமாகிய சித்திரகூட பர்வதத் தை, சென்று எய்தினர் - போய்ச் சேர்ந்தார்கள்.

ஸ்ரீராமபிரான் சடையும் மரவுரியும் தரித்திருப்பதுபோல் தானும் தரித்து, உடனே சேனையோடும் மந்திரி முதலியவரோ டும் அரசரோடும் தாய்மாரோடுங் கூடப்புறப்பட்டுக் கங்கைக் கரைக்கு வர, இவன் இராமனுக்குப் பகைவன், காட்டிலும் இராமனை நிற்க ஒட்டாமல் துரத்தப்போகிறன் என்று குகன் ஐயமுற்று ஏதிர்க்க முயன்று, பரதனைக் கண்டவுடன் மனந் தெளிந்து, ஓடம்விட்டுக்கங்கையைக்கடத்தி, தாண்டிச்சென்று சித்திரகூட பர்வதத்தைச் சேர்ந்தான்.

கொடி — பிரசித்தியை உணர்த்துவதோர் குறிப்புச்சொல்; அல்லது கொடிகளால் வேய்ந்த மண்டபங்கள் பல அமைந்தது என்னவும் கொள்ளலாம். (சித்திரம் = ஆச்சரியமான, கூடம் = முடி.) பார்ப்பவர்க்கு வெகுவியப்பு தோன்றும் முடிகளுடை யது. புடையும் — முற்றும்மை. இடைய — குறிப்புப்பெயர் எச்சம். ஒடு = ஏதுப்பொருளில் வந்தது. (உஉ)

வையமாளுடையா னீவ்ணங்கிப்பின்
ஐயன்வான மடைந்துகூறினன்
ஐயகோவென்ற ரற்றியிராகவன்
கையினுலக்க டன்கழித்தானரோ.

(இ-ள்.) வையம். ஆளுடையானீன வணங்கிஎல்லாவுலகையும் அடிமையாக உடைய ஸ்ரீராமபிரானைத் தொழுது, பின் ஐயன் வானம் அடைந்ததும் கூறினன்-பின்பு பிதாவாகிய தசரதசக் கிரவர்த்தி திருநாடடைந்ததும் சொன்னன் ; ஐயகோ என்று அரற்றி-ஓ ஐயனே என்று அலறிப்புலம்பி, இராகவன் கையி னுல் அக்கடன் கழித்தான்- இராமன் கைகளினுலே அச்சடங் குகளை முடித்தான்.

எவ்வுலகும் அடிமையாகவுடைய சீராமனைப் பரதாழ்வான் தொழுது, தசரதசக்கிரவர்த்தி திருநாடடைந்தது கூறினன். அதுகேட்டு இராகவன் சிறிதுநேரம் புலம்பி பின் தசரதனுக்கு எல்லாச்சடங்கும் செய்து முடித்தான்.

பொருட்செல்வம் வனத் தின்மையால் நீர்க்கடனும் பிண்ணு க்குப்பிண்டமும் செய்து சடங்குமுடித்ததனுல் கையினுல் என் றார். ஆர்ய என்னும் வடமொழி பிராகிருதத்தில் அய்ய என் றுகித் தமிழில் ஐய என வழங்குகின்றது. ஹோ=கோ—இரக் கக்குறிப்பிடைச்சொல். அரோ - அசைநிலை. (உக)

ஆதிமாமுடி சூடென்றடிதொழப்
போதியேழிரண் டாண்டுபொறுத்தியென்
றேதமின்றியி ராகவன்கூறலும்
பாதுகங்கொள்ப ரதனும்போயினன்.

(இ - ள்.) ஆதி மா முடி சூடு என்று - பழமையாய்க் குல முறையில் வந்த பெரிய கிரீடத்தைத் தரித்துக்கொள் ளென்று (வேண்டி), அடிதொழ - திருவடியைப் (பரதன்) சரணம்புக, ஏழ் இரண்டு ஆண்டு போறுத்தி - பதினுலுவருஷம் பொறுத் துக்கொள் ; போதி என்று-அயோத்திக்குப்போ என்று, ஏதம் இன்றி இராகவன் கூறலும் - மனதில் களங்கமில்லாமல் இரா மன் அருளிச்செய்தவுடன், பரதனும் - பரதாழ்வானும், பாது

கம்கொள் - திருவடிநிலையைப்பெற்றுக்கொண்டு, போயினன்- (அயோத்திபோய்ச்) சேர்ந்தான்.

மதுமுதல் தொன்றுதொட்டுவந்த பெருமையுள்ள அரசமுடியைக் குலமரபின்படி மூத்தோனுகிய நீயே அணிந்து இராச்சியபாரம் செய்யவேண்டுமென்று பரதாழ்வான் சரணகதிபண்ண, சீராமபிரான் தந்தையைப் பொய்யனுக்குவது நமக்கு அறமல்ல ஆதலின், பதினன்குவருடம் சென்றவுடன் யான் வருகிறேன், நீ அயோத்திக்குச்செல் என்றுசொல்ல, பரதன் அந்தப்பாரம் தேவரீர் திருவடிக்கே இருக்கவேண்டும் என்று பலவாறு வேண்டிக்கொள்ள பக்தவச்சலன் அவ்வாறே பாதுகம் அளிக்க, அதைப் பெரும்பேறுகப் பெற்றுத் தலையில் முடிபோல அணிந்துகொண்டு அயோத்திபோய்ச் சேர்ந்தான்.

ஆதிமுடி— சூரியன்போன்ற முடியென்றும் பொருள்படும். சூடு — இவ்வேவல்வினை இங்கு வேண்டிக்கோடலில் வந்தது. சிதிகொள்வதுபோல் தேவதேவர்க்கு மெட்டாத்திருவடிநிலையைப் பெரும்பேறுகக் கொண்டமைதோன்ற கொள் என்னும் கூறினர். [வினை - சூ - கூஉ.] ல் இலேசினுல் கொள் என்னும் முதனிலை வினை எச்சப் பொருட்டாய் வந்தது. (ஊச)

அயோத்தியாகாண்டக்கதை முற்றிற்று.

III. ஆரண்யகாண்டம்.

விடங்கொள்வேற்கைவி ராதனைவீட்டிப்போய்த்
தடங்கொள்வீடு சரபங்கனுக்களித்
தடங்கவாவம கத்தியன்றந்தபின்
இடங்கொள்பஞ்சவ டியிற்சென்றெய்தினன்.

(இ - ன்.) விடங்கொள் வேல் கை விராதனை - விஷம் பூசிய வேலாயுதத்தைக் கையில்தாங்கியவிராதன் என்னும் அரக்கனை, வீட்டிப்போய் - கொன்று (அப்புறஞ்) சென்று, சரபங்கனுக்கு தடம்கொள் வீடு அளித்து-சரபங்கமாமுனிவருக்கு விசாலமுள்ள மோக்ஷத்தைக்கொடுத்தருளி, அகத்தியன் ஆவம் அடங்க

தந்தபின் - அகஸ்தியமாமுனிவன் அம்பறாத்தூணிகளையும்(வில் தண்டு வாள் முதலானவைகளைக்) கொடுத்த பின்பு, இடங்கொள் பஞ்சவடியில் - விசாலமான இடமுள்ள பஞ்சவடி என்னுமிடத்தில், சென்று எய்தினர் - போய்ச்சேர்ந்தார்கள்.

பரதன் அயோத்திக்குச் சென்றபின்பு இராமன் இவ்விடத்திருந்தால் அயோத்தியிலுள்ளார் அடிக்கடி வருவார்களென்று நினைத்துத் தண்டகாரணியம் போகும்நெறியில் தம்பியும்சீதையும் தானும் அத்திரிமகாரிஷி ஆச்சிரமம் சென்று அவர் பத்தினியாகிய அநசூயை ஜானகிக்கு அணிகளும்பட்டாடைகளும் அளித்துப் அலங்கரிக்கப்பெற்றுத் தண்டகாவனம் புகுந்தவுடன் தும்புரு என்னும்பெயருள்ள கந்திருவன், குபேரன்சாபத்தினால் இராக்ஷதனாய் விராதன் என்னும் பெயர் பெற்றுவனத்தில் திரிபவன், சீதையைத் தூக்கிக்கொள்ளக்கண்டுஇராமலக்ஷ்மணர்கள் எதிர்க்க அவனைவிட்டு இவர்கள் இருவரையும் தூக்கிக்கொண்டு செல்ல, தோள்களைவெட்டிக் கொன்றுவிட்டு அவன் தன் பிறப்பையுணர்த்தி வேண்டிக்கொண்டபடி புள்ளம்வெட்டிப் புதைத்துவிட்டுச் சரப்ங்கமுனிவர் ஆச்சிரமம் சேர்ந்தபோது இந்திரன் அம்முனிவனைத் தேவலோகத்துக்கும் பிரமலோகத்துக்கும் எழுந்தருளப் பிரார்த்திக்க அவர் விரும்பாமல் ஸ்ரீராமபிரான் சேவைக்குக் காத்திருந்து அவர் எழுந்தருளினவுடன் சேவித்து எதிரில் அக்னிப்பிரவேசம்பண்ணி மீளாப் பதமடைந்தார். அவர்க்கு மோக்ஷம் கொடுத்தபின்பு வாலகில்லியர்கண்டு மகிழ அகத்தியர் ஆச்சிரமம்சென்று முன் வருணனிடத்தில்கொடுத்த வில்லும், தூணீரமும், வாளும், தண்டும் அவர் தரப்பெற்றுக்கொண்டு வழியில் சடாயு என்னும் கழுகுக் கரசாகிய தம் தந்தையின் நண்பனைத் தரிசித்துப் பஞ்சவடி சேர்ந்தார்கள். அரக்கன்போல் ஆயுதமும் கொடியது என்பது தோன்ற விடங் கொள்வேல் என்றும், மற்றெல்லா வுலகங்களின் அளவினும் மும்மடங்குற்றது [திரிபாத் விபூதி] என்று தோன்றத் தடங்கொள் என்றும், மனதுக்கின்பம்தருமிடமுள்ளதாதலால் இடங்கொள் என்றும், கூறினர்.

பஞ்சவடி—ஐந்து ஆலமரத் தொகுதியுள்ள தோரிடம், அது அகண்டகோதாவரிக்கரையில் நாசிகாத்திரியம்பகத்துக்குச்சமீபத்தில் உள்ளது. வீட்டிடை—பிறவினை யிறந்தகாலவினையெச்சம். வீடு—முதனிலைத் தொழிலாகுபெயர். ஆவம் என்பது மற்றவில்முதலியவற்றிற்கும் உபலக்ஷணம். "ஒருமொழியொழிதன்னினங்கொளற் குரித்தே." [பொது - சூ - எ.] (உரு)

மங்கைகூர்ப்ப நகைப்பெயர்மாதராள்
கொங்கைநாசி குழைமோடரிந்தபின்
அங்கையிற்றன் வயிறத்தாவெனக்
கங்குலழல்வாழ்க்கைக் காவலுக்குரைசெய்தாள்.

(இ - ள்.) மங்கை சூர்ப்பநகைப்பெயர் மாதராள் - மங்கைப்பருவமுள்ள சூர்ப்பநகை என்னும் பெயரினளாகிய அழகுள்ள பெண்ணினுடைய, கொங்கை நாசி குழையோடு அரிந்தபின் - தனங்களையும் மூக்கையும் காதையும் அறுத்தவுடன், அங்கையில் தன்வயிறு அலைத்து - கைகளால் தன்வயிற்றில் அறைந்துகொண்டு, ஆ என - ஆ வென்று அழுது, கங்குல் வாழ்க்கை காவலுக்கு உரைசெய்தாள் - இரவில் சஞ்சரிக்கும் தன்மையுள்ள காவல் என்னும் அரக்கனுக்குச் சொன்னாள்.

அங்கு இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை என்பவள் இராமலக்ஷ்மணர்கள் அழகுகண்டு வியந்து, தெய்வப்பெண்போல் அழகும் பருவமுமுள்ள பெண்வேடம்கொண்டு வந்து தன்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி இராமனைப் பிரார்த்திக்க, அவன் "எனக்கு மனைவி யிருக்கின்றனள் காகுலன் என்தம்பியிடம் செல்லென அவனிடம்சென்று வேண்டியான்சேவகன் என்றும், அரசனையே விரும்பு என்று சொல்லஅங்குமிங்கும் திரிந்து இயலாமையால் சீதையிருப்பதறிந்து சென்றே அவன் கலியாணஞ் செய்துகொள்ளவில்லை என்று ஜானகியை விழுங்குதற்குத் தூக்கமுயல, அதுகண்டுபெருமாள் கட்டளைப்படி இளையோன் மூக்கு முலை காதுகளை அறுத்துவிட்டான். அவள் ஓ என்று கதறி வயிற்றில் அடித்துக்கொண்டு தனக்கு அண்ண

ணுகிய கரன் என்பவனிட்டத்தில் சென்று தன்னைக்கண்டு அவர்கள் மயங்கினதாகவும் தானியலாமையின் மூக்கு முதலியவற்றுத்ததாகவும் ஓரைத்து அழுதாள்.

ஜனஸ்தானம் கரனிருக்கும் பட்டணம்; அதுதான் முன் சொன்ன நாசிகாத்திரியம்பகம்.

மாதரார்—அழகுள்ள மங்கையிடம் பூண்டதை குறிப்பிக்கின்றது. சூர்ப்பநகை—முறம்போல் நகமுள்ளவள். கை அகம் என்பது அகங்கை என மாறினது இலக்கணப்போலி. அகங்கை—அங்கை எனச்சந்தியில் ஆயிற்று (மெய்புணர்-சூ-கக்.) ஆ—இரக்கக்குறிப்பிடைச்சொல். (உசு)

கரனுந்தூடண னுங்கலினப்பரித்
திரிசிராவுஞ் சினப்படைக்கூட்டமும்
வரனிராமன்கை மாண்டதெல்லாங்கடி
தூசெய்தாட்சென் றிராவணற்கோடியே.

(இ-ள்.) கலினப்பரி - கடிவாளம் பூட்டிய குதிரைச் சேனையுள்ள, கரனும் தூடணனும் திரிசிராவும்-கரன் தூடணன் திரிசிரன் என்னு மூவர்களும், சினப்படை கூட்டமும் - பராக்கிரமமுள்ள சேனைத்திரளும், வரன் இராமன்கை மாண்டது எல்லாம்-உத்தமனுகிய ஸ்ரீராமபிரான் ஒருவன் கையினுல் எல்லாமிறந்ததை, கடிது ஓடி சென்று-விரைவாக ஓடிப்போய், இராவணற்கு உரைசெய்தாள் - இராவணனுக்குச் சொன்னுள்.

கரன் தூஷணன் திரிசிரசு என்னும் இராக்கதத்தலைவர்களும் பதினுலாயிரம் ரதாதிபதிகளும் அவர்கள் சேனைகளோடி வந்து எதிர்க்க இளையபெருமானைப் பிராட்டிக்குக் காவலாக வைத்துவிட்டு ஸ்ரீராமபிரான் தனியாய்நின்று வில்லைத்துப் பல கணைகள்தொடுத்து அளவிடற்கரிய அரக்கர் சேனைகளையும் சேனுபதிகளையும் தலைவர்கள் மூவரையும் கொன்றுவிடச் சூர்ப்பநகை இலங்கைக்கோடி இவை எல்லாம் இராவணனுக்குச் சொன்னுள்.

வரன் — சாமுந்திரித லக்ஷணப்படிச் சிறந்தவன். உம் — எண்ணும்மை. மாண்டது — தொழிற்பெயர். கடிது—குறிப்பு முற்று ; வினையெச்சமாய் சென்றுள் என்பதற்கு உரியராய் நின்றது. (உஎ)

சீதைமற்றவன் தேவியைக்கொண்டியான்
போதலுற்றென் புகுந்ததிதென்றலும்
காதலுற்றனன் காண்குறுமாசையான்
மாதுலற்குஒரு மாற்றஞ்சென்றோதினான்.

(இ-ள்.) அவன்தேவி சீதையை - மேற்கூறிய இராமன் தேவியாகிய சீதையை, யான் கொண்டுபோதல் உற்றேன் - எடுத்துக்கொண்டுபோகத் தொடங்கினேன் ; இது புகுந்தது என்றலும்-இத்தப்பங்கம் சம்பவித்தது என்று சூர்ப்பநகை சொன்னவுடன், காதல் உற்றனன் - ஆசைகொண்டு, காண்குறும் ஆசையால் - சீதையைக்காணவேண்டும் என்கிற ஆசையினால், சென்றுமாதுலற்கு ஒருமாற்றம் ஓதினான் - போய் மாமனாகிய மாரீசனுக்கு ஒருபேச்சுக்கூறினன்.

அப்படிப்பட்ட வல்லமையும் அழகுமுள்ள இராமனுக்கு மனைவியாகிய சீதையை உனக்காகக் கொண்டுவர எடுத்துக்கொள்வதற்கு முயன்றேன் இந்தச்செவி மூக்கு முதலிய அறுப்பு உணல் ஆகிய பங்கம் தனக்குச் சம்பவித்தது என்று சூர்ப்பநகைசொல்ல, இராவணன் சீதைமேல் காதல்கொண்டு மாரீசனிடத்துக்குப்போய் சீதையைக்கொண்டுவருவதற்குத் துணையாய் நின்று அதற்கேற்ற உபாயஞ் செய்யவேண்டும் என்று சொன்னான்.

தேவியை என்பதில் உள்ள ஐ உருபை சீதை என்னும்சொல்லுக்குக் கூட்டி உரைக்கலாயிற்று. காண்குறும்—காண்கு—குச்சாரியைபெற்ற முதனிலைத் தொழிற்பெயரோடு உறு-துணைவினை சேர்ந்து, அனைத்துமோர்பகுதியாய், உம் - விகுதிபெற்றது ; செய்யும் என்னும் பெயர் எச்சம். (உஅ)

மறுத்துணர்த்தினன் மாமன்மாரீசனும்
வெறுத்துரப்பினன் வெஞ்சொலிராவணன்
பொறுத்திநீயெனப் பொன்னிளநவ்வியாய்
நிறுத்தசீதை நிலையிற்சென்றெய்தினன்.

(இ-ள்.) மாமன் மாரீசனும் மறுத்து உணர்த்தினன் - மாமனாகிய மாரீசன் என்பவனும் (நீமுயல்வது தகுதியல்லவென்று) மறுத்து அறிவுறுத்தினன்; வெஞ்சொல் இராவணன்வெறுத்து உரப்பினன்-கடுமையான சொல்லையுடைய இராவணன் வெறுத்துவெருட்டினன்; (பின்பு) நீபொறுத்தின - நீபொறுத்துக்கொள் என்று (இராவணனுக்குச்) சொல்லி, பொன் இள நவ்வியாய் - இளமையாகிய பொன்மானாய், நிறுத்த சீதை நிலையில் - சீதை இருந்த இருப்பிடத்தில், சென்று எய்தினன் - போய்ச் சேர்ந்தான் (மாரீசன்.)

மாரீசன் இராவணன் சொன்னதற்கு நான் இராமன் திறல் அறிவேன்; நான் பட்டவன், உனக்கு இம்முயற்சி வேண்டாம் என்று புத்திசொல்லி மறுக்க, இராவணன் கோபாக்கினி வாளுருவிக்கொண்டு வெருட்ட, பயந்து பொன்மான் வேடம்பூண்டு சீதை இருக்கும் ஆச்சிரமத்துக்கு அருகில் சென்றான்.

மாரீசனும் - உம்-முன் மாலியவான் முதலினோர்புத்திசொன்னதைத் தழுவினமையால் இறந்தது தழுவிய எச்ச உம்மை. உரப்பு - பகுதி, அன் - விகுதி, இன் - இடைநிலை, உகரக்கேடு சந்தி சேர்ந்து உரப்பினன் என்றாயது. (கூ)

" கண்டுசீதை கவர்ந்துதாவென
அண்டர்கோனு மதன்பின்னேகினன்
கொண்டமாயை யறிந்துகொலைசெய்தான்
ஒண்டொடியிலை யோயென்றுரைத்ததே.

(இ-ள்.) சீதை அதுகண்டு கவர்ந்து தா என - ஜானகி அந்தமானைக்கண்டு பிடித்துத் தாவென்று சொல்ல, அண்டர்கோனும் அதன்பின்னர் ஏகினன் - தேவர்களுக்குத் தலைவனாகிய இராமசந்திரனும் அம்மானின்பின்னே சென்று, கொண்ட மா

யை அறிந்து கொலைசெய்தான் - (அது) கொண்டிருந்தமாயை யை யறிந்து கொன்றுவிட்டான்; (அது) ஒள் தொடீஇ இளை யோய் என்று உரைத்தது - (அந்தமான்) சீதாய், இலக்ஷ்மணு என்று கூவி (இறந்தது).

அந்தமானைச் சீதைகண்டு, அதைப்பிடித்துத் தரவேண்டுமென் று இராமசந்திரனைப் பிரார்த்திக்க, அவரும்தொடர்ந்துசெல் லிற்சென்று இது மானன்று இராக்ஷதமாயையென அறிந்து ஓர்கணை எய்து வதைக்க, அது ஆ சீதா! ஆ லக்ஷ்மணு! என்று கூவியிறந்தது.

அண்டர்கோனும்-உம்-உயர்வுசிறப்பு. ஒண்டொடீஇ - ஒள் தொடி-பிரகாசமான வளையல் அணிந்தவள், பண்புத்தொகை ப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; அ்ளபெடைசெய்யுமை விளியுருபு. (கூ0)

அன்னமன்னவ ளவ்வுரைகேட்டலும்
தன்னாயகன் தம்பியையவினள்
பன்னசாலையிற் பார்ப்பனவேடமாய்
இன்னல்செய்யஎவிராவணனென்றினன்.

(இ-ள்.) அன்னம் அன்னவள் அவ்வுரைகேட்டலும்அன்னம் போன்ற சீதை அம்மொழிகேட்டவுடன், தன்னாயகன் தம்பி யை ஏவினள் - தன்னுடைய கணவனுக்குத் தம்பியாகிய இலக் ஷ்மணப்போகவிட்டாள்; பன்னசாலையில்-(அவள்இருந்த) பன் னசாலையில், பார்ப்பன வேடமாய் - பிராமண சந்நியாசிவேட ங்கொண்டு, இராவணன் இன்னல் செய்ய எய்தினன்-தசக்கிரீ வன் (பிராட்டிக்குத்) துன்பம் விளைக்க வந்தனன்.

சீதை அந்த மாரீசனுடைய பேச்சைக்கேட்டுத் தன்நாயகனு டைய குரலென்று நினைத்து, என்னதீங்கு வந்ததோ என்று ஐயமுற்று, இளையபெருமாள் தேறுதல்சொல்லியும் கேளாமல் அவனை அனுப்பிவிட்ட வுடனே சமயம்பார்த்திருந்த இராவ ணன் சந்நியாசிவேடம்பூண்டு சீதையிருக்கும் ஆச்சிரமத்துக்கு வந்தனன்.

அன்னமன்னவன்—குடையிலும் மென்மையிலும் அன்னம் போன்றவள். அன்னநன்னடையும் அரக்கர்மாயையும் அறிந்தவ னுடைய பலமிதமுதல முறுத்துக்கொன்னன், சீதை 'எவ்வினைச் சென்றதனைப் புலவர்தமாறாய்ப் போதகச்சொற்புனர் என்றதன் தேரன் றுஞ்சுது. பன்னசாலை—(பர்ணம்=இலை) இலைகளாற் கூரைத்த குடில். பிராம்மணன் என்னும் வடமொழி சிதைந்து பார்ப்ப னன்என்றயது; இங்கு சன்னியாசிக் கர்யிற்று. இராவணன்-அழ ச்செய்பவன். தன்ன—தான் என்னும் பொதுப்பெயர் அடியா கப்பிறந்த குறிப்புப் பெயர் எச்சம்; ஆறும்வேற்றுமையுருபு என்றல் பன்மையோடு முடியவேண்டுதலால் இங்கு பொருந் தாது. (ங்க)

மானமீது மடந்தையைக்கொண்டனன்
போனபோது புகுந்தசுடாயுவை
ஈனமாக்கித்தா னேறியதேர்விடா
மீனவேலை யிலங்கையைமேவினன்.

(இ-ள்.) மானமீது - ஆகாயத்தின்மேல், மடந்தையைகொ ண்டனன் போனபோது - சானகியை எடுத்துக்கொண்டு போ னபோது, புகுந்த சடாயுவை-(ருகிவில் தடுக்கப்) புகுந்து போர் செய்த சடாயுவை, ஈனமாக்கி —பலஈனமாக்கி (வீழ்த்தி,) தான் ஏறிய தேர்விடா - தான் ஏறின இராதத்தைச் செலுத்தி, மீனவேலை இலங்கைகளைய - மீன்களுள்ள கடல்சூழ்ந்த இலங்கை யை, மேவினன் - போய்ச்சேர்ந்தான்.

ஆற்றுத்தின்மீது சீதையை எடுத்துக்கொண்டு போகையில் சடாயு தன்னும் கழுகரசுதண்டி, இராவணனைத் தடுத்து யுத்த ஞ்செய்து அவன் தேர்முதலியவற்றை அழித்துவிட, அவன் இறகை வெட்டித் தள்ளிவிட்டு மறுபடியும் தேர்ஏறிக்கொண்டு இலங்கைநோக்கிச் செல்லுகையில், ருசியமூக பர்வதத்தில் சா னகி தன் ஆணிதனக்கமற் றி முன்றனை [முக்தரணி]யைக்கழித் து அதில் கட்டி ஓர் அடையாளமாகப்போட்டுச் சீதை அழுது கொண்டு இருக்க, இராவணன் தேரோடு இலங்கைநகரஞ்சேர் ந்து அசோகவனத்தில் அரக்கியர் காவலில் அவளைவைத்தான்.

வானம்—என்பது வழக்கில் மானம் என மருவியது. மடந்தை = (அரக்கர் மாயமறியா) மடப்ப முள்ளவள். ஈனம் = குறைவு, (குற்றியிர்.) மீன்வேலை—திமிங்கிலமுதலிய பெரிய மீனுள்ள கடல்; பிறர்செல்ல அருமையான அரண் என்பது கருத்து. (கூடீ)

மன்னன்ராகவன் தம்பியைவந்தவா
றென்னேயென்ன வியன்றதுரைசெய்தான்
பன்னும்வீரரும் பாவையைநாடிப்போய்
முன்னம்வீழ்ந்த சடாயுவைமுன்னினார்.

(இ-ள்.) மன்னன் ராகவன் - வேந்தனுகிய இராமசந்திரன்; தம்பியை - தம்பியாகிய இலக்குவனைப்பார்த்து, வந்தவாறு என்னே என்ன - வந்தவிதம் என்னவென்று கேட்க, இயன்றது உரைசெய்தான் - நடந்த செய்தியைச் சொன்னான்; பன்னும் வீரரும் - உலகத்தாரால் வியந்து சொல்லப்படும் வீரராகிய இராகவனும் தம்பியும், பாவையை நாடி போய் - பதுமை போல் அழகுள்ள (பிராட்டி)யைத் தேடிச்சென்று, முன்னம் வீழ்ந்த - எதிரில் விழுந்திருக்கிற, சடாயுவை முன்னினார் - சடாயுவை எதிரிற் கண்டார்கள்.

இராமன் தம்பியை ஏன் சீதையை விட்டுவந்தாய் என்றுகேட்க, பிராட்டி ஓர் அவயக்குரல் கேட்டு உமதுகுரல் என்றுநினைத்துத் தன்பமுற்று யான் எவ்வளவு சொல்லியும் கேளாமல் நிர்ப்பந்தித்து அனுப்பினதனால் வந்தேன் என்றுசொல்லக்கேட்டுச்சீதைக்கு என்ன தீங்கு நேரிட்டதோ என்று விரைவாய் வந்து ஆச்சிரமத்தில் அவளைக்காணாமல் தேடிச்செல்லுகையில், சடாயுவழியில் குற்றுயிராய் வீழ்ந்திருக்கக்கண்டு, ஜானகியின் வரலாறு கேட்க, இராவணன் தேர்மேல் எடுத்துக்கொண்டு இலங்கைக்குச்சென்ற செய்தியும், தான் யுத்தஞ்செய்து வீழ்ந்ததையும், அவன் சொல்லி உயிர்விட்டு இராமனருளால் மேலானஉலகமடைந்தான். சடாயு—பல மயிர்கள் சேர்த்துத் திரித்ததுபோன்ற ஆயுளுள்ளுவன; அதாவது மிகுந்த ஆயுளுள்ளவ

னென்பதாம். இவர் அருணனுடைய பிள்ளை, இவர்க்கு அண்ணன் சம்பாதி என்பவர்.

பாவை—உவமைபோற்பெயர். மன்ன னிராகவன்—இருபெயரெ ட்டுப் பண்புத்தொகை. எவன் என்னும் வினாவினைக் குறிப்புமுற்று இடைக்குறையாய் ஐகாரச்சாரியையைபெற்று என்னை என்றது; என், என்ன, ஏன் எனவும் மாறி வழங்கும். முன்னம்—அம் - சாரியை; முன்பு, முன்னர், முன்னே என்றும் வழங்கும். விழு நீட்டலும் கடைக்குறையும் பெற்ற வீழ்-பகுதி, அ் - வீகுதி, த் - இடைநிலை, த் - சந்தி மெலித்தலால் ந் ஆய், வீழ்ந்த ஆயிற்று. (கூ)

வேறு கலிவிருத்தம்.

இறந்தவெருவைக்கரசை யீமவெரிமூட்டி
முறஞ்செவியயோமுகியை மூக்கினையரிந்து
மறந்தருகவந்தனையும் வானினிடைவைத்திட்
டறந்திகழ்தருஞ்சவரி யாச்சிரமமுற்றார்.

(இ-ள்.) இறந்த எருவைக்கு அரசை - மரணமடைந்த கழுக்கர்ச்சாதிய சடாயுவை, ஈம எரிமூட்டி-சிதையடுக்கித் தீமூட்டித்தகனஞ்செய்து, முறம்செவி அயோமுகியை - முறம்போலும் காதுள்ள அயோமுகி என்னும் இராக்ஷசியை, மூக்கினை அரிந்து-மூக்கையறுத்து, மறம்தரு கவந்தனையும் - பாவத்தொழில் செய்யும் கவந்தன் என்னும் இராக்கதனையும், வானினிடைவைத்திட்டு-சுவர்க்கத்தில் சேர்த்து, அறம் திகழ்தரும் - தருமம் விளங்குகிற, சவரி ஆச்சிரமம் - சவரியென்பவளுடைய ஆச்சிரமத்தை, உற்றார் - அடைந்தார்கள்.

சடாயு பரமபதம்சேர அவனைத் தன் பிதாவாகப்பாவித்துத் தகனஞ்செய்து கடன்கழித்துவிட்டு, அப்புறம் கிளைஞ்சவனம் கடந்து மதங்கமுனி ஆச்சிரமத்துக்கு இடையில் லக்ஷ்மணன் பெரியருகையொன்றுகண்டு, அதற்கு அருகில் அயோமுகி என்னும் அரக்கி சூர்ப்பநகைபோல் வலிமைசெய்ய, அவள் மூக்கையரிந்துவிட்டு, பலயோசனைதூரம் நீண்ட இரண்டுகையும் கொண்டு அகப்பட்ட ஜீவன்களை உண்ணுகிற கவந்தனென்பவன்

ஸ்ரீக்குள் அடைப்பட்டு, இருவரும் வீரர்கொண்டு வெட்டித் தள்ளி அவனைத் தகனம்செய்ய, தவந்தன் சுந்தருவ உருவம்பெற்று இராமனைத்துதித்து வழிசொல்லக்கேட்டுச் சபரி என்னும் தவம்செய்பவள் இருக்கும் ஆசிரமம்போய்ச் சேர்ந்தார்கள்.

சட்டாயு தசரதனுக்குச் சினேகிதனையால் இராமனுக்குத் தாத்தமுறைகொண்டவன்.

அயோமுகி—இரும்புபோல் முகமுள்ளவள். கவந்தம்=தலையில்லாவுடல்; தனு என்னும் யக்ஷனுக்குப்பிள்ளை. தூலசிரசு என்னும் முனிவர் சாபத்தால் அரக்கனாய், பிரமன்வரால் தீர்க்காயுள்பெற்று, இந்திரனோடு எதிர்த்து, அவன் வச்சிராயுதத்தாற்புடைக்க அவனுக்குத் தலை வயிற்றில் அழுந்தியது; அது முதல் கவந்தன் என்று பேர்பெற்றான். (கூச)

ஆரணியக்காண்டக்கதை முற்றிற்று.

IV. கிஷ்கிந்தாகாண்டம்.

மிக்கசவரிக்கினிய வீடருளிவிட்டும் —
பக்கமதுமிக்கமலர்ப் பம்பைகதிகண்ணும்
றக்கணமகன்றனம னென்வுரைப்பச்
சுக்கிரிவனைத்துணையெ னத்தொடர்வுகொண்டானன்.

(இ-ள்.) மிக்கசவரிக்கு-(லக்தி) மிகுந்த சவரியென்பவளுக்கு, இனிய வீடு அருளிவிட்டு- பேரின்பமுள்ளதாகிய மோக்ஷத்தைக்கொடுத்தருளி, பக்கம்-(விழியின்) பக்கத்தில், மிகுமிக்க மலர் பம்பைநதி கண்ணுற்று-தேன் நிறைந்த மலரி மிகுந்த பம்பை என்னும் சரசைப்பார்த்து, அக்கணம் அகன்று-அந்த க்ஷணமே நீங்கி, [அப்புறம்போய்], அநுமன் ஆமென வுள்ளப-அநுமான் (சுக்கிரீவனைச் சினேகிப்பது) நல்லது என்று சொல்ல, சுக்கிரீவனை- சுக்கிரீவன் என்னும் வானரனை, துணை என தொடர்வு கொண்டான்-சகாயம் ஆகச் சினேகித்தான்.

ஞானமும் தவமும் மிகுந்தவள் ஆகிய சவரி இராமனுக்காக இனிய பழங்களைச் சுவைபார்த்துப்பார்த்து வைத்திருந்து சம

ர்ப்பிக்க, இராமபிரானும் அமுதினு மினிதாகக்கொண்டு அமுது செய்து பின்பு அவளுக்கு மோக்ஷம் கொடுத்துப் பம்பாசரக கண்டு மகிழ்ந் தபின் அநுமானைக்கண்டு அவர்சொல்லின்படிச் சுக்கிரீவனோடு நட்புகொண்டு ருசியமூகத்தில் பிராட்டியின் அணிகலங்களை சுக்கிரீவன் முதலான வானரர்கள் எடுத்துகொடுக்கப் பார்த்து சிந்தையோடிருந்தனன்.

அநுமான்—அநு-கதுப்பு, அதனையுடையவன் என்பதுபொருள். இவன் பிறந்தவுடன் சூரியனை ஓர்கனி என நினைத்து அவ்வுதற்கு எழும்பிப்பாய அதுகண்டு இந்திரன் வச்சிராயுதத்தினு லடித்து வீழ்த்த, பாறையிற்பட்டுக் கதுப்புநீண்டது. நீண்டகதுப்புள்ளவன் ஆதலின் அப்பெயர் வழங்கியது.

சுக்கிரீவன்—நல்ல கழுத்துள்ளவன், இராமனுல் கழுத்தில் கஜபுஷ்பக்கொடி [ஊளுக்கொடி] சூட்டப்படுவதனுல் அழகு பெறுவதை மூன்றியூகித்துத் தேவரிட்டபெயர். மிக்க—இறந்த காலப்பெயரெச்சம். மிகு-பகுதி, அ-விகுதி, பகுதியில் க் இரட்டித்துக் காலங்காட்டியது. இனிய-இனிமைப் பண்புபடியாகப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். மலர்ப்பம்பை—எங்கும்மலரோ அன்றி வேறுதோன்றுத பம்பை. நீளமூள்ள ஆறுபோலிருத்தலால் சரசை நதி என்றார்.

துணை என்பது வானரமென்று நினையாமல் சகோதரனக நினைத்தமையைக் குறிப்பிக்கிறது. (நூறு)

மந்தரமெனத்திகழ் மராமரமதெய்தே
துந்துபிகேளபர மெனச்சுவடுறுத்தி
இந்திரன்மகற்கியம லோகமருளித்தன்
அந்தணுடையவாளவன் மகன்பெறவளித்தான்.

(இ-ள்.) மந்தரம் என திகழ்-மந்தரமலைபோல் விளங்குகிற, மராமரமது எய்து - ஏழுமராமரங்களையும் ஓரம்பால் துளைத்து, துந்துபிகளேபரம் என-துந்துபி என்னுமிராக்ஷதன் சரீரம் என்று சுக்கிரீவன்சொல்ல, சுவடு உறுத்தி - அடையாளமாகத் (திருவடி விரலால்) ஊன்றி எறிந்து, இந்திரன்மகற்கு இயம

லோகம் அருளி-இந்திரன்மகனுகிய வாலிக்கு யமலோகங்கொடுத்து; தன் அத்தன்உடைவாள்-தன்தகப்பனுடைய உடையில் தரிக்கும் கத்தியை, அவன்மகன்-அவன்குமாரனுகிய அங்கதன், பெற அளித்தான் - பெறும்படி கொடுத்தான்.

சுக்கிரீவன், இராமன் வாலியைக்கொல்லும் வலியுள்ளவனே அல்லனே என ஐயுற்று மராமரம் ஏழையும் காட்டி, வாலிகட்டி அசைத்தால் இவை எல்லாம் அசையும் என்று சொல்ல, இராமன் அவ்வேழையும் ஒரே அம்பினுல் துளைத்துவிட்டு, முன்னே துந்துபி என்னும் எருமைக்கடாரூபமான அரக்கனை வாலிகொன்றெறிந்திருந்த சரீரம் இது எவர்க்குமசைக்கக்கூடாதுஎன்று சொல்லி சுக்கிரீவன்காட்ட, அதை காற்விரலால் தூக்கி பத்து யோசனைசெல்லும்படி எறிந்தான். இப்படி நம்பிக்கை உண்டு பண்ணியபின்பு வாலியையும் சுக்கிரீவனையும் சண்டை இடச் செய்து, ஒரேகணையால் இராமன் வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்கு அரசும் அங்கதனுக்கு இளவரசும் தொடுத்தான்.

அத்தன்—எதுகைத்தொடை நோக்கிமெலித்தல்பெற்றது.(1)

சுக்கிரிபனேத்தனது தொன்முடிகவித்தே
மிக்கதிறல்வானரரு மேவவரசெய்திக்
கக்கின்முகின்மிக்கமழைக் காலமதகன்றுல்
இக்கண்வருவாயென விராகவன்விடுத்தான்.

(இ-ள்.) சுக்கிரீபனே தனது தொல் முடிக வித்து - சுக்கிரீவனே அவனுடைய பழமையான முடியை அணியச்செய்து, மிக்க திறல் வானரரும் மேவ அரசு எய்தி - (சுக்கிரீவா நீ) மிகுந்த வலியுள்ள வானரர்கள் சூழ்ந்திருக்க அரசாட்சி யடைந்து, கக்கின் - பெய்தலையுடைய, முகில் மிக்க மழைகாலமது அகன்றுல் - மேகம் அதிகமாய்ச் சஞ்சரிக்கும் மழைக்காலம் நீங்கினுல், இக்கண் வருவாய் என இராகவன் விடுத்தான் - (நானிருக்கும்) இவ்விடத்துக்கு வரக்கடவை என்று அருளிச்செய்து இராகவன் அனுப்பினன்.

சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து வானரர்பணி கேட்பச் சிங்காசனத்தில் இருந்து அரசாண்டு மழைக்காலம் போனவுடனே தன்னிடம் வரும்படி விடைகொடுத்தனுப்பினன் இராமன்.

கக்கின்—கக்கு முதனிலைத்தொழிற்பெயர்; இன் சாரியை, காலமது — அது எழுவாய் உருபு. வருவாய் — ஏவல்வினை முற்று. (கூஎ)

சுந்தரனுமத்துணை துயர்க்கடலுளாழ்ந்தான்
இந்திரன்மகற்குரிய தெய்தினனிருந்தான்
வந்திலனருக்கன்மகன் மாரிகழிவும்றும்
தந்தனனெனத்தனது தம்பியைவிடுத்தான்.

(இ-ள்.) சுந்தரனும் அத்துணை துயர்க்கடலுள் ஆழ்ந்தான் — அழகுள்ள இராமனும் அவ்வளவுகாலவரையில்விசனமாகியகடலில் முழுகி இருந்தான்; அருக்கன்மகன் - சூரியகுமாரனாகிய சுக்கிரீவன், இந்திரன் மகற்கு உரியது-இந்திரன் மகனாகியவாலிக்கு உரியதான் (போகத்தை), எய்தினன் இருந்தான்-அடைந்தானாகி (சுகத்தில் நம்மைமறந்து) இருந்தான்; மாரி கழிவும்றும் வந்திலன் - (அதனால்) மழைக்காலம் நீங்கியும் வரவில்லை; தந்தனனென தனது தம்பியை விடுத்தான்-(ஆதலால்) அழைத்துக்கொண்டுவந்தாயா என்று தன் தம்பியாகிய இலக்ஷ்மணனை அனுப்பினன் (இராமன்.)

அம்மழைக்காலம்கழியுமளவும் இராகவன் சானகியைக்குறித்துச் சிந்தித்துக்கொண்டு இருந்தான், மழைக்காலம்கழிந்தும் சுக்கிரீவன் சுகானுபவத்தில் மூழ்கிமறந்திருக்க இராகவன்கோபம்கொண்டு இளைய பெருமானை அனுப்பி அழைத்துவா என்று சொன்னன்.

சுந்தரனும்—இராமன் தன்பத்துக்குத் தகாதவழகுள்ளவன் எனப்பொருள் படுதலால் உம்மை உயர்வுசிறப்பு. துணை—இங்கு அளவுப்பொருள். தந்தனை — விளைவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாயிற்று [பொது-சூ-கூ.] இங்கு னை என்பதில்

எடுத்தலோனை கொண்டு ஆ என்னும் விருச்சொல் வருவிக்கப் பட்டது. இதனை வட்டநூலார் 'காரு' ஸ்வரமென்பர்; இதனும் விளைவையே உறுதிப்படுத்துகின்றது. வந்திலன் — உடன்பாட் டெதிர்மறை வினைமுற்று. கழிவுற்றும் - உம்-இழிவு சிறப்பு. ()

மற்றவனைழைத்தருள மாருதியுமேனைக்
கொற்றவனும்வந்தனர், ராமனடிகூழி
லேற்றதுசெயக்கடவ தென்றனரிருந்தார்
மூற்றிழையைநாடவிடு மென்றிறைமொழிந்தான்.

(இ - ள்.) அவன் அழைத்தருள-(அண்ணன் ஆணைப்படிபோன) இலக்ஷ்மணன் அழைக்க, மாருதியும் ஏனைக்கொற்றவனும்-அநுமானும்மற்றைச்சுக்கிரீவனும், வந்தனர் இராமன் அடிகூழி-வந்து-இராகவனுடைய பாதங்களைச் சேர்ந்து, செயக்கடவது எற்றது என்றனர் இருந்தார் - செய்யவேண்டியகாரியம் எத்தன்மையது-என்றுபணிகேட்டுக்கொண்டிருந்தார்கள்; மூற்றிழையை நீடவிடும் என்று - சீதையைத்தேட (வானரரை) அனுப்பும் என்று, இறை மொழிந்தான் - சுவாமியாகிய இராமன் சொன்னான்.

இராகவன் ஆணைப்படி இலக்குவன் கோபத்துடன் கிட்கிந்தைக்குச்சென்று வாயிலில் நின்று வில் நாண் ஒலிக்கச்செய்தனன்; உடனே வானரர் எல்லாரும் நடுங்கினர். தாரை என்பவள் ஓடிவந்து இளையபெருமாளைத்தொழுது அவர் சினமாறும்படி அபராதக்ஷமாபணம் செய்தனள்; அநுமானும்வந்தடிபணிந்து காலம்தெரியாமற்போயிற்று க்ஷமிக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்ய, இராமர் கோபமாறினர். உடனே சுக்கிரீவன் முதலியவானரர் எல்லாரும் பெருமாள்திருவடியில்வந்து இறைஞ்சினர். பெருமாளும் பிராட்டியைத்தேடும்படிப் பணித்தருளினர்.

மற்று — அசைநிலை. மாருதி — வடமொழி, மாருதன்-வாயு, வாயுபுத்திரன் என்பதுபொருள். ஏனை — மற்றுஎன்னும்பொருள்தரும் இடைச்சொல். முற்றிழை — வினைத்தொகைப்புறத்து

வந்த அன்மொழித்தொகை ; எல்லாவேலைத்திறமும் முற்றுப் பெற்ற அணிகள் அணிந்தவள். இறை—பண்பாகுபெயர்.

கூடாமண்டம் - கூடுமிக்கச்செய்தல் ; வடசொல். (௫௯)

அன்றறுமனங்சத னறிந்தருள்செய்சாம்ப
னென்றவர்கடம்முட னிரண்டுகவிவெள்ளம்
சென்றனர்கடென்றிசையி னிற்கடிதுசென்றூர்
பின்றலில்பிலத்திடை புகுந்தனர்பிரிந்தார்.

(இ-ள்.) அன்று - அப்பொழுது, அநுமன் அங்கதன் அறிந்து அருள்செய்சாம்பன் என்றவர்கள் தம்முடன் - மாருதியும் அங்கதனும் முன்னறிந்து உணர்க்கவல்ல சாம்பவனும் என்றுசொல்லப்பட்டவர்களோடு, இரண்டு கவிவெள்ளம் - இரண்டுவெள்ளம் வானரசேனைகள், சென்றனர்கள் தென்திசையினில்கடிதுசென்றார் = புறப்பட்டுப்போய்த் தெற்குதிக்கில் தேடச்சென்று, பின்றல் இல் பிலத்திடை - பின்திரும்புதல் இல்லாத ஓர் குகையில், புகுந்தனர் பிரிந்தார் - புகுந்து பின்பு வெளிப்பட்டு வந்தார்கள்.

அநுமானும், அங்கதனும், சாம்பவன் என்னும் கரடிக்கரசனும், மற்றுமுள்ள வானரங்களும் இரண்டுவெள்ளம்சேனைகள் தெற்குத்திக்கில் தேடப் புகுந்து விந்தியமலையில் ஓர் குகையில் தீர்க்கதிலைல்தண்ணீர்தேடப்பிரவேசித்து அங்குள்ளவனங்கள் சுவர்ணமயமாயிருக்கக்கண்டு வியந்து பின்வழிதடுமாறி அநுமான் அங்கு இருக்கும்மேருசாவர்ணியின் புத்திரியாகிய சுயம்பிரபை எள்பவள் இவ்வனம் மயனால் பொன்கொண்டு நிருமிக்கப்பட்டது, ஏமை என்பவளுக்குப் பிரமன் கொடுத்தது என்றும் சொல்லி, தவப்பெருமையால் வானரர்களைக் கண்மூடச்செய்து வெளிப்படுத்தினள். பின்வானரர் எல்லாரும் வெளிப்பட்டுவந்தார்கள். அறிந்தருள்செய் சாம்பன் — திரிகாலமும் உணர்ந்தவன் என்பது பொருள்.

ஜாம்பவான் என்னும்வடமொழி சாம்பன் என்றுமிற்று. பின்றல்—தொழிற்பெயர், பின்று-பகுதி. (௬௦)

குன்றமுஞ்சினைகளுங் குழைந்தகானமும்
தென்றிசையெங்கணுந் தேடிக்காண்கிலர்
இன்றுயிர்விடுவதே நன்றென்றியாவரும்
மன்றல்சேர்மயேந்திர வரையைமேவினர்.

(இ - ள்.) தென் திசை-தெற்குதிக்கில், குன்றமும் சினைகளும் குழைந்தகானமும் எங்கணும் - மலைகளிலும் ஆறுகளிலும் துளிர்த்த காடுகளிலும் எவ்விடங்களிலும், தேடி காண்கிலர் ஆராய்ந்தும்சீதையைக்காணாதவர்களாய்,இன்றுஉயிர்விடுவதே நன்று என்று - இன்றையதினம் இறப்பதே நலம் என்று நினைத்து, யாவரும் - எல்லாரும், மன்றல் சேர் மயேந்திரவரையை மேவினர் - மணம்பொருந்திய மகேந்திரபர்வதத்தைச் சேர்ந்தார்கள்.

குழைந்த—தளிர்த்த. ஏ—தேற்றம். மன்றல் - கலியாணம் கந்தருவர் கலியாணம் செய்துகொண்டு சுகித்திருக்கும் இடம் என்றும் கொள்ளலாம். சடாயு முன்சொன்ன குறிப்பினாலும் பிராட்டி அணிகலனைத்தூசில் கட்டி வீழ்த்தின அடையாளத்தினாலும் தெற்கே சென்றார்கள்.

இறைவியாண்டிருந்தவா றெருவைவேந்தனும்
முறைமையான்வந்தனன் மொழியக்கேட்டபின்
அறைகழலநுமனு மரக்கிவாய்பிளந்
தெறிகடல்கடந்துபோ யிலங்கையெய்தினன்.

(இ-ள்.) இறைவி ஆண்டு இருந்த ஆறு-சீதாதேவி அவ்விலங்கையில் இருந்த விதத்தை, எருவைவேந்தனும் - கழுகுக்கரசாகிய சம்பாதியும், முறைமையான் - கிரமப்படி, வந்தனன்-வந்து, மொழிய - சொல்ல, கேட்டபின் - கேட்டபின்பு, அறைகழல் அநுமனும் - ஒலிக்கின்ற வீரகண்டையணிந்த அநுமானும், அரக்கிவாய்பிளந்து - இராக்ஷசியினுடைய வாயைப்பிளந்துகொன்று, எறிகடல் கடந்துபோய் - அலைவீசுங் கடலைக்கடந்து சென்று, இலங்கை எய்தினன்-இலங்கா நகரத்தை அடைந்தான்.

அநுமான் அங்கதன் சாம்பவன் முதலான வானரர்கள் எங்கும்தேடிப் பிராட்டியைக்காணாமையினால் காரியம் சாதியாமற் போனால் சுக்கிரீவன் தண்டிப்பன் என்று பயந்து மகேந்திரகிரிச்சாரலில் நிராஹாரமாய்ப் பிராயோபவேசம் பண்ணி உயிர் விடும்படி நிச்சயித்து இராமன் காட்டில் வந்ததும் இராவணன் சீதையை எடுத்துக்கொண்டு போனதும் ஜடாயு தடுத்து யுத்தஞ்செய்ய இராவணன் கொன்றுவிட்டதும் பின்புவாலியைக்கொன்று சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்ததும் அவன்காரியம் நாம்செய்யாவிடின் தண்டிப்பான் ஆகையால் நாம் இங்கேயே இறக்கவேண்டும் என்பதும் பேசிக்கொண்டிருக்கையில், சம்பாதி என்னும் கழுக்கரசு தன்தம்பியாகிய ஜடாயு இறந்தசெய்தி கேட்டவுடன் கிட்டவந்து, அவர்கள் ஜடாயு மரணத்தை நடந்தபடி சொல்லக்கெட்டுத் தம்பிக்குச்செய்ய வேண்டும் நீர்க்கடன் கழித்து, நிசாகரமுனி யருளால் தூர திருஷ்டியும் இராமனுதர் வரவால் சிறகும் உண்டாய் உயரப்பறந்துபோய் இலங்கையில் அசோகவனத்தில் பிராட்டியிருப்பதைப் பார்த்துச்சொல்ல, அவர்கள் தேறி வானரர்கள் கடல்கடப்பதில் தம் தம் திறல்கூறியபின் சாம்பவன் உணர்த்தத் தன்வலியறிந்து அநுமான் கடலைத்தாண்ட, இடையில் தனக்கு இளைப்பாறுமிடமாக வந்த மைநாகமலையை நன்மெர்ழி கூறிக்கடந்து நிழலைப்பிடித்துக்கொல்லும் சிங்கிகை என்னும் அரக்கிவாயைப்பிளந்து சங்கரித்துச் சுரசை என்பவள் விழுங்கும்படி வாய்திறந்த அளவும் தானும் வளர்ந்து சிறியருபத்தினால் அவள் வாயிற்புகுந்து வெளிப்பட்டு அவளும் தேவர்களும் புகழ இலங்கையிற் சேர்ந்தான்.

இறைவி—பண்படியாகப்பிறந்த பெண்பாற்பெயர். (சஉ)

கிட்கிந்தாகாண்டகதை முற்றிற்று.

V. சுந்தரகாண்டம்.*

எரிவிழியிலங்கைமா தேவியுங்கெடக்
கருநிறவரக்கர்தங் கனகமாளிகை
தெரிவையை யெங்கணுந் தேடிக்காணுதிலுழ்
அரிமலர்ச்சோலைகண் டாழிகாட்டினன்.

(இ-ள்.) எரிவிழி இலங்கைமாதேவியும் - நெருப்புப்போன்ற கண்களையுடைய பெருமையுள்ள இலங்கினியையும், கெட அவள்வலிகெட அடித்து, கருநிற அரக்கர்தம் கனகமாளிகை எங்கணும் - கருமையான நிறமுள்ள இராக்கதர்களுடைய பொன்னினு லமைந்த வீடுகள் எங்கும், தெரிவையை தேடிக்காணுதிலன்றி - சீதாபிராட்டியைத் தேடிக்காணுமல், அரிமலர் சோலை கண்டு - வண்டுமொய்த்த பூங்கோத்த அசோகவனத்தில் (பிராட்டியைப்) பார்த்து, ஆழிகல்கினன் - இராகவன் மோதிரத்தை (அடையாளமாகக்) கொடுத்தான்.

அநுமான் இரவில் அந்தகரத்தில் பிரவேசிக்க, தடுக்கவந்த இலங்கினியை அடித்துத்தோற்பித்து, உள்ளேதுழைந்து பூஞ்சோலைக்குட்டி யளவாய்க்கென்று, அரக்கர் மாளிகைகளிலும் மற்றுமுள்ள இடங்களிலும் தேடி எங்கும் காணுமல் மனவருத்தமடைந்து, பின் ஆசோக வனத்தில் நெஞ்சுபா விருக்கூத்தின்கீழ் ராக்கதிகள் நடுவில் இருந்த சீதையைக்கண்டு தளித்திருக்கையில், இராவணன் இரவில்வந்து பலவகை பேசி சீதையை வெருட்டிச்செல்ல, விபீஷணன் மகளாகிய திரிசடை தான்கண்ட கற்கனவைச்சொல்லி ஆற்றியபின்பு, அரக்கிகள் உறங்காநிற் கையில் பிராட்டிக்கு இராமலக்ஷ்மணர்களுடைய க்ஷேமத்தையும் அடையாளங்களையும் கூறி, கம்பும்படிசெய்து ராம காம மெழுதிய மோதிரத்தை அடையாளமாகக் கொடுத்தான்.

---

* அநுமான் இலங்கைக்குச் சென்றது முதல் சுந்தரகாண்டம்.

லங்கினியென்பவள் இலங்கைக்குக் காவலாகப் பிரமனு லேற்படுத்தப்பட்ட ஓர் நகர தேவதை. பிரமதேவன் ஓர் வானரத்தால் நீ அடிக்கப்படும்போது ராகூதருக்குத் துன் பும்வரும். உடனே நீ இந்நகரைவிட்டு நீத்திவிடக்கடவை யென்று சொல்லியிருந்ததை அவ்வநுமானுக்குக் கூறித் தான் நீங்கினள்.

எரிவிழி—வினைத்தொகையாகவும் இரண்டாம்வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளலாம். உம்—உயர்வு சிறப்பு. ()

மானவனறிந்தருண் மதுரமாமணி
சானகியளித்தனள் விடையுந்தந்தபின்
யானிவண்வந்துவீ ணைகறீதெனப்
போனமாமாருதி பொழிலைவாட்டினன்.

(இ - ள்.) சானகி - சீதாபிராட்டி, மானவன் அறிந்தருள் மதுரமாமணி - இராகவன் அறிந்தது ஆகிய கண்ணுக்கினி மையான பெருமையுள்ள சூடாமணியை, அளித்தனள் - கொடுத்தவளாகி, விடையுந் தந்தபின் - போம்படிச்செலவுகொடுத் தபின்பு, யான் இவண் வந்து - நான் இந்த இலங்கைக்கு வந்து, வீண் ஏகல் நீது எனு - வீணாய்த் தெரியாமற் போய்வி டுவது கெடுதி என்று நினைத்து, போன மா மாருதி - (விடை பெற்றுப்) போன பெருமையுள்ள அநுமான், பொழிலை - அசோகவனத்தை, வாட்டினன் - அழித்தான்.

மானவன் — குலவம்சத்திற்பிறந்தவன்; பெருமையுள்ள வன் எனவும் பொருள் கொள்ளலாம்.

சீராமன் கலியாணகாலத்தில் ஜனகன்கையிலிருந்து ஜன கபத்தினி தசரதன் அறிய முதலில் சிரோபூஷணமாகக்கொ டுத்தநினால் அவர் மூவரையும் நினைக்கும்படி பெருமான் திரு வுள்ளத்தில் அறிந்திருக்கிற இந்தச் சூடாமணியைக் கொடு என்று அநுமான்கையில் கொடுத்து அடையாளமான இல கதைகளையும் சொல்லி விடைகொடுத்தனுப்ப, அநுமான் நாம்

வந்தது தெரியாமல் திருடனைப்போல் போவது கெடுதி என்று நினைத்து, இராவணனைக்கண்டு பேசக்கருத்துடையவனாய் அசோகவனத்தை அழித்தான்.

வீண்—உரிச்சொல். எனு—செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். மாமாருதி—தூதர்குணத்தில் பெருமையுள்ள அநுமன். (சச)

காட்டொருவானரங் கடிகொள்சோலையை
வாட்டினதென்றுகா வலர்சென்றோதலும்
கேட்டனன்றசமுகன் கிளர்ந்தசேனையை
மூட்டினனவனெதி ரநுமன்முன்னினான்.

(இ - ள்.) காட்டு ஒரு வானரம்-காட்டிலுள்ள ஒரு குரங்கு கடிகொள் சோலையை வாட்டினது என்று - காவல்கொண்டிருக்கிற சோலையை அழித்ததென்று, காவலர் சென்று ஓதலும் - காவற்காரர் போய்ச் சொன்னவுடன், தசமுகன் கேட்டனன் - இராவணன் கேட்டு, கிளர்ந்த சேனையை - (திறல்) மிகுந்த சேனையை, அவன் எதிர்மூட்டினன்-அவ்வநுமானுக்கு எதிராகத் தூண்டியனுப்பினன்; அநுமன் முன்னினான் - மாருதியும் எதிர்த்தனன்.

பின் காவற்காரர் காட்டில் சஞ்சரிக்கும் ஒரு குரங்குவந்து உனக்குப் பிரியமான அசோகவனத்தை அழித்தது, எங்கேயும் அடித்தது என்று இராவணனிடத்தில் சொல்ல, திறல் மிகுந்த கிங்கரர் என்னும் இராக்ஷச சேனையை அவ்வநுமானே எதிர்த்துப் பிடித்துவர அனுப்ப, ஆஞ்சனேயனும் கண்டு எதிர்த்தான்.

காட்டொருவானரம் என்பது அக்குரங்கை அலக்ஷியமாகச்சொன்னது; ஏழாம்வேற்றுமை யுருபும் பயனும் தொக்க தொகை; நெடிற்றொடர்க் குற்றியலுகரமாதலின் டகரம் இரட்டியது [உயிர் - சூ - ஈஈ.] மூட்டினன்—மூள் - தன்வினைப் பகுதி, டி - பிறவினை விகுதி, சந்தியால் ள் ட் ஆய், மூட்டு - பகுதியாயிற்று. (சரு)

கலிச்சந்த விருத்தம்.

தொக்கரக்கனைத்துறந்து தோரணத்திருந்துபோர்
அக்கனைத்தனைப்படுத் தனைத்திரத்தமிக்கெழுத்
தக்கசம்புமாலியைத் தனைப்படுத்திவெற்றிசேர்
பக்கநின்றபஞ்சசேனை மன்னனைப்படுத்தினன்.

(இ - ள்.) தொக்கு அரக்கனை துறந்து - ஒன்று கூடிவந்த அவ்விராக்ஷதனைக்கொன்று, தோரணத்து இருந்து-தோரண ஸ்தம்பத்தில் உட்கார்ந்திருந்து, போர் அக்கனை - பொருதற்கு வந்த அக்ஷகுமாரனை, தனைப்படுத்து - தனையில்வீழ்த்தி, இரத்தம் மிக்கு எழ அனைத்து - இரத்தம் அதிகமாக உண்டாகும் படி அனைத்து, தக்க சம்புமாலியை தனை படுத்தி - பொருந் தகுதியுடைய ஜம்புமாலி என்பவனைத் தனையில் வீழ்த்திக்கொன்று, வெற்றிசேர் - ஜயம்பொருந்திய, பக்கம் நின்றபஞ்ச சேனைமன்னனை, பக்கத்தில் நின்ற ஐந்து சேனாபதிகளை, படுத்தினன் - வருத்திக்கொன்றான்.

அநுமான் இராவணனால் அனுப்பப்பட்ட கிங்கரர்களையும், பிரஹஸ்தன் புத்திரனாகிய சம்புமாலியையும், விருபாக்ஷன், யூபாக்ஷன், துர்த்தரசன், பிரகசன், பாசகர்ணன், என்னும் ஐந்து சேனைத்தலைவரையும், மந்திரிகுமாரர் எழுவரையும், இராவணன் குமாரனான அக்ஷகுமாரனையும் முறையே கொன்று, மறுபடியும் தோரணஸ்தம்பத்தில் உட்கார்ந்திருந்தான். பாட்டில் கதை முன்பின் முறை பிறழ்ந்திருக்கிறது.

தொக்க என்பதில்—அ-தொக்கது; தொக்கரக்கர்—பெயரெச்சத்தொடர். போர் அக்கன்—இரண்டாம் வேற்றுமை புருபும் பயனும் தொக்கதொடர். படுத்து—பிறவினை இறந்தகால வினையெச்சம். வெற்றி—தொழிற்பெயர்; வெல் - பகுதி, றி - விகுதி.

தோரணம்—பட்டணத்தின் புறவாயிலில். (சசு)

மேலுநாதன்வந்தெதிர்ந்து வேதநான்முகன்றரு
நாகபாசம்வீசிஞான நாதனைக்கொணர்ந்ததம்

ஓகைவாளிராவணற் குரைத்தலுமுருத்தெழா
வேகவாலினங்கியிட் டெரித்திறன்றியம்பினன்.

(இ - ள்.) மேகநாதன் வந்து எதிர்த்து - இத்திரசித்து வந்து எதிர்த்து, வேதநான்முகன் தரு நாகபாசம் வீசி - வேதம் உரைக்கும் பிரம்தேவன் கொடுத்த நாகபாசம் என்னும் அஸ்திரத்தை வீசி, ஞானநாதனே கொணர்ந்து - ஞானத்துக்குத் தலைவனுகிய அநுமானைக் கட்டிக் கொண்டுவந்து, தம் ஓகை - தம்முடைய மகிழ்ச்சியை, வாள் இராவணற்கு உரைத்தலும் - வாளாயுதம் தரித்த இராவணனுக்குச் சொன்ன உடன், உருத்து எழா - கோபித்தெழுந்து, வாலின் அங்கி இட்டு - வாலில் நெருப்புவைத்து, வேக எரித்திர் என்று இயம்பினன் - வெங் துபோரும்படி கொளுத்திவிடுங்கள் என்று சொன்னன் (இராவணன்.)

உடனே இத்திரசித்துவந்து பிரம்மாஸ்திரம் பிரயோகித்து அநுமானைக் கட்டிக் கொண்டுவந்து விட, அந்மரன் - பிராட்டியைத் தேடவந்த இராமனுடைய தூதன் நான், நீ சீதையை விடாயெனின் இராமனுல் வேரோடு அழிக்கப்படுவாயென்று சொல்ல; இராவண்ன் கோபித்துக் கொல்லும்படி கட்டளையிட, விபீஷணன் தூதுவனைக் கொல்வது வீரமல்லவென்று பல நியாயஞ்சொல்லித் தடுத்ததனுல், வாலில் சீசைசுற்றி எண்ணெய் தோய்த்துக் கொளுத்திவிடுங்கள் என்று இராவணன் கட்டளையிட்டான்.

நாகபாசவென்பது பிசகு ; அல்லது நாக என்ற சொல்லுக்கு துக்கமில்லர்தவ்னெனப் பொருள்கொண்டு பிரமதேவன் எனல் வேண்டும். பாசமென்பதையும் இலக்கணையால் அஸ்திரமென்க் கொளல்வேண்டும்.

பிரமாஸ்திரத்துக்குக் கட்டுப்படும்படி அநுமானுக்கு பாலியத்தில் பிரமதேவன் கட்டளையிட்டதனுல் கட்டுப்பட்டார்.

ஞானநாதன் — நவவியாகரண பண்டிதன் ; ஞானிகளுக்குத்தலைவன் என்றுங் கொள்ளலாம். உருத்து — உரு - பகுதி,

உ - வீருதி, த் - இடைநிலை, த் - சுந்தி. எரித்திர்—முன்னிலை ப்பன்மை எதிர்காலவினைமுற்று; எரி - பகுதி, இர் - விகுதி, த் - எழுதுப்பேறு, த் - சுந்தி. (சள)

வாலின்வைத்தநெயைமாட மாளிகைக்கண்வைத்தபின்
சாலவந்துசீதையைப் பணிந்துசாகரந்தனைக்
காலினேகிவந்துதங் கவிக்குலத்துவீராம்
வேலைசூழவேலிராமன் விட்டசோலைகிட்டினான்.

(இ - ள்.) வாலில்வைத்த நெயை - வாலில் கொளுத்தின நெருப்பை, மாடமாளிகைக் கண் - உப்பரிகையுள்ள வீடுகள் தோறும், வைத்த பின் வந்து-(எரியும்படிப் பற்ற) வைத்தபின்பு வந்து, சீதையை சால பணிந்து - சீதாபிராட்டியை மிகவும் தொழுது, சாகரந்தனை காலில் ஏகி வந்து - சமுத்திரத்தை காலினுல் தாண்டிவந்து, தம் கவி குலத்து வீராம் - தம் மூடைய வானரகுலத்து வீரராகிய, வேலைசூழ - கடல்சூழ்ந்திருக்க, வேல் இராகவன்விட்டசோலை - வேலாயுதம் தாங்கிய இராமன் இறங்கியசோலையை, கிட்டினான் - அணுகினன்.

காலின் ஏகி—காற்றுப்போல் சென்று எனவும், வாய்க்கால் போற் ருண்டி எனவும், பொருள் கொள்ளலாம்.

வாலில் நெயைக் கொளுத்தினவுடன் அதனுல் அங்குள்ள மாடமாளிகைகளைக் கொளுத்திவிட்டு, இத்தீயால் சீதைக்கு அபாயம் நேரிட்டிருக்கும் என்று தன்னைவெறுத்து, வானத்தில் சாரணர்பேச்சினுலும், வாலில் அக்கினி குளிர்ந்திருந்ததினுலும், சீதை எரிக்கப்படவில்லை என்று தேறி, பின் சீதையிருக்கும் இடம் வந்து, பிராட்டி அக்கினிபகவானை வேண்டிக்கொண்டதனுல், கற்பின் பெருமைபற்றிக் குளிர்ந்திருந்ததை எண்ணி, முன்னிலும் அதிகபக்தியுடன் தொழுது, சமுத்திரத்தை எளிதில் தாண்டிச் சென்று, அங்கதன் முதலிய வர்க்குச் சீதையைக்கண்ட செய்திசொல்லி, மதுவனத்தையும் அழிப்பித்து, வானரர்சூழ இராமன் வீற்றிருக்கும் சோலை வந்து சேர்ந்தான்.

சாலப்பணிந்தது—கற்பும் அருளும் குடிகொண்டவள்சீதை என்பதை அக்கினி குளிர்ந்திருந்ததனால் பிரத்தியக்ஷமாய்க் கண்டதுபற்றி. சால—உரிச்சொல் அடியாகப்பிறந்த செய வெனெச்சம். காலின்—இன்-ஐந்தாம் வேற்றுமை உருபு, கரு விப்பொருள்; ஒப்புப் பொருளுமாம். (சஅ)

மன்றலோதிதந்தகோல மணியைநல்கிமாருதி
நின்றுவாசகங்கள்கூற நீடுவேலிராமனும்
என்றின்னமந்தவிப்பதாதி யெழுகவென்றெழுந்தபின்
தென்றிசைக்கருங்கடற் றிரைப்புறத்துமேவினான்.

(இ-ள்.) மாருதி - அநுமான், மன்றல் ஓதிதந்த - வாசனை யுற்ற கூந்தலையுடைய பிராட்டி கொடுத்த, கோல மணியை நல்கி - அழகிய சூடாமணியைக் கொடுத்து, நின்று வாசகங் கள்கூற - (அடங்கி) நின்று பிராட்டி சொன்னமொழிகளைச் சொல்ல; நீடுவேல் இராமனும் - நெடிய ஆயுதந் தாங்கிய இரா மபிரானும், என்றின் மைந்த - சூரியகுமாரனான சுக்கிரீவா, இப்பதாதி எழுக என்று - இந்தவானரகாலாட்சேனை புறப் படக்கடவதென்று சொல்லி, எழுந்தபின் - புறப்பட்டபின்பு, தென்திசை - தெற்குத் திக்கிலுள்ள, கருங்கடல் திரை புற த்து மேவினான் - கருமையான கடலின் அலையோரத்தில் இற ங்கினான்.

அநுமான் பிராட்டிகொடுத்த சூடாமணியை ஸ்ரீராமபிரா னிடத்தில் கொடுத்து, ஒன்று மறியாதவன்போல் அடங்கி நின்று, தான் அரக்கரை வென்றதும் இலங்கையை எரித்ததும் தவிர மற்றைச்சங்கதிகளையும் பிராட்டி மொழிந்த மொழி களையும் சொன்னவுடன், சுக்கிரீவனுடு சேனையை ஆயத்தப் படுத்தச் சொல்லி அப்படியே ஆயத்தப்பட்டுப் புறப்பட்ட வானரசேனையோடு கடற்கரைவந்து ஸ்ரீராமன் சேர்ந்தான்.

மன்றல் ஓதி—இயற்கையில் மணமுள்ள கூந்தல் என்பதை யும், கோலமணி—மணக்கோலத்தில் அணிந்து ஸ்ரீராமனுக்கு ஞாபகம் வரத்தக்கமணி என்பதையும், நீடுவேல்—எல்லா உல

கும் எதிர்த்தாலும் தன்வலிக்குப் போதாத பெருமையுடைய வேல் என்பதையும், வாசகங்கள்—இரகசியமான் விருத்தாந் தங்கள் என்பதையும், நின்று—இவ்வளவு அரியகாரியம் செய் தும் ஒன்றும் அறியாதவன்போல் அடங்கியிருந்ததையும், மற் றவானரர்போல் ஆநந்தபரவசனுய் கூத்தாடாமல் நின்றதை யுங் குறப்பிக்கின்றன. மன்றல் ஓதி—வேற்றுமைத்தொகைப் புறத்து வந்த அன்மொழித்தொகை. பதாதி—வடமொழி ; காலாட்சேனை. (சசு)

சுந்தரகாண்டக்கதை முற்றிற்று.

VI. உயுத்தகாண்டம்.

கலிவிருத்தம்.

கடற்கரைவிடுத்தனன் கவியின்சேனையோ
டடற்படையிராகவ னரக்கனேவலால்
மடற்கமலத்தயன் மயனுந்தானுமாய்ப்
படைத்தனனிலங்கையைப் பண்டுபோலவே.

(இ-ள்.) கவியின்சேனையோடு கடற்கரை விடுத்தனன் - வா னரசேனையோடு சமுத்திரக்கரையில் இறங்கினன் ; அரக்கன் ஏவலால் - இராவணனுடைய கட்டளையால், மடற்கமலத்து அயன் - இதழ்க்குள்ள தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரம தேவன், மயனும் தானுமாய்-மயன் என்னும் தெய்வதச்சனும் தானுமாகச் சேர்ந்து; இலங்கையை பண்டுபோல படைத்த னன் - இலங்காநகரத்தை முன்போலச் சிருட்டித்தனன்.

இராமன் கடற்கரையில் சேனையோடிறங்கினன். இராவ ணன் கட்டளையின்படி பிரமனும் மயனுங் கூடி அநுமான் எரிப்பதற்கு முன்னிருந்ததுபோல் இலங்கையைச் சிருட்டித் தனர். கரன் முதலிய அரக்கரையும், இராவணனை ஒடுக்கிய வாலியையும், துணையின்றிக் கொன்ற ஆயுதமுள்ளவனுக்கு துணைவேண்டுவதில்லை ஆயினும், வானராராய்ப் பிறந்த தேவர் கள் தொண்டுசெய்து நிறம்பெறவேண்டுமென்னும் அருளால் கவிப்படையோடு சென்றது. மடற்கமலம் — ஆயிரம் இத

ழுள்ள கமலம் ; இலங்கையின் தொழிற்றிறத்துக்கு மயனே யும் துணையாகக் கொண்டனன் அப்பிரமன். விடு என்பது விகுதி முதலான வழக்கங்களினுல் இறங்குமிடத்துக்கும் இறங்குவதற்குங் கொள்ளப்பட்டது.

போல—போல் - என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த செயவெனெச்சம். ஏ—தேற்றம். (நு0)

மேலுயர்மண்டபத் திருந்துவெய்யவன்
தோலியகுரங்கிவூர் சுட்டதாமென
மாலியவான்முத லரக்கர்வல்லவன்
ஓலுயர்கடலென வுளையக்கூறினுர்.

(இ - ள்.) வெய்யவன்-கொடியவனுகிய இராவணன், மேல் உயர் மண்டபத்து இருந்து - எல்லாவற்றிற்கும் மேலாய் உயர்ந்திருக்கிற மண்டபத்தில் உட்கார்ந்திருந்து, தோலிய குரங்கு - துரத்திவிட்டவானரம், இவ்வூர் சுட்டது ஆமென-இவ்வூரைக் கொளுத்தியதாம் என்று கோபித்துச்சொல்ல, மாலியவான் முதல் அரக்கர் - (பாட்டனுகிய) மாலியவான்முதலான இராக்கதர்கள், வல்லவன் - போரில் வல்லவனுகிய இராவணன், உளைய - மனம்வருந்த, ஓலுயர் கடலெனகூறினுர்-ஓலிமிகுந்த கடல்போல் இரைந்து (புத்தி) சொன்னுர்கள்.

இராவணன் சிங்காதனத்தில் உட்கார்ந்து மந்திரிமுதலானுரை அழைத்து, நாம் துரத்திவிட்ட ஆற்பக்குரங்கு இந்த இலங்கையைச் சுட்டதாம், கேட்டீரா ஆச்சரியம் என்று கோபத்துடன் சொல்ல, மாலியவான் முதலான இராக்கதவீரர்கள் இராவணனுக்கு மனவருத்தம் உண்டாம்படி இதத்தைச்சொன்னுர்கள்.

முதலு—குறிப்புப்பெயரெச்சம் ; அகர ஈறுகுறைந்தது. வெய்யவன்—வெம்மை-பகுதி; அன்-விகுதி, அ - சாரியை, பகுதி ஈறுகெட்டு முன்னின்ற மகரம் யகரமாய்த் திரிந்தது ; பண்படியாகப்பிறந்த பெயர். ஓலம் — கடைகுறைந்து, ஓல் என்றுய்து எனை—உவமை இடைச்சொல். அரக்கர் சொல்லுகிற

இதம் கேளாதவன் ஆதலின் வெய்யவன் என்றும், அவர்கள் பேச்சு பயனில்லாமல் போனதினும் ஓலையர் கடலெனவும் கூறினர். (ருக)

வேறு கலிவிருத்தம்.

மைந்தனிந்திர சித்துவுமௌலியான்
றந்தைதன்னெடுங் கூறத்தடுத்தெதிர்
தந்தனன்னவர்க் கற்றதயில்படு
வெந்தபுண்ணென வீடணன்கூறினன்.

(இ-ள்.) மைந்தன் இந்திரசித்து உம் - குமாரனுகிய இந்திரசித்து என்பவனும், மௌலியான்தந்தை தன்னெடும் - கிரீடாதிபதியாகிய தகப்பனெடும், கூற - ஒற்றுமையாகப்பேச, வீடணன் தடுத்து எதிர் தந்தனன் - விபீஷணன் அதைத்தடுத்து எதிராகச்சொல்லினன்; அவர்க்கு அற்று அது-(அவர்களுக்கு) அத்தன்மையாகிய அத்தப்பேச்சு, வெந்தபுண்படு அயிலென - கொதித்த புண்ணிற்பட்ட வேல்போல் (வேறுப்பும் வருத்தமும் தர), கூறினன் - மேலும் சில சொல்லினுற்றான்.

மைந்தன் இந்திரசித்து — இருபெயர் ஒட்டுப்பண்புத்தொகை. தந்தனன்னவன்—சந்தம்நோக்கி னகரம் விரித்தல் விகாரம்பெற்றது. அற்று—அன்-பகுதி, று - ஒன்றன்பால்விகுதி, ன்+அ ஆயது சுட்டு; குறிப்பு வினைமுற்று, இங்கே பெயர் எச்சமாய்வந்தது (வினை - சூ - ஈசு). அயில்படு என்பவற்றை படு அயில்-எனமாற்றி, வெந்தபுண் என்பதனெடுகூட்டிப் பொருள்கொள்க. விபீஷணன் — வடமொழி, வீடணன் என்றுமாயது. (ருஉ)

இரணியனென்பவ னியாவர்தம்மினு
முரணியனவனிலன் முனியமாய்ந்தனன்
அரணியனெஞ்சின னவ்வன்றன்றேவியாந்
தரணியின்முயைவிட் டருளத்தக்கதால்.

(ஈ-ள்.) இரணியன் என்பவன் - இரணியன் என்னும் பெயருடைய அசுரன், யாவர் தம்மினும் முரணியன் - எல்லாரி

லும் வலியுடையவன்; அவன் இவன் முனிய மாய்ந்தனன் - அவ்வசுரன் இந்தத்திருமால் கோபித்ததனு லிறந்தான்; அரண் இயல் நெஞ்சினன் - காவல் அமைந்த மனமுள்ளவனுகிய, அவன் தன்தேவியாம் தரணியின்தாயை - அந்தச் சீராமனுக்கு மனைவியாகிய உலகமாதானவை, விட்டு அருள தக்கது-என் மேல் கிருபைசெய்து விடவேண்டும்.

இராவணன் மனதுக்குத் தகுதியாக இந்திரசித்துசொல்ல, அதற்கு எதிராக விபீஷணன், மூவுலகமும் தனக்குக்கீழ் அடங்க அரசாண்ட இரணியகசிபு தானே கடவுள் என்று இறுமாந்து தன் குமாரன் பிரகலாதன் ஹரியே கடவுள் என்று சொல்லக் கோபித்து அப்பிரகலாதனை வருத்தியதனுல், நரசிங்காவதாரம் எடுத்துத் தேவர் வரங்களுக்குத் தடையில்லாமல் கொன்றனன். திருமால் பூமியைப் பாதாளத்திற்குக் கொண்டுபோய்விட்ட இரணியாக்ஷனை வராக அவதாரம் எடுத்துக்கொன்றான். அந்த மகாவிஷ்ணுவே இந்த இராமன். ஆதலால் அவன் மனைவியும் எவ்வுலகுக்கும் மாதாவும் ஆகிய சானகியை விட்டுவிடவேண்டும். என் பிராத்தனைக் கிணங்கிக் கிருபைசெய்யவேண்டும் என்று சொன்னன்.

இரணியகசிபு—சரீரம் பொன்நிறமானவன். இரணியாக்ஷன்—பொன்நிறமான கண்ணுள்ளவன். தரணி என்பது எவ்வுலகுக்கும் உபலட்சணம். இது ஆறாம் வேற்றுமைத்தொகை—பூமியைத் தாயாகவுடையாளை எனவும் கொள்ளலாம். இது அன்மொழித்தொகை. இன்-சாரியை. தம்மினும்—இன்-எல்லேப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை யுருபு. உம்-உயர்வுசிறப்பு. மூரணியன் — மூரண் - பகுதி, அன் - விகுதி, இன் - சாரியை, னகரம் கெட்டது, ய் - உடம்படுமெய். மூனிய — செயவெனெச்சம், காரணப்பொருளதாதலின் இறந்த காலம் குறித்தது.

விபீஷணன் அண்ணனைச் சரணகதிபண்ணி வேண்டிக் கொண்டதனுல் அருளத்தக்கது என்றார். (நாங)

என்றலுமிரா வண னெரியுஞ்சிந்தையான்
நின்றனனேயெனினே யடுவனீங்கெனத்
தன்றுணைநால்வரும் தாணும்வீடணன்
வென்றிகொளிராகவன் சரணமேவினன்.

(இ-ள்.) என்றலும்-என்று சொன்னவுடன், இராவணன்—, எரியும் சிந்தையான்-கோபித்த மனமுடையவனாகி, நின்றனனேயெல் நினையடுவன்-(இங்கே)நின்றால் உன்னைக்கொல்லுவேன்-; நீங்கு என - விலகிப் போய்விடு என்றுசொல்ல, வீடணன் தானும் தன்துணை நால்வரும் - விபீஷணனும் அவன் மந்திரிகளாகிய அனலன், அநிலன், அரன், சம்பாதி என்னும் நாலு பேர்களும், வென்றிகொள் இராகவன் சரணம் மேவினன் - ஜயம்கொள்ளும் இராமபிரானுடைய திருவடியை அடைக்கலமடைந்தான்.

இராவணன் கோபித்துக் கொல்லுவேன் போய்விடு என்று துரத்திவிட, மந்திரிகள் நால்வரோடு இராகவனை அடைக்கலம் புகுந்தான் வீடணன்.

நால்வரும்—உம்-முற்றும்மை. வென்றிகொள் — சத்திய த்தினால் உலகைவென்றவன் என்பது குறிப்பு; வென்றி-தொழிற்பெயர், இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; எழுவாய் தொடராகவும் கொள்ளலாம்; ஜயம் இராகவனையே தனக்கிடமாகக்கொண்டது என்பது பொருள்

கடலுடையிலங்கையி னரணுங்காவல
னிடையநீள்வரங்களு மைந்தருற்றமும்
படையினதீட்டமும் பகர்திநீயென
அடையவாளிராமனுக் கரக்கன்கூறினன்.

(இ - ள்.) கடலுடை இலங்கையின் அரணும்-சமுத்திரத்தை அரணாகவுடைய இலங்காநகரத்தின் மதில் முதலிய அரண்களையும், காவலனுடைய நீள்வரங்களும் - அரசனாகிய இராவணன் பெற்றிருக்கிற மிகுதியான வரங்களையும், மைந்தர் ஊற்றமும் - பிள்ளைகள் பலமும், படையின தீட்டமும்

சேனையின் தொகையும், பூசர்தி நீயென-(விபீஷணஞ்நீ) சொல் என்று (இராகவன்) வினவ, வாள் இராமனுக்கு - வாளைக் (கையிற்கொண்டு) இராமனுக்கு, அரக்கன் அடைப்பக் கூறினன் - விபீஷணன் முழுமையுஞ் சொன்னன்.

விபீஷணன் சீராமனுக்கு இலங்கையின் அரண் முதலிய இராவணனுடைய பலம் எல்லாவற்றையும் விரிவாக உரைத்தனன்.

கடலுடை—கடல் அரண் என்பது தெரிகின்றது. மற்றைய அரண்களையும் சொல் என்றப்படி ; சமுத்திரத்தை ஆடையாகச் சுற்றிலுமுடைய என்றும் பொருள் கொள்ளலாம். உடை—உடுக்கப்படுவது. (நிரு)

வேண்டினனெருவழி வேலைவேந்தனை
ஈண்டியவிலங்கைகக்கின் றெய்தலின்மையால்
தூண்டினன்சுடுசரம் வருணன்தோற்றுவந்
தாண்டகையிராகவ னடியில்வீழ்ந்தனன்.

(இ-ள்.) ஈண்டிய இலங்கைக்கு - கடல்சூழ்ந்த இலங்காநகரத்துக்கு, இன்று எய்தல் இன்மையால் - இப்பொழுது போதல் கூடாமையால், வேலை வேந்தனை ஒருவழி வேண்டினன் - சமுத்திரராசனை ஒருவழியை பிரார்த்தித்தான் ; சுடுசரம் தூண்டினன் - (அவன் வராமையால்) எரிக்கும் கணையை எய்தான் ; வருணன் தோற்று வந்து-வருணதேவன் தோற்றுவந்து, ஆண்டகை இராகவன் அடியில் வீழ்ந்தனன்-வீரத்தன்மையுள்ள இராமனுடைய பாதத்தில் அடைக்கல மடைந்தான்.

கடலைக்கடக்க உபாயம் சொல்லவேண்டுமென்று இராமன் சமுத்திரக்கரையில் தர்ப்பசயனத்திலே படுத்துப் பிரயோப வேசம்பண்ணியும், இவர் மகிமை யறியாமல் கடலரசனுடைய வருணன் உபேக்ஷையாயிருக்கக்கண்டு கோபம்கொண்டு, வானரர் நடந்துசெல்லும்படிக் கடலைவற்றச்செய்வேன் என்று அக்கினி அஸ்திரம் தொடுத்தவுடன் அவ்வருணன் நடுங்கிவந்து சரணாகதி பண்ணினன்.

ஒருவழி—வருணன் தேவன் என்று உலகுக்கு ஒத்தியேர் வழியில் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஆண்டனை—வருணன் பங்கப்படுவதற்கு ஏதுவான செலவை யத்தை உணர்த்துகின்றது; ஈண்டிய—ஈண்டு - பகுதி, அ - விகுதி, இன் - இடைநிலை, கடைகுறைந்து, ய் - உடம்படு மெய் பெற்று, சந்தியால் உகரம்கெட்டது. சுடுசரம் — வினைத்தொகை. தோற்று—தோல்-பகுதி, உ - விகுதி, ற் - இடைநிலை, ற்+ஆனது சந்தி, இறந்தகால வினையெச்சம். ஆண் தகை—இராமன், ஆண்மையாகிய வெருமை என இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையாகவும், புருவத்தையுடைய செலவியும் என ஆறாம் வேற்றுமைத்தொகையாகவும் கொள்ளலாம். ஆண்தகை இராகவன்—இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் தொக்கதொகை. தகை—தகு - பகுதி, ஐ - தொழிற் பெயர் விகுதி, சந்தியால் உகரம்கெட்டது. (நூசு)

ஆனபேர் வேலையை யடைத்தபின் புயர்
மானவர் தலைவனும் வானரேசனுங்
கோநகரின் புறக்குன்றில் விட்டபின்
ஊனமில் இராவண னெற்றர் மேவினர்.

(இ-ள்.) ஆன பேர்-வேலையை - இத்தன்மையாய்ப் பணிந்த பெரிய சமுத்திரத்தை, அடைத்தபின்பு-(சேதுகட்டி) அடைத்தபின், உயர்மானவர் தலைவனும் - உயர்வாகிய மநுவம்சத்தாரில் முதன்மைபெற்ற இராமனும், வானரேசனும் - வானரத்தலைவனை சுக்கிரீவனும், கோநகரின் புறக்குன்றில் - சிறந்த இலங்காபுரியின் புறத்தில் உள்ள சுவேலமலையில், விட்டபின் - இறங்கியபின்பு, ஊனமில் இராவணன் ஒற்றர் மேவினர் - (வரபலங்களில்) குறைவில்லாத இராவணனுடைய தூதுவர் கிட்டினர்கள்.

'ஊனம் இல் ஒற்றர்' எனக்கூட்டி, ஒற்றுத்தொழிலிற் குறைவில்லாத தூதர் எனவும் பொருள் கொள்ளலாம்.

வருணன் சரணாகதி யடைந்தபின்பு, அவன் அநுமதியினால் வானரர்கள் மலைகளை எடுத்துவர, கல் மிதக்க வரம்பெற்ற

மற்றவர்-அநுமானும் சுக்ரீவனும் மற்றுமுள்ள வானரரும்; இவன்சரம்படகுலைந்தார் - இந்தஇராவணனுடைய கணைகள் பட்டு வருந்தினர்கள்.

அகீகம் என்னும் வடமொழி அங்கம் என்றுயிற்று. வெள்ளம்—சேனைப்பிரிவின் ஓர்தொகை. உடையக் குறைத்தார்-வானரர் கர்ச்சனத்தினாலேயே அரக்கர் மடங்கிக் குலைந்தார்கள். உடைய, பட,—குரங்கு என்னும் மென்றொடர்க் கும்முகரம் குரக்கு என வன்றொடராயிற்று. இரண்டும் செயவெனெச்சம்; முன்னது காரியப்பொருட்டும், பின்னது காரணப்பொருட்டும் ஆம். (சுரு)

இளையவீரனுமிராவண னீளைந்துசிலையு
முளையவெய்தனனுடம்பிடி யவனுரத்துய்த்தே
வளையும்வாளெயிற்றிராவணன்வவ்வுவான்சென்றான்
இளையவீரனேமாருதி யெடுத்துக்கொண்டகன்றான்.

(இ-ள்.) இளையவீரனும்-இலக்குவனும், இராவணன் ஈளைந்து சிலையும் உளைய - இராவணனுடைய பத்துவில்லும் முறியும்படி, எய்தனன் - அம்புகளைப் பிரயோகித்தான்; வளையும் வாள்எயிற்று இராவணன் - வளைந்த ஒளிபொருந்திய பற்களையுடைய இராவணன், உடம்பிடி அவன் உரத்து உய்த்து - வேலாயுதத்தை அவன் மார்பில் எறிந்து, வவ்வுவான் சென்றான் - அவனைப் பிடித்துக்கொள்ளப்போனான்; இளைய வீரனே மாருதி எடுத்துக்கொண்டு அகன்றான் - இளையபெருமானை அநுமான் எடுத்துக்கொண்டு நீங்கிப்போனான்.

இலக்குவன் இராவணனுடைய பத்துவில்லும் முறியும்படி எய்தனன், உடனே இராவணன் கோபித்துப் பிரமனால் கொடுக்கப்பட்ட வேலாயுதத்தை இலக்குமணன் மார்பில் எறிய, உடனே அவன் மூர்ச்சிக்கக்கண்டு, இராவணன் தூக்கிக்கொண்டுபோம்படி முழுவலியோடடைத்தும் அசையாதிருக்க, அநுமான் இளையபெருமானை ஏளிதில் எடுத்துக்கொண்டு யுத்தகளம்விட்டு நீங்கினான்.

"பத்துடை யடியவர்க்கெளியவன்
பிறர்க்குரியவித்தகன்"

உய்த்தே—ஏ - அசைநிலை. வவ்வுவான் — எதிர்காலவினை யெச்சம். வான் - விகுதி. (சூ)

ஆளிபாயிரம்பூண்டதேர் ராக்கன்வந்தடர்த்தான்
காளமாருதிதோளின்மே லிராமனுங்கடந்தான்
மூஞ்ஞவார்சிலைபத்துடன் முடிபத்துமொழித்து
நாளைவாபொரவென்றனன்னகர்சென்றுபுக்கான்.

(இ-ள்.) ஆளி ஆயிரம் பூண்டதேர் - ஆயிரம் சிங்கங்கள் பூட்டிய தேரில், அரக்கன் வந்து அடர்த்தான் - இராவணன் ஏறிவந்து (இராமனை) எதிர்த்தான்; காளமாருதி தோளின் மேல் - வீரனான அநுமானுடைய தோளின்மேல், இராமனுங் கடந்தான் - இராமனும் ஏறிச்சென்று, மூஞ்ஞவார்சிலைபத்துடன் - அம்புகள் பொழியும் நீண்டவில் பத்தும், முடிபத்தும் ஒழித்து - பத்துத் தலைகளையும் போக்கி, நாளைவா பொர என்றனன் - நாளையதினம் யுத்தஞ்செய்ய வா என் றிராமன் விடை கொடுத்தனன்; நகர்சென்று புக்கான் - (இராவணன்) தன் நகரத்திற்குட்போய்ப் பிரவேசித்தான்.

அனேக சிங்கங்கள் பூட்டிய தேரில் ஏறி இராவணன்வந்து யுத்தம்செய்ய, இராமன் அநுமான்மேல் ஏறிக்கொண்டு யுத்தம்செய்து; இன்றைக்கு இளைத்துவிட்டாய், ஆயுதமுமில்லை, ஆதலால் நாளைக்கு பலத்தோடு யுத்தத்துக்குவா என்று அனுப்பிவிட, இராவணன் மிக்க நாணமுற்று இலங்கைக்குள் சென்றான்.

காளம்—இடபம்போல் கம்பீர நடையுள்ளவனுய் பகைவருக்கு அஞ்சி நடை தளராதவன் ஆதலின்; உவமை ஆகுபெயராம். குதிரைமுதலிய வாகனங்களைத் தாண்டி ஏறுவது வழக்கமாதலின், இங்கும் ஏறினான் என்பதற்குக் கடந்தான் என்றார். மூஞ்ஞ—வினைத்தொகை, உ - சாரியை. ஒழி—தன் வினைக்கும் பிறவினைக்கும் பொதுப் பகுதி; விகுதி இடை நிலை

களோடு சேரும்போது மெல்லெழுத்துத் தோன்றத் தன் வினையும் வல்லெழுத்துத் தோன்றாபிறவினையுமாம். (சுரு)

மூலத்தானையைத்தருகெனத் தூதனைமுடுக்கிக்
கோலப்பள்ளியின்மேவலுங் குரவன்வந்தணுகிச்
சாலச்சாம்பினைமுன்னமே சாற்றினனென்றான்
மாலைத்திண்புயமகோதரன் மறுத்திதுசொன்னான்.

(இ-ள்.) மூலத்தானையைத் தருக என-மூலபலத்தை அழைத்துவாருங்கள் என்று, தூதனை மூடுக்கி - தூதரை விரைவாகச் செலுத்தி, கோல் பள்ளியில்மேவலும்- (இராவணன்) அழகிய படுக்கையில் சேர்ந்த உடன், குரவன் வந்து அணுகி-பாட்டனாகிய மாலியவான் வந்து கிட்டி, சால சாம்பினை-மிகவும்வாடினாய், முன்னமே சாற்றினன் என்றான் - நான் முன்பே சொன்னேனே என்று சொன்னான்; மாலை திண் புய மகோதரன்-பூ மாலை அணிந்த வன்மையான தோளுடைய மகோதரன், மறுத்து இது கொன்னான் - அன்றத்தடித்து இப்பின்வரும் பேச்சைச் சொன்னான்.

மூலபலத்தை வரவழைக்கும்படி ஏவி தான் படுக்கையில் சேர்ந்தவுடன், பாட்டனாகிய மாலியவான் வந்தி, நீமிகவும் வருந்தினாய்; நான் முன்னமே இராமனோடு பகை வேண்டாமென்று சொன்னேனே, கேளாமற் போனாயே என்று சொல்லிக் கொண்டிருக்கையில், மகோதரன் என்னும் மந்திரி தடுத்து அதற்கேற்ற பேச்சைச் சொன்னான்.

மூடுக்கி—மூடுகு - தன்வினைப் பகுதி, க் - விரித்தல் பெற்றுப்பிறவினையாயிற்று. குரவன்—குருவென்னும்வடமொழி; அன்-விகுதிபெற்று உகரம் கெட்டது. சாம்பினை—முன்னிலை ஒருமை இறந்தகால வினைமுற்று. ஏ—தேற்றம். சாற்றினன்—தன்மையொருமை வினைமுற்று. மூலத்தானை—எல்லாச் சேனைக்கும் ஆதாரமாய் உள்ளே வைத்திருந்த சேனை, மகோதரன்=பெருவயிறுடையவன். (சுசு)

கும்பகன்னனேய்ழையெனத் தூதருங்கொணர்ந்தார்
எம்பிபோரினிலியற்றுதி மனிதரோடென்றான்
வெம்புபோர்க்களம்புகுந்தனன் வினவினனிராமன்
தம்பிநானிவற்றருகென்றான் தசமுகற்கிளையான்.

(இ-ள்.) கும்பகன்னனே அழையென-கும்பகர்னனே அழைத்துவா என்று (இராவணன்) சொல்ல, தூதரும் கொணர்ந்தார்-தூதுவரும் எழுப்பிக்கொண்டு வந்தார்கள்; எம்பி!.- தம்பி! போரினில்இயற்றுதி மனிதரோடு என்றான்-நீ யுத்தத்தில் மனிதர் ஓடும்படிசெய் என்று சொன்னான்; வெம்பு போர்க்களம் புகுந்தனன் - (அதுகேட்டுக் கும்பகர்ணனும்). வேகின்ற யுத்த களத்தில் உடனே பிரவேசித்தான்; இராமன்வினவினன்-இராகவன் (இவன் யார்என்று) வினவினன்; தசமுகற்குஇளையான்-இராவணனுக்குத் தம்பியாகிய விபீஷணன், தம்பி - (இவன்) இராவணன் தம்பி; நான் இவன் தருக என்றான்-நான் இவனை அழைத்துக்கொண்டு வருகிறேன் என்று சொன்னான்.

கும்பகர்ணனே அழைத்து நீ சண்டைக்குப்போய் மனிதர்களை ஜயித்து வாவென்று இராவணன் அனுப்ப, உடனே யுத்த களம் பிரவேசித்தான். அவன் பயங்கரமான ரூபங் கண்டு, இவன்யார்என்று விபீஷணனை இராமன்கேட்க, தனக்குஅண்ணன், இராவணனுக்குத் தம்பி, நான் இவனை இவ்விடம் அழைத்து வருகிறேன் என்று சொன்னான்.

என்தம்பி— எம்பி என மருவியது. கொணர்ந்தார்—கொ ணர் -பகுதி, ஆர் - விகுதி, த் - இடைநிலை, குறுக்கலும் ர் - விரித்தலும் பெற்று, சந்தியால், த்-மிகுந்து, மெலித்தலால் ந்-ஆயது. ஓட—என்னும் செயவெனெச்சம், அ-தொகுத்தலாயிற்று. இவன் — இரண்டாம் வேற்றுமைத்தொகை. தருக — வியங்கோள் வினைமுற்று, ஈறுதொக்கது. கும்பகன்னன் —குடம் போன்ற காதுள்ளவன். கர்ன்ன கன்ன ஆயிற்று. (கூஎ)

வியந்து வீடணை னழைத்தலும் வெய்யவன் மறுத்து, வசந்த னேப்பிசைந் தருக்கன்மா மகனைக்கொண்டகன்றான், இயைந்த நாசிகொண் டிரவிசேய் மீண்டன னிராமன், உயர்ந்தொ ரம்பினு லவன்றலை யுவரியிலிட்டான்.

(இ - ள்.) வீடணன் வியந்து அழைத்தலும் - விபீஷணன் புகழ்ந்து அழைத்தவுடன், வெய்யவன் மறுத்து - கொடியவனாகிய கும்பகர்ணன் கேளாமற்றள்ளி, வசந்தனே பிசைந்து - வசந்தன் என்னும் வானரனே உருவில்லாமற் பிசைந்து, அருக்கன்மா மகனைகொண்டு அகன்றான் - சூரியகுமாரனாகிய சுக்கிரீவனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்; இயைந்த நாசிகொண்டு-பொருந்திய மூக்கைக்கடித்து எடுத்துக்கொண்டு, இரவிசேய் மீண்டனன்-சுக்கிரீவன் திரும்பிவந்தான்; இராமன்னுயர்ந்த ஓர் அம்பினால் - இராமன் சிறந்த ஓர் கணையால், அவன் தலை உவரியில் இட்டான் - அந்தக் கும்பகர்ணனுடையதலையை (அறுத்துக்) கடலில் வீழ்த்தினான்.

விபீஷணன் மிகவும் அவனைப் புகழ்ந்து இராமன்பக்கம் சேரும்படி வெகு நியாயங்களைச்சொல்லி வேண்டிக்கொண்டும் (அவன் கேளாமல் மறுத்து) யுத்தகளத்தில் வானரர்களைஅழிக்கத் தலைப்பட்டு, வசந்தனென்னும் வானரனை உருவில்லாமற் பிசைந்துகொன்று, மூர்ச்சித்த சுக்கிரீவனைப் பிடித்துத் தூக்கிக்கொண்டுபோக, அவன் வழியில் மூர்ச்சைதெளிந்து கும்பகர்ணன் மூக்கைப் பல்லினால்கடித்து எடுத்துக்கொண்டும் கையினால்காதுகளைக் கிள்ளி எடுத்துக்கொண்டும் சீராம பாதத்தண்டைவந்து சேர்ந்தான். கும்பகர்ணன் மீண்டும் யுத்தகளத்துக்குவந்து இராமனோடு போரிட இராகவன் ஒரேகணையால் தலையையறுத்துச் சமுத்திரத்தில் வீழ்த்திவிட்டான். (சுஅ)

அப்புறத்தினின் மருத்தனைச் சனகர்கோனுக்கிக்
குப்புறுத்தினன் மகோதரன் சிதையுங் குலைந்தான்

எப்புறத்தினு மிராவணன் செவிகளுங்கேட்க
இப்புறத்தினின் றூர்த்ததங் கிராவணன்சேனை.

(இ-ள்.) மகோதரன் மருத்தனை சனகர்கோனுக்கி - மகோதரன் என்பவன் மருத்தன் என்னும் அரக்கனை மாயையினால் சனகமகாராஜனைப்போல் ரூபப்படுத்தி, அப்புறத்தினில் குப்புறுத்தினன் - அந்த அசோகவனத்தில் குப்புறத்தள்ளிக் கொன்றான்; சீதையும் குலைந்தாள்-(இது மாயையென்றறியாத) சீதையும் நடுங்கினாள்; எப்புறத்தினும் இராவணன் செவிகளும்கேட்க - எவ்விடத்திலும் இராவணன் காதுகளில் கேட்கும்படி, இப்புறத்தில் நின்று-இந்தவிடத்தில்நின்று, அங்கு இராவணன்சேனை ஆர்த்தது - அவ்விடத்தில் இராவணனுடையசேனை ஆரவாரஞ்செய்தது.

மகோதரன் மருத்தனென்பவனைச் சனகராசனுக மாயையினால்செய்து சீதைக்கு எதிரில் தள்ளிக் கொன்றபாவனை செய்தான். அது கண்டு சீதையும் நடுங்கினாள். இந்தச்சமயத்தில் கும்பகர்ணன் இறந்ததைக்கண்டு இராவணன்சேனை இளைச்சவிட்டது. 'இராகவன்செவி' என இருப்பின் நலம்.

சீதையும்—எச்ச உம்மை. (சூசு).

வேறு கலிவிருத்தம்.

கும்பகன்னன் குறைந்தமை கூறினர்
தம்பியோவென்று றரற்றித் தசமுகன்
அம்பொற்றேரதி காயனை யேவினன்
எம்பிராற்கிளை யோனெதிர் தாக்கினன்.

(இ - ள்.) கும்பகன்னன் குறைந்தமை கூறினர் - கும்பகர்ணன் இறந்த செய்தியைத் (தூதுவர்வந்து) சொன்னார்கள்; தசமுகன் தம்பி ஓவென்று அரற்றி—இராவணன் ஓ தம்பி என்று கூவி அழுது, அம்பொன்தேர் அதிகாயனை ஏவினன் - (பின்பு) அழகிய பொன்னாலாகிய தேரையுடைய அதிகாயன் என்பவனை (யுத்தத்துக்கு) அனுப்பினன்; எம் பிராற்கு இளை

யோன் எதிர்தாக்கினன் - இராமனுடையதம்பியாகிய இலக்ஷ்மணன் எதிர்த்து யுத்தஞ்செய்தான்.

கும்பகர்ணன் இறந்த செய்தியைத் தூதுவர் சொல்லக்கேட்டு, ஓவென்றழுது, பின்பு தன்புத்திரனுகிய அதிகாயனை யுத்தத்துக் கனுப்ப, இலக்ஷ்மணபெருமாள் அவனுடு எதிர்த்து யுத்தஞ் செய்தார்.

குறைந்தமை—இறந்தகால முணர்த்தும் தொழிற் பெயர்; குறைகின்றமை என நிகழ்காலத்திலும், குறைவது என எதிர் காலத்திலும் வரும். ஒ—இரக்கக் குறிப்பிடைச்சொல். அதிகாயன்—மிக்கும் பெரிய சரீரமுடையவன். (எ)

எதிரெதிர்தாக்கினவிரண்டுசேனையுங்
கதுமெனவிராகவற்கிளையகாவலன்
அதிர்கழல்புனையதிகாயன்றன்னையோர்
சதுர்முகன்சரத்தினுற்றலையைத்தள்ளினன்.

(இ-ள்.) இரண்டுசேனையும் எதிர் எதிர் தாக்கின-இருபடைகளும் ஒன்றுக்கொன்று எதிராகச் சண்டையிட்டன; இராகவற்கு இளையகாவலன்-இராமனுக்குத் தம்பியாகிய இலக்ஷ்மணன், அதிர்கழல்புனை அதிகாயன் தன்னை - ஒலிக்கின்ற வீரகண்டை அணிந்த அதிகாயனை, ஓர் சதுமுகன்சரத்தினுல்-ஒரு பிரமாஸ்திரத்தினுல், கதுமென தலையைத் தள்ளினன் - விரைவாகத் தலையை அறுத்துத் தள்ளினன்.

இரண்டு சேனையிலும் உள்ள வீரர்கள் ஒருவர்க் கொருவர் எதிரெதிராக யுத்தஞ்செய்துகொண்டிருக்கையில், அதிகாயன் மற்றுமுள்ள அஸ்திரங்களுக்குச் சலியா திருக்கக்கண்டு இளைய பெருமாள் அவன் தலையை பிரமாஸ்திரத்தினுல் அறுத்துத் தள்ளி விட்டார்.

காவலன்=உலகுக்குக் காவல்செய்யும் திறலுள்ளவன். கா வல் - பகுதி, அன் - விகுதி, கா - முதனிலைத் தொழிற்பெயர், வல் - வல்லமை, அன் - உடையவன், எனவும் கொள்ளலாம்.

கதும்—விரைவுக் குறிப்பிடைச்சொல். அதிகாயனைத் தலையை என ஆறாவதற்கு இரண்டாவது உருபு வந்தமையால் வேற்றுமை மயக்கம். (எக)

குரக்குவேந்தர்கள் குன்றுகொண்டேவலும்
அரக்கன்மைந்தரனைவருமாண்டனர்.
பரக்கவன்கொலைப்பாடுகொண்டார்சிலர்
இரக்கமெய்தியிராவணற்கோதினர்.

(இ - ள்.) குரக்குவேந்தர்கள் - வானரத்தலைவர்கள், குன்று கொண்டு ஏவலும் - மலைகளைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு எறிந்த உடனே, அரக்கன் மைந்தர் அனைவரும் - இராவணனுடைய புத்திரர் எல்லாரும், மாண்டனர் - இறந்தார்கள்; பரக்க வன் கொலைப்பாடு கொண்டார் - மிகவும் கடினமாகிய் கொலையைத்தரும் காயத்தை அடைந்தார்களாகிய, சிலர்—, இரக்கம் எய்தி இராவணற்கு ஓதினர் - விசனம் அடைந்து இராவணனுக்குச் சொன்னார்கள்.

கொலைப்பாடு—கொலைக்கு ஏதுவாகிய வருத்தம். பாடு—மூதனீண்ட முதனிலைத் தொழிற்பெயர். இரக்கம்—இரங்கு+அம், அம் - தொழிற்பெயர் விகுதி, வலித்தல் விகாரம். (எஒ)

அரக்கனவ்வுரை கேட்டலுமங்ஙனே
இரக்கமற்றிந்திர சித்தையேவினன்
குரக்குவேலையைக் கொன்றனன்கொன்றபின்
தரைக்குநாயகன் தம்பியையெய்தினன்.

(இ-ள்.) அரக்கன் அவ்வுரைகேட்டலும் - இராவணன் அந்த மொழியைக் கேட்டவுடன், அங்ஙனே - அவ்விடத் திருந்தபடியே, இரக்கமற்று இந்திரசித்தை ஏவினன் - இரக்கமில்லாமல் இந்திரசித்தைப் போர்க்கு அனுப்பினன்; குரக்கு வேலையை கொன்றனன் - (அவ்விந்திரஜித்து) வானரசேனையாகிய கடலை அழித்தான்; கொன்றபின் - அழித்தபின்பு, தரைக்கு நாயகன் தம்பியை எய்தினன் - பூமிக்கு நாயகனுடைய இராமனுடைய தம்பி இலக்குவனைக் கிட்டினன்.

இராவணன், அதிகாயன் முதலியவர்கள் இறந்த செய்தியை க்கேட்டுச் சிறிதுநேரம் துக்கப்பட்டு, அதைநீக்கி உடனே இந் திரசித்தைப் போர்க்கு அனுப்ப, அவன் வானரர்களைக் கொ ன்றுவிட்டு, லக்ஷ்மணனை எதிர்த்து வந்தான். அங்ஙனே— இருந்தவிடம்விட்டு எழுந்திராமல் உடனே என்றுகருத்து. இர க்கமற்று—இத்தனை புத்திரர்கள் இறந்தார்கள் என்கிறதுக்கம் இல்லாமல் மறுபடியும் இந்திரஜித்தையும் போர்க்கு அனுப்பிய தென்றபடி. வானரங்களுக்கு அளவில்லையாதலால் வேலை என் றார். அங்ஙனம்—கடைகுறைந்து, அங்ஙன் என்றாகியது. ஏ – பிரிநிலை. (எஙு)

ஏரழுங்கவிலக்குவன் மேனிமேல்
கூரழுந்தநெடுஞ்சரங் கூட்டினன்
தேரழிந்துதசமுகன் றன்மகன்
போரழிந்து விசும்பிடைப் போயினன்.

(இ-ள்.) ஏர் அழுங்க - அழகுகெட, இலக்குவன் மேனிமே ல் - இலக்ஷ்மணனுடைய திருமேனியில், கூர்அழுந்த நெடுஞ்ச ரம் கூட்டினன் - நுனிகள் நன்றாய்ப்பதியும்படி நீண்டகணை களை யெய்தான்; தசமுகன்தன்மகன்-இராவணன்குமாரனாகிய இந்திரசித்து, தேர்அழிந்து போர்அழிந்து - இரதம் சிதைந்து போர்செய்யும் வலிகெட்டு, விசும்பிடை போயினன் - ஆகா யத்தில்(மறைந்து) சென்றான்.

இந்திரசித்து லக்ஷ்மணனை எதிர்த்துப் பல கணைகளை அவன் திருமேனியில் எய்து துளைக்க, இளையபெருமாள்விட்ட கணை களால் தேர்முதலியவை அழிந்து, அதனால் எதிர்நின்று சண் டைசெய்யமாட்டாமல் ஆகாயத்தில் மாயையால் மறைந்து போய்விட்டான்.

ஏர் அழுங்க என்பதனால் கணைகள் அளவில்லாமல் துளைத்த தனால் திருமேனி யழகுகெட்டது என்பதும், மேல் என்பத னால் உள்ளே உருவ வலியில்லை என்பதும், கூரழுந்த என்பத னால் உள்ளே புகமாட்டாமையு மன்றித் திருமேனியின் வன்

மையால் கூரும் மழுங்கிப் பிதிர்தன் என்பதும், நெடுஞ்சரம் என்பதனுல் பெருமையுள்ள தேவாஸ்திரங்கள் என்பதும் பெறப்பட்டன.

அழுங்க—கரியப்பொருட்டாய் வந்த செயவெனெச்சம்.

இடந்தரு மிராகவற் கிளவலிக்கவித்
தடம்புனையெழுபது வெள்ளத்தானையை
அடங்கலுமரக்கன்மா மதலையல்லிடை
விடந்தருநாகபாசத்தின் வீக்கினன்.

(இ - ள்.) இடம் தரும் இராகவற்கு இளவலை - யாவர்க்கும் அடைக்கலம் கொடுக்கும் இராமனுக்குத் தம்பியாகிய இலக்குவனையும், கவித்தடம்புனை எழுபது வெள்ளத்தானையை - வானரங்களுடைய விசாலங்கொண்ட எழுபதுவெள்ளம் தொகையுள்ள சேனையையும், அடங்கலும் - முழுமையும், அரக்கன் மாமதலை - இராவணனுடைய பெருமையுள்ள புத்திரனுகியமேகநாதன், அல்லிடை - இருளில், விடம் தரு நாகபாசத்தின் வீக்கினன் - விடம் கக்குகின்ற நாகபாசத்தினுல் கட்டினன்.

இந்திரசித்து மாயையினுல் இருளில் நாகபாசங்களைப் பிரயோகித்து இலக்ஷ்மணனையு வானரசேனைகளையும் அறிவுஞ் செயலும் அற்றுப்போம்படிக் கட்டிவிட்டான்.

இளவலை, தானையை, - பெயர்ச்செவ்வெண்; விகாரத்தால் தொகை பெறவில்லை. அடங்கல்—எல்லாம் அடங்குதலாய் முழுமைக்கு ஆயிற்று; தொழிலாகுபெயர். உம் - முற்றும்பொருளது. விடம்தரு என்பதனுல் கட்டுப்பட்டவர்களைக் கொல்லும் என்றதாயிற்று; நாகபாசம்—மந்திரபலத்தால் அக்கணைகள் நாகங்களாகிய கயிறுகளாயின. வீக்கினன்-வீக்கு - பகுதி.

போயினனரக்கனும் புரண்டுவானரர்
கூயினரிராகவற் கிளவல்கூறினன்
மேயினன்வருந்தினன் விகங்கராசனும்
பாயினனுயிர்களைப் பண்டுபோலவே.

(இ-ள்.) அரக்கனும் போயினன் - இந்திரசித்தும் யுத்தகளம் விட்டுச் சென்றான் ; வானரர் புரண்டு கூயினர் - குரங்குகள் புரண்டுகொண்டு கூவின ; இராகவற்கு அநலன் கூறினன்- இராமனுக்கு இதை அநலன் என்பவன்சொன்னான்; மேயினன் வருந்தினன் - (இலக்குவன்) சமீபத்தில் வந்து மிகவும் துக்கித்தான்; விகங்கராசனும் - பறவைக்கரசாகிய கருடனும், உயிர்க ளைப் பண்டுபோல பாயினன் - மூர்ச்சித்த பிராணிகள் எல்லாரையும் முன்போல் ஆக்கும்படி மேலே பரவி வட்டமிட்டான்.

இந்திரசித்து யுத்தகளம் விட்டுப் போன உடனே, வானரர்கள் எல்லாரும் நாகபாசத்தினால் கட்டுண்ட வருத்தத்தினால் எழுந்திருக்கமாட்டாமற் புரண்டுகொண்டு கூவினர்; விபீஷண மந்திரிகளில் ஒருவனாகிய அநலன் இராமனுக்கு இலக்குவனும் வானரங்களும் இந்திரசித்து விட்ட நாகபாசத்தினால் கட்டுண்டு மூர்ச்சித்துக் கிடப்பதைச் சொல்ல, இராமன் இட்ட வந்து பார்த்து மிகவும் துக்கப்பட, கருடன் வந்து மேலே பறந்து, அவர்கள் மூர்ச்சைதெளிந்து முன்போல்ஆகும்படி செய்தான்.

அநலன் அரக்கனுகையால் அம்மாயை அறிந்து தான் கட்டுப்படாமல் இராமபிரானிடத்தில் விண்ணப்பஞ் செய்தனன். விகங்கம்—வடமொழி, ஆகாயத்தில் செல்வது என்பது பொருள். பாயினன்—பாய்-பகுதி, அன்-விகுதி, இன்-இடைநிலை, யகரவீறு பெரும்பாலும் இன் இடைநிலை பெறுவதில்லை யாதலால், பா - பகுதி எனக் கொள்வதே நலம். போல—போல் என்னும் இடைச்சொல் லடியாகப் பிறந்த செயவெனெச்சம்; போல் விக்க என்பது, இவ்வாறுய் வந்தது. பிறவினையில் தன் வினை வந்தமையால் மரபு வழுவமைதி. (எசு)

சென்றதூதுவர்சொலத் தசமுகத்தவன்
தன்றருபெரும்படைத் தலைவர்கூயினன்
நின்றிலர்சென்றனர் நிசிசரர்களைக்
கொன்றனர்வானரத் தலைவர்குன்றினால்.

(இ-ள்.) சென்ற தூதுவர்சொல (இலங்கைக்குப்) போன தூதர்கள் (இராமன்சேனை பிழைத்தசெய்தி) சொல்ல, தசமுகத்தவன்-இராவணன், தன்-தன்னுடைய, தரு-(ளோர்க்கு) அழைத்துவந்த, பெரும்படைத்தலைவர் - பெரியசேனாதிபதிகளை, கூயினன் - அழைத்து ஏவினன்; நின்றிலர் சென்றனர்-நிற்காமல் உடனேசென்ற, நிசிசரர்களை - அரக்கர்களை, வானரத்தலைவர் குன்றினால் கொன்றனர்- குரங்குத் தலைவர்கள் மலைகள் கொண்டு எறிந்து கொன்றார்கள்.

தரு—என்பதனால் யுத்தத்துக்காகப் பலவிடங்களிலு மிருந்து அரக்கர் சேனைகளை அழைத்து வந்தமை தோன்றுகிறது. நின்றிலர்—உடன்பாட்டு எதிர்மறை வினைமுற்று வினை எச்சமாய்வந்தது சென்றனர்—இறந்தகால வினையாலணையும்பெயர். சென்றனர் நிசிசரர்—சென்றனராகிய நிசிசரர், இருபெயரொட்டுப் பண்புத்தொகை. நிசிசரர்—வடமொழி; இரவில் திரிபவர் என்பது பொருள். (எ)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

வே று.

உரைப்பது கேட்டுமைந்தர்க் குரைத்தலு மரக்கர் கோமான், கரன்மகன் மகரக்கண்ணன் சென்றனன் காற்றி னம்பும், வருணன் தம்புங்கூட்டி மாயையால் விட்டான் மாயன், பொருசர மொன்றுற் சென்னீ போக்கினன் மாயையோடும்.

(இ-ள்.) அரக்கர்கோமான்- இராக்கதர்க்குத் தலைவனாகிய இராவணன், உரைப்பதுகேட்டு மைந்தர்க்கு உரைத்தலும்- (தூதர்) சொன்னதுகேட்டுத் தன் மக்களுக்குச் சொன்னவுடன், கரன் மகன் மகரக்கண்ணன் சென்றனன்-கரன் புத்திரனாகிய மகராக்ஷசன்என்பவன் போர்க்குச்சென்று, காற்றின்அம்பும் வருணனதுஅம்புங்கூட்டி மாயையால் விட்டான்-வாயுஅஸ்திரமும் வருணன்அஸ்திரமும் மாயையினால்சேர்த்துவிட்டான்; மாயன் - ஆச்சரிய சரிதமுடைய இராமன், பொருசரம் ஒன்

ரூல் - தாக்கவல்லதோர் கணையினால், மாயையோடும் சென்னி போக்கினன் - அவன் செய்திருந்த மாயத்தையும் அவன் தலையையும் நீக்கிவிட்டான்.

அதர்கள் இராமன்சேனை பிழைத்து அரக்கர் சேனைகளைக் கொன்றதைக் கூற, இராவணன் கேட்டு புத்திரர்களைப் பார்த்து போர்க்குச் செல்லுக என்று சொன்னவுடன், கரன் என்பவன் மகனுகிய மகரக்கண்ண னென்பவன் யுத்தத்துக்குப் போய் இராமனை எதிர்த்து வாயுவஸ்திரமும் வருணஸ்திரமும் திசைமுதலான தொன்றும் தோன்ரு திருக்கும்படியான மாயையேறடி எய்ய, ஒரேகணையால் அவனுடைய மாயையும் போக்கி தலையையும் அறுத்துத் தள்ளினன்.

மகரக்கண்ணன்—சுற்றிலும் போலும் கண்ணுள்ளவன். மாய்ன்=திருமால், மூலப்பகுதியைத் தன்வசத்தில் வைத்திருப்பவன்; ஆச்சரிய சரித்திரமுள்ளவன். அவர் அவதாரமான இராமனுக்கு வந்தது. பெர்ருசரம்—வினைத்தொகை. பேரக்கினன்—பிறவினை. (எஅ)

இற்றன ரரக்கர்தானை யிருப்பது வெள்ளத்தோடும், செற்றவா ளரக்கன்கேட்டான் மைந்தனைச் சேறி யென்ரூன், மற்றவன் றேரிலேறி வானரப் படையைச்சீறி, ஏற்றுவனினியென் றெண்ணி யிலக்குவன் றன்னேடேற்ரூன்.

(இ-ள்.) தானை இருபதுவெள்ளத்தோடும் அரக்கர் இற்றனர் - இருபதுவெள்ளஞ் சேனையோடு அரக்கர் இறந்தார்கள்; செற்ற வாள் அரக்கன் கேட்டான்-கோபமுள்ள இராவணன் (அச்செய்தி) கேட்டு, மைந்தனைச்சேறி என்ரூன் - பிள்ளையாகிய இந்திரசித்தைப் (போர்க்குச்) செல் என்று சொன்னூன்; மற்று அவன் தேரிலேறி - அந்த இந்திரசித்து தேர்மேல்ஏறிக் கொண்டு சென்று, வானரப்படையை சீறி - குரக்குச்சேனையைக் கோபித்து, ஏற்றுவன் இனி என்று எண்ணி-இனிமோது

வேன் என்று நினைத்து, இலக்குவன்றன்னோடுஏற்றான்-இலக்ஷ்மணனோடு (போர்) ஏற்றுக்கொண்டான்.

இருபதுவெள்ளம் சேனையும் தலைவர்களும் இறந்தசெய்தி சொல்லக்கேட்டு, இராவணன் இந்திரசித்தை யுத்தத்துக்குப் போகச்சொல்ல, அவன் தேர்மேற்சென்று,வானரசேனையைக் கோபித்துப் பின்புகொல்லுவோமென்று நினைத்துத் திரும்பி ஊடனே இலக்ஷ்மணனோடு எதிர்த்தான்.

அரக்கர்—சேனைகளின்தலைவர். தானை இருபதுவெள்ளம்—பண்புத்தொகை, தானையினுடைய இருபதுவெள்ளத்தொகை என ஆறும் வேற்றுமைத்தொகையாகவும் கொள்ளலாம்.அதாவது திரள். செற்றம்—செறு என்னும் பகுதியிற் பிறந்ததொழிற்பெயர். சேறி - செல் என்னும் பகுதியிற்பிறந்த ஏவல்வினை ; செல் -பகுதி, இ-விகுதி, றகரம் - எழுத்துப்பேறு. றி—விகுதி, எனினும் பொருந்தும். லகரம்கெட்டது, பகுதி முதல் நீண்டது. மற்று—அசைநிலை. இனி—இடைச்சொல், மைந்தன்—பண்படியாகப்பிறந்த பெயர். மைந்து—இளமை. (எஉ)

அறுபது வெள்ளத்தானை யாயிரந் தேரினோடும், அறையொரு செய்பக்கண்டே யயன்படை விடுவ னென்று, முறுவலி யரக்கன்வானத் தொழிந்தன னோர்ன்றம்பி, எறிபடை பூசைசெய்வா னெழுந்த னனிராமனிப்பால்.

(இ-ள்.) அறுபதுவெள்ளத்தானை ஆயிரந்தேரினோடும்-அறுபதுவெள்ளம் சேனையும் ஆயிரம் தேரையும்,அறைபொருசெய்யக்கண்டு - மோதுகின்றயுத்தத்தைச் செய்யப்பார்த்து,அயன்படைவிடுவனென்று-பிரமாஸ்திரத்தை விடுவேன் என்றுசொல்லி, உறுவலியரக்கன் வானத்தொழிந்தனன் - மிக்க பலமுடைய ராக்ஷதனாகிய இந்திரசித்து ஆகாயத்தில் நீங்கிப்போனான் ; தம்பி ஓரான் - இளையபெருமாள் அது அறியான்;இப்பால் இராமன் - இப்புறத்தில் இராகவனும், எறிபடை பூசை

செய்வான் - வீசுகின்ற ஆயுதத்துக்குப் பூசை செய்யும் பொரு
டு, எழுந்தனன் - எழுந்துபோனான்.

இலக்ஷ்மணன் அறுபதுவெள்ளம் அரக்கர்சேனையையும் தே
ர்களையும் அழிக்க, இந்திரசித்து பார்த்து வேறு வகையில் வெ
ல்லமுடியாது, மறைந்து பிரமாஸ்திரம் பிரயோகித்தே வெல்
லவேண்டுமென்று வானத்தில் மறைந்தான். இதை இளையபெ
ருமாள் அறிந்துகொள்ளவில்லை. இத்தருணத்தில் ஆயுதங்களு
க்குப் பூசைசெய்ய இராமன் தன்பாடிவீடு சென்றான்.

பொரு—முதனிலைத் தொழிற்பெயர். ஓர்ான்—எதிர்மறை
வினைமுற்று; ஓர் - பகுதி, ஆன் - விகுதி, ஆ - எதிர்மறைவிகுதி
கெட்டது. செய்வான்—வான் - விகுதிபெற்ற எதிர்கால வினை
யெச்சம். இப்பால்—இடைச் சொற்றொடர். பால்=இடம்,
ஏழாம்வேற்றுமைத்தொகை. உம்-அசை. இராமன் படைக்குப்
பூசைசெய்தது இதுபோலும் சில கதைகளும் வான்மீகத்தில்
இல்லை. (அ0)

உரைத்தன னிராவணி யிராவணற் குற்றவாறெல்
லாம், வளைப்புய மகோதரன் வருகவென் றேவினன்
வலத்தால், குரைத்தெழு வானரக் குழுவை வென்
றிலக்குவன் சரத்தால், பொருக்கெனத் தேரழிந்தங்
தர விசும்பிடை போனான்.

(இ-ள்.) இராவணி - இந்திரசித்து, இராவணற்கு உற்றவா
றெல்லாம் உரைத்தனன்-தசமுகனுக்கு (யுத்தத்தில்) நேரிட்ட
விதம் எல்லாம் சொன்னான்; வளைப்புய மகோதரன்-மலைபோ
ன்ற தோள்களையுடைய மகோதரனை, வருகவென் றேவினன்—
வருக என்று அழைத்து யுத்தத்துக்கு அனுப்பினான்; குரைத்
தெழு வானரக்குழுவை-கர்ச்சித்துச் சண்டைக்குழுகின்ற வா
னரக் கூட்டத்தை, வலத்தால் வென்று - (அவன்) வலியினற்
சயித்து, இலக்குவன் சரத்தால்-இலக்ஷ்மணன்கணையால்; பொ
ருக்கெனத் தேர் அழிந்து - விரைவில் தேர்கெட்டு, அந்தரவிசு
ம்பிடைபோனான் - நிராதாரமான ஆகாயத்தில் சென்றான்.

இந்திரசித்துத் தான் யுத்தகளத்தில் பட்டவெல்லாம் தகப்பனுக்குச்சொல்ல, அவன் மகேந்திரனை அனுப்ப, அவன் வானரங்களை வருத்தாநிற்ப, இலக்ஷ்மணன் பிரயோகித்த அம்பினால் தேர் சிதைந்து ஆகாயத்தில் போய்விட்டான்.

இராவணி—இராவணனுடைய மகன்; இவனுக்கு இந்திரனை ஜயித்தமையால் இந்திரசித்து என்றும், மேகம்போல் உரத்த சுரலுடையனுதலால் மேகநாதன் என்றும் பெயர் வழங்கும். பொருக்கு—விசைக் குறிப்பு இடைச்சொல். (அக)

முட்டினர்பின்னரே முனிவரு மமரருமாதிச், சிட்
டரு மெனைக்கொலு மென்றுளக் திகைத்தனர் நின்றூர், விட்டன னயன்படை யிராவணி யிலக்குவன்
மீதே, பட்டனன் பட்டவா றிராவணற் குவகையிற் பகர்ந்தான்.

(இ - ள்.) பின்னர் - பின்பு, முனிவரும் அமரரும் ஆதிச்சிட்டரும் - முனிவர்களும் தேவர்களும் முதன்மையான பெரியவரும், முட்டினர் - நெருங்கினவராகி, எனைக் கொலும் என்று உளம் திகைத்தனர் நின்றூர் - இந்த அஸ்திரம் என்னைக் கொல்லும் என்னைக்கொல்லும் என்று மனம் மயங்கி அசைவற்று நின்றுவிட்டார்கள்; இராவணி இலக்குவன்மீதே அயன் படைவிட்டனன் - இந்திரசித்து இலக்ஷ்மணன்மேல் அந்தப் பிரமாஸ்திரத்தைத் தொடுத்துவிட்டான்; பட்டனன் - (அவ்விலக்குவன் மூர்ச்சித்து) விழுந்தான்; பட்டவாறு இராவணற்கு உவகையில் பகர்ந்தான் - விழுந்த வரலாற்றை இராவணனுக்குச் சந்தோஷத்துடன் சொன்னான்.

இந்த அஸ்திரம் தொடுக்குங்கால் முனிவர் முதலானோர் இது நம்மைக்கொல்லும் நம்மைக் கொல்லுமென்று தனித்தனியே சொல்லிக்கொண்டு பிரமித்து நிற்க, அந்த பிரமாஸ்திரத்தை இந்திரசித்து இலட்சுமணன்மேல் பிரயோகித்தான், அதனால் இலக்குவன் மூர்ச்சித்து மரணமடைந்தவன்போற் கிடக்க, இச்செய்தியை யெல்லாம் சந்தோஷத்தோடு இராவணனுக்குச் சொன்னார்கள்.

தொலும்—செய்யும் என்னும் வர்ப்பாட்டுவினைமுற்று, ஆண் பாலுக்கு வந்தது. [வினை - சூ - உசு.] உளம் என்னும் அஃறி ணைப்பெயர் திகைத்தனர் என்னும் உயர்திணையோடுமுடிந்த தி- திணைவழுவமைதி [பொது - சூ-உசு.] உளம் சினையெனக்கொ ளில் [வினை இ-சூ-உசு.] மீது—என்னும் பகுதிப்பொருள்விகுதி பெற்ற பெயர்ச்சொல்; ஏழாம் வேற்றுமைத்தொகை. (அஉ)

ஏய்ந்தெழிலிராகவ னிலக்குவன் பூடுகண்டே ஞ்சிச், சாய்ந்தனன் சாம்பனு மாருதிதருதியா லென்னு ப், பாய்ந்தன னமரிடை மருந்தொடு மயனுடைப்ப டையால், ஓய்ந்தயாவிரு முயிர்பெற்றனர் தூதர்போ யுரைத்தார்,

(இ - ள்.) ஏந்தெழில் இராகவன் - ஏந்தும்படியான (மிக்க அழகுள்ள) அழ்குள்ள இராமன், இலக்குவன் பூடுகண்டு ஏங் கிச் சாய்ந்தனன் - இலக்ஷ்மணன் பட்டதைக்கண்டு துக்கித்து விழுந்தான்; சாம்பனும் மாருதி தருதி என்ன - சாம்பவனும் "அநுமானே! சஞ்சீவி கொண்டுவந்து கொடு" என்றுசொல் ல, பாய்ந்தனன் அமரிடை மருந்தொடும் - யுத்தகளத்தில் சஞ் சீவியோடும்வந்து குதித்தனன்; அயனுடைப்படையால் ஓய்ந்த யாவரும்-பிரமாஸ்திரத்தினால் மூர்ச்சித்தயாவரும், உயிர்பெற் றனர் - பிழைத்தார்கள்; தூதர்போய் உரைத்தார் - (இச்செ ய்தியைத்) தூதர்போய் (இராவணனுக்குச்) சொன்னார்கள்.

இராமன் இலக்ஷ்மணன் விழுந்ததைக்கண்டு துக்கித்து விழு ந்தான்; உடனே சாம்பவான் அநுமானைப்பார்த்துச் சஞ்சீவி யைக் கொண்டுவாவென்று சொல்ல, உடனே அநுமான்போய் சஞ்சீவியைக் கொண்டுவந்தனன், பிரமாஸ்திரத்தினால் மூர்ச் சித்தவர்கள் எல்லாரும் பிழைத்தார்கள். இச்செய்தியை தூத வர்போய் இராவணனுக்குச் சொன்னார்கள்.

ஏய்ந்து—எதுகைத்தொடை யழகுநோக்கி யகரம் விரித்தல் விகாரம் பெற்றது. மாருதி—அண்மைவிளிவேற்றுமை. அர சருக்குத்தெரியாமல் இரகசியமாய் அழைத்தபடியால் அண்

மைவிளி. இயல்பே விளியுருபு [பெயர் - சூ-டுசு.] ஆல்-அசை நிலை. யாவரும்—முற்றும்மை. மருந்தொடு என்பது கூட்டாவிடின் சீர் குறையும். (அசு)

யாவதிங்குநாஞ் செய்வதென் றியம்பலுமைந்தன், ஆவதுண்டென வரக்கனு மதுசெயென் றனுப்பினான்; தேவிசீதையாச் சமைத்தபி னதுமன்முன் சிதைத்துப், போயயோத்தி சேர்குவலென நிகும்பிலை புக்கான்.

(இ - ள்.) இங்கு நாம்செய்வது யாவது என்றுஇயம்பலும்- இப்போது நாம் செய்யத்தக்கது எதுவென்று (இராவணன்) வினவினவுடன், மைந்தன் ஆவது உண்டென - புத்திரனுகிய இந்திரசித்து செய்யவேண்டுவது உண்டு என்றுசொல்ல, அரக்கனும் அது செய் என்று அடைந்தான் - இராவணனும்அதைச்செய் என்றுசொல்லிவிட்டுத் தன் இடம் சேர்ந்தான்; தேவி சீதையாச் சமைந்தபின்-(மாயையினால்) சீதாதேவியைப்போல ஓர் உருவம் உண்டாக்கிய பின்பு, அநுமன்முன்சிதைத்து-பின் அநுமானுக்கு எதிரில் வெட்டிவிட்டு, போய் அயோத்தி சேர்குவலென - அயோத்திபோய்ச் சேருவேன் என்றுசொல்லிவிட்டு, நிகும்பிலை புக்கான் - நிகும்பிலையென்னும்இடத்துக்குப் பிரவேசித்தான்.

பிரம்மாஸ்திரத்தினால் விழுந்த யாவரும் பிழைத்தசெய்தியை இராவணனுக்குச் சொல்ல, அவன் இனிச்செய்யவேண்டுவதென்னென்றுவினவ, இந்திரசித்து செய்யவேண்டியகாரியம் உளதென்று சொல்லிவிட்டு,மாயையால் ஓர்சீதையைஉண்டாக்கி அநுமானுக்கு எதிரில் வெட்டிவிட்டு, அயோத்திக்குச்சென்று பரதன்முதலானவரையும்கொல்லுவேனென்றுசொல்லத் தெரியாமல் நிகும்பிலை என்னுமிடத்துக்குயாகம்செய்யப்போனான்.

யாவது—வினாவடியாகப் பிறந்தபெயர். செய்வது—செயப்பாட்டுவினையிற் செய்வினை வந்தது [பொது-சூ-சுசு], ஆக

என்பது கடைகுறைந்து, ஆ என்றுரிய செயவெனெச்சம். சேர்குவல்—தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று. சேர்-பகுதி, அல் - தன்மை யொருமைவிகுதி; கு-சாரியை, வ்-எதிர்கால இடைநிலை. நிகும்பிலை—இலங்கையின் மயானம். ()

ஆயவாறெலாமதுமன்வந் திராகவற்கறைந்தான்
மாயையாமெனவலிக்கின்ற தறிந்தனன்வந்தான்
ஏயகாரியஞ்செய்திரென் றெழுந்தனனிப்பாற்
பேர்யெர்மாயையால்வீ டணனிலங்கையிற்புக்கான்.

(இ-ள்.) ஆயவாறு எலாம்-ஆன்விதங்கள் எல்லாவற்றையும், அநுமன் வந்து - அநுமான் வந்து, இராகவற்கு அறைந்தான் - இராமனுக்குச் சொன்னான்; மாயை ஆம் என - மாயையாயிருக்கும் என்று, வலிக்கின்றது அறிந்தனன் - நிச்சயிப்பதை அறிந்தவனுகிய, வீடணன் வந்தான் - விபீஷணன் வந்து, ஏயகாரியம் செய்திர் என்று - தக்ககாரியம் செய்தீர்கள் என்று சொல்லிவிட்டு, எழுந்தனன் - எழுந்து, இப்பால்போய் - இப்புறஞ் சென்று, ஓர் மாயையால் - ஒரு மாயையினால், இலங்கையில் புக்கான் - இலங்கையிற் பிரவேசித்தான்.

இந்திரசித்து சீதையைத் தன்னெதிரில் வெட்டிப்போட்டு அயோத்திக்குப் போகிறேன் என்று போனதைத் தான்கண்ட வண்ணமாய் இராமனிடத்தில் அநுமான் சொல்ல, விபீஷணன் இதுமாயை, அஞ்சவேண்டாமென்று சொல்லி, ஓர் மாயையால்-இலங்கைக்குப்போய் அங்குள்ள உண்மையை அறிந்தான்.

ஆய—இறந்த காலப்பெயரெச்சம், ஆ - பகுதி; அ - பெயர் எச்ச விகுதி, ய் - இறந்தகால இடைநிலை. வலிக்கின்றது—நிகழ்கால இடைநிலை பெற்ற தொழிற்பெயர். ஏய—ஏய் - பகுதி அ-பெய்ரெச்ச விகுதி, இறந்தகால இடைநிலை யகரம் கெட்டது; ஏயகாரியஞ் செய்திரென்பது தக்ககாரியஞ் செய்யுவில்லை என்னும் எதிர்மறையை உடன் பாட்டாகச் சொல்லியதோர் குறிப்பு. [பெயர் - கூ - கஉ.] (அநு)

ஆனமாயைகண்டறிந்துவந்தரக்கர்கோனுரைத்தான்
வானசேனையிளவலும் வடதருவீழல்
சேனைசூழ்தரநிகும்பிலை வேள்வியைச்சிதைத்தார்
போனபோதில்வந்திந்திரசித்தமர்புரிந்தான்,

(இ-ள்.) அரக்கர்கோன் - விபீஷணன், ஆனமாயை - நடந்தமாயையை, கண்டு அறிந்துவந்து உரைத்தான்-கண்டு அறிந்து வந்து இராமனுக்குச் சொன்னன்; வானசேனையும் இளவலும் - வானரத்தலைவனான அநுமானும் இளையபெருமாளும், வடதரு வீழல் - ஆலமரத்தின் நிழலில், சேனைசூழ்தர - சேனைகள் சூழ்ந்திருக்க, நிகும்பிலை வேள்வியை சிதைத்தார் - நிகும்பிலையில் (இந்திரசித்து செய்யும்) யாகத்தைக் கெடுத்தார்கள்; போன போதில் - இவர்கள் போனகாலத்தில், இந்திரசித்துவந்து அமர்புரிந்தான் - மேக்நாதன் வந்து போர்செய்தனன்.

அப்படி இந்திரசித்து செய்த மாயையை விபீஷணன் அறிந்து வந்து சொல்ல, உடனே அநுமானும் இளையபெருமாளும் சென்று, நிகும்பிலையில் ஆலமரத்தின்கீழ் இந்திரசித்து செய்து கொண்டிருந்த வேள்வியை அழிக்க, அவன் கோபத்தோடும் விசனத்தோடும் யுத்தத்துக்கு ஆரம்பித்தான்.

சேனை—வானரசேனை; அரக்கர்சேனையும் ஆம். வடதரு—ஆலமரம்—வடமொழி. (அசு)

கறுத்திராவணி விடுங்கணை களையெலாம் கணையால், அறுத்தொரம்பினுற் கையுடன்வில்வீழ வெய்தான், குறித்தொர் சூலத்தா லிலக்குவ னுயிர்கொள்வான் கொதித்தான், அறுத்தொரம்பினு லவன்றலை கொண்டன னகன்றான்.

(இ - ள்.) இராவணி - இந்திரசித்து, கறுத்துவிடும் கணைகளை எலாம்-கோபித்துவிடும் அம்புகளை எல்லாம், கணையால் அறுத்து-அம்பால் அறுத்துவிட்டு, ஓர் அம்பினுல் கையுடன் வில்வீழ னெய்தான் - (இலக்குவன்) ஒருகணையால் வில்லோடு அவன் கையும் விழும்படி யெய்தான்; குறித்து ஓர் சூலத்தால் இலக்

குவன் உயிர்கொள்வான் கொதித்தான் - குறித்து ஒரு சூலத்தினுல் இலக்ஷ்மணனுடைய உயிரைக் கவரக் கோபித்தான்; அவன் தலை - அவ்விந்திரசித்தின் தலையை, ஓர் அம்பினுல் அறுத்துக்கொண்டனன் அகன்றான் - ஒரு அம்பினுல் அறுத்து எடுத்துக்கொண்டு யுத்தகளத்தினின்றும் நீங்கினான் (இலக்ஷ்மணன்.)

இந்திரசித்து விடும் அம்புகளையெல்லாம் இலக்ஷ்மணன் அம்புகள்விட்டு அறுத்து, அவன் கையை வில்லோடு வீழ்த்தி, அவ்விந்திரசித்து தன்னை வதைசெய்யும்படி குறித்து ஓர் சூலத்தை விட அதையும் அறுத்துத்தள்ளி, அவன் தலையை அறுத்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். (அஎ)

அடித்துணைத்தனர் தூதுவ ரரக்கர்கோன்களம்புக்
கெடுத்திரங்கினன் மதலைதன்றலையிலாயாக்கை
படித்தனன்றயிலத்திடை மூலமாப்படையும்
விடித்துவந்தடி பணிந்தனராயிரவெள்ளம்.

(இ-ள்.) தூதுவர் அடித்து உரைத்தனர் - தூதர்கள் கிட்டிவந்து (இந்திரசித்து இறந்தசெய்தியைச்) சொன்னர்கள்; அரக்கர்கோன் களம் புக்கு - இராவணன் யுத்தகளம் பிரவேசித்து, எடுத்துஇரங்கினன்-உரக்கக்கதறிஅழுது, மதலை தன்தலையிலாயாக்கை - பிள்ளையினுடைய தலையில்லாத உடலை, தயிலத்து இடை படித்தன்ன - எண்ணெய்க் கொப்பரையில் இட்டான்; ஆயிரவெள்ளம் - ஆயிரவெள்ளம் கணக்குள்ள, மூலமாப்படையும்-பெரிய மூலபலத்துவீரரும், விடித்துவந்து அடிபணிந்தனர்-அனுப்பப்பட்டுவந்து (இராவணன்) பாதத்தைவணங்கினர்கள்.

இந்திரசித்து இறந்தசெய்திசொன்னவுடன்யுத்தகளத்துக்கு வந்து கதறிஅழுது, தலையில்லாத இந்திரசித்தின் உடலை எண்ணெயில் இட்டு, மூலபலத்துக்குக் கட்டளையிட, அவர்கள்வந்து பாதத்தில் வணங்கினர்கள். (அஅ)

மூலத்தானையை யிராமன்மேன் முடுக்கித்தான் குரக்குக், கூலத்தானைமேற் சென்றன னிராவணக்

கொடியோன், மூலத்தானேசென் றிராமன்மேன்மூடு கல்லுங் குரக்குக், கூலத்தானேபோ யிரிந்தன குரைகடற்கப்பால்.

(இ-ள்.) இராவண கொடியோன் - கொடியவனுகிய இராவணன், மூலத்தானையை இராமன்மேல் மூடுக்கி - மூலபலத்தை இராமன்மேற் செலுத்தி, தான் குரக்குக் கூலத்தானேமேல் சென்றனன் - தான் கடற்கரையிலிருக்கிற வானர சேனைமேல் யுத்தத்துக்குச் சென்றான்; மூலத்தானை சென்று இராமன்மேல் மூடுகலும் - மூலபலம்போய் இராகவன்மேல் விளைத்து எதிர்த்தவுடன், குரக்குக்கூலத்தானை போய் - கரையிலிருந்த வானரசேனை சென்று, குரைகடற்குஅப்பால் இரிந்தன-ஒலிக்கின்ற சமுத்திரத்துக்கு அப்புறத்தில் ஓடிப்போயின.

மூலபலத்தை இராமன்மேல் தூண்டிவிட்டுத் தான் வானர சேனையை எதிர்த்து வதைக்க, அவ்வானரசேனை எதிர்நிற்கமாட்டாமல் கடலுக்கு அப்பால் ஓடிப்போயின; அதாவது வெகு தூரத்தில் ஓடின்தென்றபடி. இந்திரசித்து இறந்தும் சிறிதும் இரக்கம் இல்லாமல் மூலபலத்தை ஏவலால், கொடியோன் என்றார்.

இரிந்தன—இரி-பகுதி. தானை—பால்பகா அஃறிணை. (அக)

வேர்த்திருந்தவக் கவியெலாமங்கதன் மீட்டான்
காத்திநீயெனத்தம்பியைக் காவலாய்விடுத்தான்
ஆர்த்தவெம்படை யாயிரவெள்ளமுமடையக்
கோத்தலம்பினு லேழுனாழிகைகுறைத்தான்.

(இ-ள்.) வேர்த்து இருந்த அக்கவியெலாம் - (பயத்தினால்) வேர்வை ஒழுக நின்ற அத்தக்குரங்குகளையெல்லாம், அங்கதன் மீட்டான் - வாலிகுமாரன் தைரியம்சொல்லித் திருப்பினன், காத்தி நீ என-நீ (சேனையைக்)காத்துக்கொண்டிரு என்று,தம்பியை காவலாய்விடுத்தான் - இலக்ஷ்மணனைக் காவலாகஅனுப்பி, ஆர்த்த வெம்படை ஆயிரவெள்ளமும் அடைய - ஆரவாரி

த்த கொடுமையுள்ள ஆயிரவெள்ளச்சேனை மூழுமையும், கோத்த அம்பினால் - வில்லில்கோத்த அம்பினால், ஏழாைநாழிகை குறைத்தான் - ஏழாை நாழிகைக்குள் அழித்துவிட்டான்.

ஓடிப்போன வானரசேனையைத் தைரியம்சொல்லி அங்கதன் திருப்பிவர இராமன் இலக்குவனை அதற்குக் காவலாகவைத் துவிட்டு, ஏழாை நாழிகைக்குள் ஆயிரவெள்ளஞ் சேனையையுங் கொன்றுவிட்டான்.

வேர்த்து — வேர்த்தல் அச்சத்தினால் ஆயது. கோத்த அம்பு—ஒருதரம் வில்லில் அம்புகோக்க அதினின்றும் ஓயாமல் அம்புகளெத்தமை தோன்றுகின்றது. ஏழாை — ஏழும் அன்யும் என உம்மைத்தொகை. நாழிகை — ஏழாம்வேற்றுமைத் தொகை. இராமபிரான் மோகனஸ்திரம் விட அதனால் அரக்கர் மயங்கி ஒருவரை யொருவர் இராமனென்றே நினைந்து அடித்துக்கொண்டு மடிந்தனர். (கூ0)

அத்தலைச்சிலையிளவலோ டரக்கர்கோனடர்த்தான்
வித்தவான்சரம் பலபலவிளவலும்விட்டான்
எத்தினனெடுமோகமாப் படைதொடுத்தெய்தான்
அத்தனச்சரமாழியான் சரத்தினாலறுத்தான்.

(இ-ள்.) *அத்தலை - அவ்விடத்தில், சிலை இளவலோடு - வில் லேத்தாங்கிய இலக்குவனோடு, அரக்கர்கோன் அடர்த்தான் - இராவணன் எதிர்த்தான்; வித்த வான் சரம் பல்பல-பிரசித்த மாகிய சிறந்த பலபல அம்புகளை, இளவலும் விட்டான் - இளையபெருமானும் எய்தான்; எத்தினன் நெடுமோகமாப் படைதொடுத்து எய்தான் - தந்திரமுடையனாகிய இராவணன் மிகுந்த பெருமையுள்ள மோகனஸ்திரத்தை வில்லில் தொடுத்து விட்டான்; அத்தன் - (சுவாமியாகிய) இலக்குவன், அச்சரம் ஆழியான் சரத்தினால் அறுத்தான் - அந்தக்கணையை நாராயணனுடைய அஸ்திரத்தினால் அறுத்துவிட்டான்.*

இராவணன் இலக்ஷ்மணனோடு எதிர்த்து அம்புகள் எய்ய, இளையபெருமானும் பலபல அம்புகள் விட்டான். இராவணன்

மோகனஸ்திரம்விட, அதை நாராயணஸ்திரத்தினால் இலக்குவன் அறுத்துவிட்டான்.

